# பாரதியும், பாரதிதாசனும்



டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

# பாரதியும் பாரதிதாசனும்

(தமிழக அரசின் முதற் பரிசு பெற்ற நூல்)

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

வெளியீடு :

நறுமலர்ப் பதிப்பகம்
சென்னை-29

முதற் பதிப்பு :
நவம்பர் 990
இரண்டாம்
பதிப்பு மார்ச்சு -1' 92

## ஆசிரியரின் பிற நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
காரும் தேரும்
மனோன்மணீயம் (பதிப்பு)
முருகன் காட்சி
வாழையடி வாழை
இலக்கிய அணிகள்
பெருந்தகை மு.வ.
இலக்கியக் காட்சிகள்
நல்லோர் நல்லுரை
நெஞ்சின் நினைவுகள்
மலர்காட்டும் வாழ்க்கை
சான்றோர் தமிழ்
சங்ககால மகளிர்
ஆண்டாள்
சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்
புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்
அறவோர் மு.வ.
கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர்
திருவெம்பாவை விளக்கம்
சங்க இலக்கியம்-சில பார்வைகள்
மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
வாழ்வியல் நெறிகள்
பாவைப் பாட்டு
Papers in Tamil Literature
The status of women in Tamil-nadu during the Sangam Age
A Study of the Literature of the Chera Country.

விலை : ரூ. 30-00
ரூபாய் முப்பது

விற்பனை உரிமை
பாரி நிலையம்
184 பிரகாசம் சாலை,
சென்னை-600108.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு
சென்னை-600 014.

# முன்னுரை

பதினைந்து கட்டுரைகள் கொண்ட இந்நூல், இந்த நூற்றாண்டின் இணையிலாத இருபெருங் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் குறித்த செய்திகளை நிரம்பக்கொண்டு திகழ்கின்றது. பாரதியின் தாசனாகப் பாரதிதாசன் மிளிர்ந்தார். பாரதியார் தேசியக் கவிஞராக—விடுதலைக் கவிஞராகத் திகழ்ந்தார். பாரதிதாசன் சமுதாயக் கவிஞராகத் துலங்கினார். முன்னவர் இறைவன் பற்றியும் நாட்டு விடுதலை பற்றியும் பாடினார். பாரதிதாசன் இயற்கை, பெண்மை, சமுதாயம் பற்றிப் பாடினார். இருவரும் இந் நூற்றாண்டின் இணையிலாக் கவிஞர்கள் ஆவர்.

இவ்விருவர்தம் பாட்டுத் திறம் இந் நூலில் நன்கு விளக்கப்படுகின்றது. இருபதாம் நூற்றாண்டில் நூற்றாண்டு விழாக் காணும் இவ்விருவர்தம் பாநலன்களைத் தமிழுலகம் நன்கு துய்த்து மகிழ்வதோடு பயனும் பெற்றுத் தமிழர் வாழ்விற் சிறக்கவேண்டும் என்னும் பெருநோக்கில் இந் நூல் உருவாக்கப்பெற்றுள்ளது. 'கூறியது கூறல்' குற்றம் சில விடங்களில் தென்படலாம், அவை கருத்தை வலியுறுத்தவே எனக் கொள்க.

இந் நூல் எழுதியதன் வாயிலாக—இருபெருங் கவிகளின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இவ்வேளையின் நான் பெருமகிழ்வெய்துகிறேன்.

—சீ. பா.

# பொருளடக்கம்


| கட்டுரை வ. எண் | | | ப.எண் |
|---|---|---|---|
| 1. | பாரதியும் பாரதிதாசனும் | ... | 5 |
| 2. | வள்ளுவர் வழியில் பாரதி | ... | 33 |
| 3. | தமிழ்மொழி தமிழ்நாடு பற்றிப் பாரதியார் | ... | 46 |
| 4. | 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' | ... | 59 |
| 5. | பாரதியாரின் தேசிய கீதங்கள் | ... | 70 |
| 6. | பாரதி கண்ட தேசிய ஒருமைப்பாடு | ... | 89 |
| 7. | பாரதியார் கண்ட சமுதாயம் | ... | 94 |
| 8. | பாரதியார்—ஒரு மக்கள் கவிஞர் | ... | 109 |
| 9. | பாரதியின் தொலைநோக்கு | ... | 133 |
| 10. | பாவேந்தர் பாரதிதாசனாரின் 'அழகின் சிரிப்பு' | ... | 149 |
| 11. | பாவேந்தர் பாரதிதாசனின் 'குடும்பவிளக்கு' | ... | 193 |
| 12. | 'குடும்ப விளக்கு' தரும் ஒளி—'தங்கம்' | ... | 215 |
| 13. | புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கண்ட இயற்கை | ... | 223 |
| 14. | புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கண்ட பெண்மை | ... | 230 |
| 15. | கவிஞர் மன்னர் மன்னனின் 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' —நூல் அறிமுகம் | ... | 237 |

# 1. பாரதியும் பாரதிதாசனும்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் கவிதைத் துறையில் குறிப்பிடத்தக்க இருவர் பாரதியும் பாரதிதாசனுமாவர். இவ்விருவரையும் தமிழ் இலக்கிய வானின் நிலவாகவும் கதிராகவும் ஒருவாறு கொள்ளலாம். எட்டயபுரத்தில் கி. பி. 1881ஆம் ஆண்டு பிறந்த பாரதியார், தம் கவிப்புலமை காரணமாகப் 'பாரதி' எனச் சிறுவயதிலேயே அழைக்கப் பெற்றார். பாரதிதாசனும் சின்னஞ்சிறு வயதிலேயே கவிபுனையும் பெற்றி மிக்க வராகத் துலங்கினார். 18 வயதிலேயே கற்றுப் புலமை பெற்று ஆசிரியப் பணியினை ஏற்றார். இவ்விருவரும் மூதன்முதலில் சந்தித்த இடம் பாண்டிச்சேரியில் ஒரு திருமண மண்டபத்திலாகும். வேணுநாயக்கர் வீட்டுத் திருமணத்தில் "வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்றும் கொள்வாரோ" என்ற பாரதியின் நாட்டுப் பற்றோங்கும் பாடலைப் பாரதிதாசனும் உணர்ச்சியுடன், இசையுடன் பாடினார். அத் திருமண மண்டபத்தில் பாரதியார் வந்திருப்பதனைப் பாரதிதாசன் அறியார். பாட்டு முடிந்ததும் வேணுநாயக்கர் பாரதியாரைச் சுட்டிக் காட்டி அன்றைய சுப்புரத்தினத்தைப் பார்த்து "இவர் யார் தெரியுமில்லே" என்று கேட்டார். "தெரியாது" என்ற மறுமொழி சுப்புரத்தினத்திடமிருந்து வந்தது. "நீங்க தமிழ் வாசிச்சிருக்கீங்களா" என்று கேட்க "ஏதோ கொஞ்சம்" என்று சுப்புரத்தினம் அடக்கத்துடன் மறு மொழி தர, "நீங்கள் என் பாட்டை உணர்ந்து பாடுகிறீர் கள்" என்ற பாராட்டைப் பின்னாளைய பாரதிதாசன் பெற்றார்."

எங்கெங்குக் காணினும் சக்தியடா! தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா! அங்குத்
தங்கும் வெளியினிற் கோடியண்டம்' —அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா!—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ:—எனில்
மங்கை நகைத்த ஒலியிலெலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!

காளை ஒருவன் கவிச்சுவையைக் கரை
காண நினைத்த முழுநினைப்பில்—அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறி வாளர் திறம்பெறுவான்: ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வைய முழுவதும் துண்டு செய்வேன்!—என
நீள இடையின்றி நீநினைத்தால் ஆம்—அம்மை
நேர்படு வாள் உன்றன் தோளினிலே!

என்ற கனகசுப்புரத்தினத்தின் பாடலைப் பாரதியார் "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது" என்னும் குறிப்புடன், சென்னை 'சுதேசமித்திரன்" பத்திரிகைக்கு அனுப்பப்பட்டுப் பிரசுரமானது. இப் பாடலே கனக சுப்புரத்தினத்தைத் தமிழ்க் கவிதை உலகிற்கு அறிமுகம் செய்துவைத்தது.

பாரதியார் தமிழ்மொழிமாட்டுப் பெரும் பற்றுக் கொண்டவர் என்பதனைக் கீழ்க்காணும் சான்றுகள் கொண்டு தெளியலாம்.

"இந்த நிமிஷத்தில் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி, வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நானறிவேன்,

போன நிமிஷம் தமிழ் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியம் இல்லை. நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால், என் பேரை மாற்றி அழையுங்கள்!"

ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்

என்று தமிழின் பழமையையும் பெருமையையும் குறிப்பிட்ட பாரதியார்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

என்றும்,

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

—தமிழ் : 4

என்றும்,

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

—பாப்பாப் பாட்டு : 1

என்றும், தம் தமிழ்மொழிப் பற்றினைப் புலப்படுத்தியுள்ளார்.

தமிழ்ப் பெருங்கவிஞர்பால் தண்டாத காதல் கொண்டவர் பாரதியார். கம்பர் வள்ளுவர் இளங்கோவைப் போலப் பூமியில் எங்கும் புலவர் இதுகாறும் பிறந்ததில்லை என்கிறார் கவிஞர்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.
—தமிழ் : 2

மேலும்,

'சிலப்பதி'காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்
'எல்லையொன் றின்மை' எனும்பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்பு நான்தமிழ்ச்
சாதியை அமரத் தன்மை வாய்ந்தது என்று
உறுதிகொண் டிருந்தேன் —தமிழ்ச்சாதி : 20-27

என்றும்,

'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
.....................
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்'
—சுயசரிதை : 24-25

என்றும்,

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு —செந்தமிழ் நாடு : 9

என்றும்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு, நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு"

—செந்தமிழ் நாடு : 7

என்றும் வரும் பாடல்களில் பாரதியார் தமிழ்க் கவிஞர் மூவரிபாலும் கொண்டிருந்த அளவிலா மதிப்புப் புலனாகின்றது.

இவைபோலவே அமைந்துள்ள பாரதிதாசனின் தமிழ்ப்பற்றினைக் காண்போம்.

தமிழுக்கும் அமுதென்று பேர்—அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்
தமிழுக்கு நிலவென்று பேர்—இன்பத்
தமிழ்எங்கள் சமூகத்தின் விளைவுக்குநீர்!
தமிழுக்கு மணமென்றுபேர்!—இன்பத்
தமிழ்எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர்!—இன்பத்
தமிழ்எங்கள் உரிமைச்செம் பயிருக்குவேர்!

—பாரதிதாசன் கவிதைகள்

தமிழர்பற்றுப் பின்வரும் பகுதியால் விளக்கமுறுகின்றது.

தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என்
தாய்தடுத் தாலும்விடேன்!
எமைநத்து வாயென எதிரிகள் கோடி
இட்டழைத் தாலும் தொடேன்!

—இசையமுது : தமிழன்

நாட்டுப் பற்று நலமுற விளக்கமுறும் பகுதி இதோ
எனைஈன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்!

—*பாண்டியன் பரிசு* : இயல் 55

செந்தமி ழே! உயிரே! நறுந் தேனே!
செயலினை மூச்சினை உனக்களித் தேனே!
நைந்தா யெனில்நைந்து போகுமென் வாழ்வு!
நன்னிலை உனக்கெனில் எனக்குத் தானே!

—*இசையமுது* 1 : தமிழ்

நன்று தமிழ்வளர்க! — தமிழ்
நாட்டினில் எங்கணும் பல்குக! பல்குக!
என்றும் தமிழ்வளர்க! — கலை
யாவும் தமிழ்மொழி யால்விளைந் தோங்குக!
இன்பம் எனப்படுதல் — தமிழ்
இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!

—*பாரதிதாசன் கவிதைகள்* : தமிழ் உணர்வு

என்றும் *தம் தண்டாத தமிழார்வ வெள்ளத்தினை,*

எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்;
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்;
வெளியுலகில், சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும்வேண்டும்
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்!

—*பாரதிதாசன் கவிதைகள்* : தமிழ் வளர்ச்சி

என்றும் புலப்படுத்தியுள்ளார்.

"எங்கள் வாழ்வும்" எனத் தொடங்கும் கீழ்க்காணும் பாட்டின் கருத்து இதுவரை எவரும் எண்ணிப் பார்த்திராத உயரிய கருத்தாகும், மொழி, இனம், நாடு ஆகியவற்றுக்கு அவர் உவமை காட்டுவது ஒரு புதிய இலக்கிய உத்தி எனலாம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!

திங்களோடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்ததமி
ழுடன் பிறந்தோம் நாங்கள்; ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்றுச் சிறியோர்க்கு
ஞாபகம்செய் முழங்கு சங்கே!
சிங்களஞ்சேர் தென்னாட்டு மக்கள்
தீராதி தீரரென் றூது சங்கே!

பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!
வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும்!
தோளெங்கள் வெற்றித் தோள்கள்!
கங்கையைப்போல காவிரிபோல் கருத்துக்கள்
ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்!
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய்
கின்றதமிழ் எங்கள் மூச்சாம்."

—பாரதிதாசன் கவிதைகள் : சங்க நாதம்

இரண்டாவதாக இருவர் தம் இயற்கைப் புனைவுத் திறத்தினை நோக்குதல் வேண்டும். இவ்விலக்கிய உத்தியில்

பாரதியாரை விஞ்சி நிற்கிறார் பாரதிதாசன். அவருடைய 'அழகின் சிரிப்பு' காலங்கடந்தும் வாழப்போகும் அரிய நூலாகும்.

பாரதியாரின் "காணி நிலம் வேண்டும்" என்னும் பாடல் ஆழ்ந்த கவியுள்ளத்தின் பிரதிபலிப்பாகும். அப் பாடலைக் காண்க.

காணி நிலம்வேண்டும் பராசக்தி
　　காணி நிலம்வேண்டும்;—அங்கு
தூணில் அழகியதாய்—நன்மாடங்கள்
　　துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
　　கட்டித் தரவேண்டும்;—அங்கு
கேணியருகினிலே—தென்னைமரம்
　　கீற்று மிளநீரும்

பத்துப் பன்னிரெண்டு—தென்னைமரம்
　　பக்கத்திலே வேணும்;—நல்ல
முத்துச் சுடர்போல நிலாவொளி
　　முன்பு வரவேண்டும்;—என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
　　தென்றல் வரவேணும்;
பாட்டுக் கலந்திடவே—அங்கேயொரு
　　பத்தினிப் பெண்வேணும்—எங்கள்

கூட்டுக் களியினிலே—கவிதைகள்
　　கொண்டு தரவேணும்:—அந்தக்
காட்டு வெளியினிலே;—அம்மா; நின்றன்
　　காவலுற வேணும்!—என்றன்
பாட்டு திறத்தாலே இவ்வையத்தைப்
　　பாலித்திட வேணும்.

பாரதிதாசன் அழகினை எங்கெங்கெல்லாம் காண்கின்றார் என்பதற்கு "அழகின் சிரிப்பு" என்னும் நூலில் அமைந்துள்ள பின்வரும் பாடல்கள் சான்றுகளாகும்.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே மலர்களிலே: தளிர்கள் தம்மில்,
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப்பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்
சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கிற் சிரிக்கின்றாள்; நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்

—அழகின் சிரிப்பு : 1, 2

மேலும் பாரதிதாசனின் கீழ்க்காணும் கவிதைகளையும் கருத்திற் கொள்ளவேண்டும்.

முழுமைநிலா! அழகுநிலா!
முளைத்தது விண்மேலே!—அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போல!
.......................
குருட்டு விழியுந் திறந்ததுபோல்
இருட்டில் வான விளக்கு—

—இசையமுது : நிலவு

சொக்க வெள்ளித் தட்டு —மிகத்
தூய வெண்ணெய்ப் பிட்டு
தெற்கத்தியார் சுட்டு – நல்ல
தேங்காய்ப் பாலும் விட்டு
வைக்கச் சொன்ன தோசை—அது
வயிர வட்ட மேசை;
பக்கமீன்கள் பலவே – ஒரு
பட்டத் தரசு நிலவே.

—இளைஞர் இலக்கியம் : நிலா

நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுக த்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ! அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதி கடலில் மூழ்கிக்
கானல்மாறிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ!
அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்;
அவ்வாறே வான்கண்டேன்; திசைகள் கண்டேன்:
பிந்திய யந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்!
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாஎன்றே இயற்கை அன்னை வானில்
எழில் வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ!
உனைக்கா ணும் போதினிலே என்னுள்ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்

திணைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே! உனைக்காணும் இன்பந் தானோ!

—பாரதிதாசன் கவிதைகள் : புரட்சிக்கவி

குயில்கூவிக் கொண்டிருக்கும், கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுகள் உண்டு; கனிமரங்கள் மிக உண்டு;
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தோறும் சென்றுதேன்
ஈக்கள் இருந்தபடி இன்னிசைபாடிக் களிக்கும்;
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு;
காட்டு மறவர்களும் காதல் மணம் செய்துவண்டு;
நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்என்று சொல்லிடுவார்.

இப் பாடலின் இறுதிப் பகுதியினைப் படிக்குங்காலை இக்கால இயற்கையிலும் மனித நேயத்தைக் கண்ட பாரதிதாசனின் புரட்சியுள்ளத்தைக் காண்கிறோம். பாரதியாரோவெனில் உலகம் அனைத்தையும் ஒரு குடும்பமாகப் பார்க்கும் ஆன்மநேய ஒருமைப் பாட்டுணர்வினை,

காக்கை குருவி எங்கள் சாதிநீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாட்டிற் காணலாம். மேலும் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா" பாட்டும் ஓர் ஆழ்ந்த மெய்ப் பொருளை உணர்த்தி நிற்கக் காணலாம்.

இனி, காதல் குறித்த கருத்து யாதென்று இரு கவிஞர் தம் வாக்கு கொண்டு தெளியலாம்.

பாரதியார் கூறுவார் :

**காதலினால் மானிடர்க்குக் கலவி யுண்டாம்;**
**கலவியிலே மானிடர்க்குக் கவலை தீரும்;**
**காதலினால் மானிடர்க்குக் கவிதை உண்டாம்;**
**கானமுண்டாம் சிற்பமுதற் கலைக ளுண்டாம்**
**ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே!**

என்றும்,

**.....................கவிதை கனியிழந்த**
**சாற்றினிலே பண்கூத் தெனுமிவற்றின் சாரமெலாம்**
**ஏற்றி அதனொடு இன்னமுதைத் தான்கலந்து**
**காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்**
**மாதவனின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்**
—குயிற்பாட்டு: 142-246

என்றும் கூறுவர், பாரதிதாசன்,

**தண்ணிலவும் அவள்முகமோ தாரகைகள் நகையோ!**
**தளிருடலைத் தொடும் உணர்வோ நன்மணஞ்சேர் குளிரும்**
**விண்ணீயிம் கார்குழலோ! காணும்எழி லெல்லாம்**
**மெல்லியின் வாய்க் கள்வெறியோ! அல்லிமலர்த்தேனின்**
**வண்டின் ஒலி அன்னவளின் தண்டமிழ்தாய் மொழியோ?**
**வாழியஇங் கிவையெலாம்! எழுதவரும் கவிதை!**
**கண்டெடுத்தேன் உயிர்ப்புதையம்! அதோவந்து விட்டாள்!**
**கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே!**

என்றும்,

ஆடப்போம் புனலிலெலாம் அவளே! காற்றில்
அசையப்போம் பொழிலிலெலாம் அவளே! கண்ணால்
தேடப்போம் பொருளிலெலாம் அவளே! நேரில்
தின்னப்போம் சுவையிலெலாம் அவளே! வண்டு
பாடப்போம் மலரிலெலாம் அவளே! மேற்கில்
படுசுதிரில் அவள்வடிவே காண்பேன் என்று
வாடக்கண் துயிலாமல் இருந்தான் வேலன்;
மலர்ந்திட்ட காலையிலும் அவளைக் கண்டான்

—பாண்டியன் பரிசு : இயல், 76:8

காதலின் இனிய வெற்றியினை இருபெருங் கவிஞரும் ஒவ்வொரு வகையில் திறன் சேர்த்து மொழிவர்—பாரதியாரின் "கண்ணம்மாப் பாட்டு" தக்க சான்றாகும்.

பாரதிதாசன் 'சேர தாண்டவம்' நூலில் உரைநடையில் சிறக்கக் காதல் நுட்பத்தினை விளக்கி நிற்கிறார்.

**ஆதிமந்தி :** சோறும் கறியும் கொதிப்பதும் வேவதுமாயிருக்கின்றன.

**தோழி :** ஆதிமந்தி, அவரிடம் சொன்னேன் அங்கே கொதிக்கிறது என்று. 'இங்கே மட்டும் என்ன குளிர்கிறதோ! இங்குந்தான் என் நெஞ்சம் கொதிக்கிறது' என்று சிடுசிடு என்று கூறினார்.

**ஆதிமந்தி :** ஐயையோ! ஓடு, ஓடு! இறக்கும் நேரம்; 'இதோ வந்துவிட்டாள் ஆதிமந்தி', என்று கூறிவிட்டு வா.

**தோழி :** இறக்கும் நேரம் என்று அவரிடம் சொன்னதற்கு, 'இங்கு மட்டும் நான் வாழும் நேரமா? நானும் இறக்கும் நேரந்தான்' என்று எரிந்துவிழ்ந்தார்.

இத்தகைய உரையாடலின் கருத்துநயம் நினையுந் தோறும் மகிழ்வூட்டுவதாகும்.

மேலும் ஆதிமந்தி சோழப் பேரரசன் கரிகாற் பெருவளத்தானின் அருமைத் திருமகளாய் இருப்பினும், தன் காதற்கொழுநனுக்குத் தானே சமையல் செய்யவும், எண்ணெய் தேய்க்கவும் விரும்புவதாகக் கூறும் கவிஞர், காதல் வாழ்வின் நுட்பத்தினையும், பெற்றியினையும் பாங்குறப் புலப்படுத்துகின்றார்.

"அத்தானுக்கு என்ன பிடிக்கும், மாமிக்கு எந்தக் கறி பிடிக்கும் என்பது எனக்கல்லவா தெரியும்? உணவு ஆக்கும் பொறுப்பைப் பணிப்பெண்களிடம் ஒப்படைக்கலாமா?"

"உங்கள் திருமேனி தீண்டி எண்ணெய் இட்டு எழில் மார்பில் இரு கண்ணையிட்டுத் தூய்மை செய்யும் இன்பப் பணியை நான் பணிப்பெண்ணுக்கோ கொடுக்க உடன் படுவேன்?"

பாரதி, பாரதிதாசன் ஆகியோர் இருவரும் பெண்ணுரிமை பேசிய பெருங்கவிஞர்களாவர். பாரதியின் புதுமைப் பெண்ணைக் காண்போம்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மைமாதர் திறம்புவ தில்லையாம்.

—புதுமைப் பெண் : 7

பாரதிதாசன் பெண்ணுரிமை குறித்துச் சற்றுக் காரசாரமாகவே கவிதை வடிக்கிறார்.

ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர்
தேடுவதும் ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்
அஞ்சுவதும், நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும்
கெஞ்சுவது மாகக் கிடக்கும் மகளிர்குலம்
மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர்பகுதி

—பாரதிதாசன் கவிதைகள் : வீரத்தாய்

என்றும்,

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாஎன் கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமைஎன்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க் கும்உண்டு
புலன் அற்றபேதையாய்ப் பெண்ணைச்செய் தால்அந்
நிலம்பிளந்த பைங்கூழ் நிலைமையும் அம்மட்டே!

—பாரதிதாசன் கவிதைகள் :
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

என்றும் குறிப்பிட்டுப் "பெண் கல்வி" வேண்டும் என்பதனைப் பின்வரும் பாடல்களால் விளக்குகின்றார்.

கல்வியில் லாத பெண்கள் களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல்
இல்லை!
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி: அங்கே
நல்லறி வுடையமக்கள் விளைவது நவில வோநான்!

—குடும்ப விளக்கு : இரண்டாம்பகுதி

தலைவாரிப் பூச்சூடி உன்னைப்—பாட
சாலைக்குப் 'போ' என்று சொன்னாள்உன் அன்னை;
சிலைபோல ஏனங்கு நின்றாய்—நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்!
விலைபோட்டு வாங்கவா முடியும்? கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி?—நீ
வாயார உண்ணுவாய் போடீஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால்;—கேலி
பண்ணுவார் என்னைஇவ் வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடுமுன் ஓடு! என்
கண்ணல்ல அண்டைவீட்டுப் பெண்களோடு!
கடிதாய் இருக்குமிப் போது—கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு—பெண்
கல்விபெண் கல்விஎன் கின்றதன் போடு!

—இசையமுது 1, தந்தை பெண்ணுக்கு

பாரதிதாசனின் "பாஞ்சாலி சபதம்" நாட்டு விடுதலையை நுணுக்கமாக உரைப்பதாகும்.

"கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்" என்ற செய்தி பாரத தேச விடுதலையைப் பகர்வதாகும்.

பாரதிதாசன் "முதியோர் காதல்" பற்றி இக்காலத்தே பாட்டிசைத்த முதல்வராவர்.

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள்உடம்பு
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும்மூ தாட்டி;

மதியல்ல முகம்அ வட்டு
வறள்நிலம் குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
''இருக்கின்றாள்'' என்ப தொன்றே.

—குடும்ப விளக்கு : முதியோர் காதல்,

இப் பாடலுடன்,

அண்ணாந் தேந்திய இளமுலை தளரினும்
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர

என்னும் நற்றிணைப் பாடற் பகுதியை ஒப்புநோக்கி உணரவேண்டும்.

இனிப் பாரதியின் உவமை நலத்தை

கோயிற் பூசை செய்வோர் சிலையைக்
கொண்டு விற்றல் போலும்.
வாயிற் காத்து நிற்போன் வீட்டை
வைத்தி ழத்தல் போலும்
ஆயிரங்களான – நீதி
அவைஉ ணர்ந்த தருமன்
தேயம் வைத் திழந்தான் :— சிச்சீ!
சிறியர் செய்கை செய்தான்!

—பாஞ்சாலி சபதம் : 219

எனும் பாட்டு அடிகளிலும்,

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிடில்
கைகொட்டிச் சிரியாரே.

என்னும் பாட்டு அடிகளிலும்,

"இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான் ஜார் அரசன்" எனும் பாடலில்,

...புயற்காற்றுச் சூறைதனில்
திமுதிமுவென மரம் விழுந்து
காடெல்லாம் விறகான செய்திபோல

என்ற பகுதியிலும் காணலாம். பாரதிதாசன் உவமைநயம் வருமாறு :

பாண்டியன் பரிசு

பனைமரங்கள் இடிவிழக் கிழிந்து வீழும்
பான்மைபோல் இருதிறத்தும் மறவர் வீழ்ந்தார்

—இயல் 5 : 2

கைத்தூண்டிற் சிறுமீனாய்க் கலங்குகின்ற

—இயல் 10 : 2

நெய்யாலே மூண்டெழுந்த நெருப்பைப் போல

—இயல் 19 : 2

வல்லூறு குறிவைத்த புறாப்போல் வாழும்
மலர்க்கொடியாள் அன்னத்தின் உள்ள மொன்று

—இயல் 20 : 1

செந்நீரில் புரளுகின்ற இரண்டுடம்பும்
தெண்ணீரின் கரைமீனாய்த் துடிக்கும்

—இயல் 47 : 1

அனற்கொள்ளி பட்டபிள்ளை கதறும் போதில்
அம்மாஎன் பதுபோலே

—இயல் 37 : 3

மணமிழந்த விரிமலரைப் போலிருந்தாள்

—இயல் 39 : 2

கேள்வியிலார் நெஞ்சம்போல் இருண்டு மீளும்
வழக்குடையார் செல்வம்போல் மின்னி மாய்ந்து
வன்பொருளை இழந்தான்போல் அதிர்ந்து பின்னர்
மழைக்கண்ணீர் உகுத்தது வான்!

—இயல் 53 : 1

பழக்குலைமேல் எறிந்தகுறுந் தடியே போலப்
பாய்ந்ததொரு பெருங்காற்றுப் படகு நோக்கி

—இயல் 53 : 1

தீனியிட்டுக் கோழியினை மடக்கு வார்போல்
மூடிவிட்டார் பேழையினை

—இயல் 57 : 10

கிளிக்கழுத்தின் பொன்வரிபோல் அரும்புமீசை
கீழ்க்கடலின் மாலைவெயில் கலந்த நீல
ஒளித்திரைபோல் தலைமயிர்ச்சங் கத்தின் தோற்றம்
உயிர்ப்பரிதி வான்போன்ற மேனி வாய்ந்தான்

—இயல் 62 : 4

காய்இற்று வீழ்வதுபோல் நரிக்கண் ணன்தன்
கருந்தலைவீழ்ந் ததுவே அன்னத்தின் வாளால்!

—இயல் 74 : 1

பாரதிதாசன் கவிதைகள்

கோட்டைப் பவுன் உருக்கிச்—செய்த
குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகள்

—இயல் 20 : 1

வெள்ளம் போல் தமிழர் கூட்டம்

— இயல் 3 : 27

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்

—எந்நாளோ? : 9

பாரதிதாசன் கவிதைகள் : 2

மல்லிகையின் அரும்புபோல் அலகும், நல்ல
மாணிக்க காலும்மணி விழியும் பால்போல்
துல்லியவெண் சிறகும் உற்ற பெண்பு றவாய்த்
துலங்கினாள்

— *கற்பனை உலகம் : 4*

எதிர்பாராத முத்தம்

தணலிலே நின்றிருப்போர் தண்ணீரில் தாவுதல்போல்
எழுத்தினை விழிகள்தாவ இதயத்தால் வாசிக்கின்றான்

—*8 : 2.3*

*இனிச் சீர்திருத்த நோக்கில் இருவரும் எவ்வாறு திகழ்கின்றனர் எனக் காண்போம்.*

*கல்விப்பணி குறித்த பாரதியின் கருத்துகள் வருமாறு:*

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

—*பாரதி : வெள்ளைத் தாமரை : 9*

உயிர்களிடத்தில் அன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் :—
வயிர முடைய நெஞ்சு வேணும்...இது
வாழும் முறைமையடி பாப்பா!

— *பாப்பா பாட்டு : 16*

காதல் மணத்தை வற்புறுத்திப் பாரதிதாசன் பாடுவது காண்க.

ஒட்டும் இரண்டுளத்தைத்—தம்மில்
ஓங்கிய காதலினைப்
பிட்டுப்பிட் டுப்புகன்றார் —அதைப்
பெற்றவர் கேட்கவில்லை
குட்டை மனத்தாலே—அவர்
கோபப் பெருக்காலே
வெட்டிப் பிரிக்கவந்தார்—அந்த
வீணையினை நாதத்தினை

என்று நெஞ்சில் ஈரம் கசிய மொழிந்துள்ளார். மேலும் காதலின் நெஞ்ச உணர்வினை,

அண்டைஇல் லத்தினிலே—என்
அன்பன் இருக்கின்றான்!
உண்ணும் அமுதிருந்தும்—எதிர்
உண்ண முடிந்ததில்லை!
தண்டமிழ்ப் பாட்டிருந்தும்—செவி
சாய்த்திடக் கூடவில்லை!
வண்ணமலர் சூடவில்லை—அது
வாசலிற் பூத்திருந்தும்!

மேலும்,

கூடத்தி லேமனப் பாடத்திலே—விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை,
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படும் நேரத்திலே

பாடம் படித்து நிமிர்ந்தவிழி தனிற்
பட்டுத் தெரித்தது மானின்விழி!
ஆடை திருத்திநின் றாள் அவள்தான் — இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்!

*ஆண் குழந்தைத் தாலாட்டுப் பாடலில்,*

எல்லாம் அவன்செயலே என்று பிறர்பொருளை
வெல்லம்போல் அள்ளி விழுங்கும் மனிதர்க்கும்
காப்பார் கடவுள்உமைக் கட்டையில்நீர் போகுமட்டும்
வேர்ப்பீர், உழைப்பீர் எனஉரைக்கும் வீணருக்கும்,
மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்டவந்த
தேனின் பெருக்கே என் செந்தமிழே கண்ணுறங்கு!

*என்றும்,*

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!
வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றை;
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே! இல்லையாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றேயாகும்

*—பாண்டியன் பரிசு; இயல் : 56 : 3*

*என்றும்,*

தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்தியம் இவையுண்டு தானுண் டென்போன்
சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!

*—பாரதிதாசன் கவிதைகள்; உலக ஒற்றுமை.*

*என்றும்,*

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஒரு நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப் பாரீர்!

என்றும்,

சாமிமத பேதங்கள் மூடவழக் கங்கள்
தாங்கிநடை பெற்றுவரும் சண்டையுல கிதனை
ஊதையினால் துரும்புபோல் அலக்க ழிப்போம் பின்னர்
ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்

என்று குறிப்பிட்டுள்ளார்.

வானொலி வழி உரைத்த கருத்து வருமாறு :

தமிழகம்! தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்!
பைந்த மிழ்த்தேர்ப் பாகன்; அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்; இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவியரசு
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்;
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்;

என்னென்று சொல்வேன்' என்னென்று சொல்வேன்!
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்,
தமிழ்பா ரதியால் தகுதி பெற்றதும்!
—பாரதிதாசன கவிதைகள : இரண்டாம் தொகுதி.

பல்கலைச் செல்வர் பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் பாரதியார் பாட்டுத்திறம் குறித்துச் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

பாரதிதாசன் பாடல் குறித்துத் தமிழறிஞர் சிலரின் கருத்துகள் வருமாறு :

"எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும்; பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்" என்று தமிழ்ப் பெரியார் திரு வி.க. அவர்களும், "பாரதிதாசன் கவிதையில் வேகம் உண்டு; விடுதலைத் தாகம் உண்டு; பண்பும் உண்டு; பயனும் உண்டு" என்று பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களும், "பாரதியார் சொல்லும் வீரத்தமிழ்ச் சொல் இன்பத்தைப் பாரதிதாசன் பாடல்களில் காணலாம்", என்று பாரதியாருடன் பழகிய பெரியார் பரலி சு. நெல்லையருப்பரும், 'அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞர் பாரதிதாசன்" என்று புதுமைப் பித்தனும், "பாரதிதாசனின் தமிழ்ப்பற்றுக்கு எல்லையில்லை; அவர்தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகிவிடுவான்", என்று டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்களும், "பாரதிதாசனாருடன் பழகுவதன்மூலம் பாரதியைப் பார்க்கவில்லையே, அவருடன் பழகவில்லையே என்ற குறை எனக்கு நிவர்த்தியாயிற்று" என்று, கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும்,

பாரதிதாசனாரைப் பற்றியும் அவர்தம் கவிதை நலன் குறித்தும் கருத்துரை வழங்கியுள்ளார்கள்.

'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் தகுதிமிகு நூலாசிரியர் பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்கள் கருத்து வருமாறு:

''புரட்சிக் கவிஞர் என்றாலே இந்த நூற்றாண்டிலும் இதற்கு முந்திய நூற்றாண்டிலும் வேறு யாரையும் குறியாமல், பாரதிதாசனார் ஒருவரையே குறிக்குமாறு தமிழிலக்கிய வரலாற்றிலே அவர் சிறப்பிடம் பெற்று விட்டார். சிறந்ததை மிகமிக விரும்பிப் போற்றுதலும், தீயதை மிகமிக வெறுத்துத் தூற்றுதலும் அவர் இயல்பு. இந்த நாட்டிற் புகுந்து சமுதாயத்தில் இடம் பெற்றுவிட்ட தீய பழக்கவழங்களையும் மூடக்கருத்துகளையும் கடிந்து பாடி, படிப்பவர் உள்ளத்தில் புத்துணர்ச்சியை எழுப்பிய புரட்சியாளர் அவர். அவருடைய பாட்டுகளில் விழுமிய கற்பனையும் உண்டு; வேகமான உணர்ச்சியும் உண்டு. பழந்தமிழ் மரபும்உண்டு; புத்துலகச் சிந்தனையும் உண்டு. தமிழர் வாழ்வுக்கு அவர்தம் எழுத்தும் பேச்சும் அரண் செய்துவந்தன. அவர் பிரிவு தமிழினத்துக்குப் பெரிய இழப்பாயிற்று''

தமிழிலக்கிய வானின் இருபெரும் நிலவும் கதிரும் பற்றிய சுருக்கக் கருத்து இதுவெனக் கொள்ளலாம்.

# பாரதியார்

## 2. வள்ளுவர் வழியில் பாரதி

பாட்டுக்கொரு புலவனாய் நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நன்கு இன்றளவும் வாழ்ந்துகொண்டிருப்பவர் பாரதியார் ஆவர். 'இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேயந் தன்னை வாழ்விக்க வந்த' காந்தி மகாத்மாவின் படை அணியில் ஒரு வீரராய் விளங்கிய தீரர் பாரதியார். "நமக்குத் தொழில் கவிதை; நாட்டிற்குழைத்தல்; இமைப்பொழுதும் சோராதிருத்தல்" என்றபடியும் "எந்தன் பாட்டுத் திறத்தாலே இந்த வையத்தைப் பாலித்திட வேண்டும்" என்றபடியும் வாழ்ந்தவர். தமிழ் மொழியின் மாட்டுப் பெரிதும் பக்தியும் ஈடுபாடும் கொண்டிருந்த பாரதியார் முன்னோர் மொழிந்த சொற்களைப் பெருமிதத்தோடு பாராட்டியவர் ஆவர்.

கல்லையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்து
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்.

தாம் உயிரோடிருப்பதற்குக் காரணமே தம் தந்தையின் அருள்வலியும், முன்னர் வாழ்ந்த பெரும் புலவர்களின் தவவலியுமே என்று கருதினார் பாரதியார்.

தந்தை அருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டும் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான்.

ஆங்கிலேயர் இந்நாட்டிற்களித்த அன்னியக் கல்வி முறை இந்நாட்டு மக்களைப் பழமையின் பெருமையை— பண்பாட்டின் சிறப்பினை அறியவொட்டாமல் தடுத்து விட்டது என்பது பாரதியாரின் கருத்தாகும். எனவே அவர் பின்வருமாறு பாடுகிறார் :

சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பாரளித்துத் தர்மம் வளர்த்ததும்
....................
......................
அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட்போகுநர்

மேலும் பாரதியார்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று கூறுவதோடு மட்டுமல்லாமல்,

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குறளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும் கருதியும்

எல் லையொன் றின்மை எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும், முன்புநான் தமிழ்ச்
சாதியை அமரத்தன்மை வாய்ந்தது

என்று பாரதியார் பாடியுள்ளதிலிருந்து இளங்கோ, வள்ளுவர், கம்பர் ஆகிய மூன்று பெரும் புலவர்களும் தமிழினத்தின் அமரத் தன்மைக்கு அடித்தளம் அமைத்த வர்கள் என்று அவர் கருதினார் என்பது தெரிகிறது.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று உறுதி கொண்டிருந்தார் பாரதியார். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று வள்ளுவப் பெருந்தகையிடத்துத் தாம்கொண்ட ஆராத அன்பினை துலங்கும் மதிப்பினைப் புலப்படுத்தினார் பாரதியார்.

செங்கோல் தவறிக் கொடுங்கோன்மை மிகுகின்ற போது அந்நாட்டில் நீதி குலைந்து நேர்மையற்ற செயல் களே நிகழ்ந்துகொண்டிருக்கும் என்பது திருவள்ளுவர் பெருமானின் கருத்தாகும்.

கூழும் குடியும் ஒருங்கிழக்கும்; கோல்கோடிச்
சூழாது செய்யும் அரசு (குறள் :554)

இதனாலேயே பாரதியாரும் உருசியப் பெருநாட்டிற் கொடுங்கோலோச்சிய ஜார் மன்னனின் வீழ்ச்சியினை,

இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான் ஜார்அரசன்

என்று பாடினார். பாஞ்சாலி சபதத்தில் துரியோதனனின் கொடுங்கோன்மை காரணமாகப் பாஞ்சாலி கண்ணீர்விட

நேரிடுகிறது. அதனைப் புலப்படுத்தும்பொழுது பாரதி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

பேரழகு கொண்ட பெருந்தவத்து நாயகியைச்
சீரழியக் கூந்தல் சிதையக் கவர்ந்துபோய்
கேடுற்ற மன்னரறம் கெட்ட சபைதனிலே
கூடுதலும் அங்கே போய்'கோ' என்று அலறினாள்.

மேலும் 'கேடுற்ற மன்னரறம் கெட்ட சபை தனில்' தன்னை மணந்த ஐவரும் சூதில் தன்னைத் தோற்றுத் தலைகுனிந்து இருந்த நிலையினையும், துரியோதனன் அவையில் வீற்றிருந்த பிற பெரியவர்கள் வாய்மூடி வாளாவிருந்த நிலையினையும் ஒருங்கே கண்டு உள்ளம் பதைத்துப் பின்வருமாறு பேசினாள் :

பெண்டிர் தமையுடையீர் பெண்களுடன் பிறந்தீர்
பெண்பாவம் அன்றோ பெரியவசை கொள்வீரோ
கண்பார்க்க வேண்டும் என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

இந்தக் கருத்திலேதான் சுப்பிரமணிய சிவா முதலானோர் சிறையில் அல்லற்பட்ட அவல நிலையினையும், வ. உ. சிதம்பரனார் போன்ற நல்லறிஞர் செக்கிழுத்த சீர்கெட்ட நிலையினையும் ஒருங்கே எண்ணித் துடிக்கும் பாரதியார் பின்வருமாறு தம் எண்ணங்களைப் பாட்டிற் புலப்படுத்தியுள்ளார் :

மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவும் காண்கிலையோ?

திருவள்ளுவர் உலகிற் பிறந்த மக்கள் அனைவரும் ஒரு குலம்; பிறப்பால் வேற்றுமையில்லை; வாழும் வகையால் தான் வேற்றுமை என்று குறிப்பிட்டார்.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (குறள் : 972)

என்றார். இன்று உலகில் நட்பு நீங்கிப் பகை வளர்வதற்கும், அன்பு அகன்று கொடுமை குவிவதற்கும் இந்த உயர்பண்பு மனித சமுதாயத்தைவிட்டு விடைகொண்டு விட்டமையே காரணங்களாகும். திருவள்ளுவர் வழிவந்த திருமூலர் பெருமானும்,

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்

என்றார். பாரதியாரும் திருவள்ளுவர் பெருமானின் கருத்துகளில் ஊறித் திளைத்தவரான காரணத்தால் சமுதாயத்தில் நிலவும் சாதி பற்றிய ஏற்றத்தாழ்வுகளை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றார்.

சாதி இரண்டொழிய வேறில்லை என்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்தம் என்போம்

என்று ஔவையின் அமுதமொழியினைப் போற்றுகின்றார். 'பாப்பாப் பாட்டில்' பாப்பாக்களுக்கு நீதி நன்னெறியினை நெஞ்சில் நிலைநிறுத்தும் போக்கிற் பல நீதிக் கருத்துகளை அவர்கள் உளங்கொளக் கூறுகிறார்.

சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்

என்று கூறியுள்ளார். 'முரசு'ப் பாடலிலும்

நிகர் என்று கொட்டு—முரசே இந்த
நீணிலம் வாழ்பவர் எல்லாம்
தகர் என்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை எல்லாம்

என்று குறிப்பிட்டுள்ளார்.

வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் இங்கு
மானிடர் வேற்றுமை யில்லை

என்றும் முழங்குகின்றார். சாதிப் பிரிவுகளும், சாதிக்கொரு நீதிப்பிரிவுகளும் நாட்டிற்குக் கேடு பயப்பவை என்று கண்டார் பாரதியார். எனவே அவர்,

சாதிப் பிரிவுகள் சொல்லி—அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்தார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்

என்று மனம் நொந்து குறிப்பிட்டார்.

பெண் குலத்திற்குப் பெருஞ்சிறப்பு நல்கியது தமிழினம் எனலாம். சங்க இலக்கிய காலத்திலேயே பெண் பெற்ற பெருவாழ்வு அவ்விலக்கியங்களின்வழி தெளிவுறும். பெண்ணிற்குத் தனிச் சிறப்பு நல்கிப் போற்றியது தமிழினம். இல்லத்தை ஆளும் சிறப்பினைப் பெண்ணிற்கே தந்தது 'இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றுமில்லை' என்னும் தமிழ் மொழி எழுந்தது.

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை (குறள் : 53)

என்றார் திருவள்ளுவர்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின் (குறள் : 54)

என்றும்,

சிறை காக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை (குறள் : 57)

என்றும் திருவள்ளுவர் குறிப்பிட்டார். பெண்கள் பின்னாளில் பெருமை குன்றிப் போனதற்கு அவர்களுக்குக் கல்வியறிவு வழங்கப்படாதது ஒரு காரணமாகும். 'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்ற இழிவுமொழி எழுந்தது இடைக்காலத்தில்தான். "தொட்டிலையாட்டும் கையே தொல்லுலகை ஆளும் கை' என்பர். அவ்வகையில் கல்வி கற்ற பெண்களைப் பின்வருமாறு புலப்படுத்துகின்றார் பாரதியார்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணிஇருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.

கல்வி கற்ற புதுமைப்பெண்ணை நமக்குக் காட்டுகிறார் பாரதியார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைகாண் என்று கும்மியடி.

இம்மட்டோடு பாரதியார் நிற்கவில்லை. ஆண் சமுதாயம் பெண் சமுதாயத்தை—சரிபாதி சமுதாயத்தை ஒதுக்கினால் அது கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம்

வாங்கிய கதையாகப் போய்விடும் என்று கண்டார் பாரதியார். எனவே அவர் பாடினார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே

என்ற பாரதியின் முழக்கம் வள்ளுவர் பெருமானின் பெண்மை போற்றும் பெருவழியில் வந்ததன்றோ?

கற்க வேண்டிய கல்வியினையே கற்கவேண்டும். கற்றபின் கற்ற வழியிலே ஒழுகவேண்டும் என்பது வள்ளுவர் வழங்கிய வான்மறையாகும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக குறள்: (391)

ஆனால் பாரதியார் பிறந்த காலத்தில் இந்நாட்டின் நடைமுறையில் இருந்த கல்வி நடைமுறைக்கு ஒத்துவராத ஆங்கில கல்வியாகும். மெக்காலே ஏற்படுத்தித் தந்த அவ் அன்னியக் கல்விமுறை அண்ணல் காந்தியடிகள் குறிப்பிட்டது போல அடிமைகளை உருவாக்கும் கல்வியாக—ஆங்கில எஜமானருக்கு விசுவாசமாக உழைக்கும் எழுத்தர்களை உருவாக்கும் கல்வியாக இலங்கியது. அக்கால ஆங்கிலக் கல்வியின் புன்மையினைப் பாரதியார் மனம் வெதும்பிப் பின்வருமாறு சொல்கின்றார்.

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர் பின்
கார்கொள் வானில் ஓர் மீன்நிலை தேர்ந்திலார்

அணிசெய் காவியம் ஆயிரம் கற்பினும்
ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்
வணிகமும் பொருள் நூலு ம் பிதற்றுவார்
வாழும் நாட்டில் பொருள்கெடல் கேட்டிலார்
துணியும்ஆயிரம் சாத்திர நாமங்கள்
சொல்லுவார் எட்டுணைப் பயன் கண்டிலார்.

இதனாலேயே திருநெல்வேலியில் தாம் பயின்ற ஆங்கிலக் கல்வியினைப் பின்வருமாறு திறனாய்கின்றார் பாரதியார்.

செலவு தந்தைக்கு ஓராயிரம் சென்றது
தீதெனக்குப் பல்லாயிரம் சேர்ந்தன
நலமோர் எட்டுணையும் கண்டிலேன்; இதை
நாற்பதாயிரம் கோயிலிற் சொல்லுவேன்.

தமிழ் இலக்கியங்களின் சாரமாக—பிழிவாக ஒரு கருத்தை நாம் காணலாம். அஃது அனை அறத்தின்பாற் கொண்டிருக்கும் அசையாத பற்றாகும். 'அறம்' என்ற சொல்லிற்கு—அதன் கோட்பாட்டிற்கு அதிகமாகச் சிறப்பிடம் வழங்கும் வள்ளுவர்தம் நூலே 'அறநூல்' எனப் போற்றப்படுவதாகும்.

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (குறள் : 34)

என்பார் அவர். மேலும்,

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல. (குறள் : 39)

என்றும் குறிப்பிடுவார். வள்ளுவர் வழிதந்த பாரதியாரும் அறத்தில் அசையாத பற்றுள்ளவர் என்பது பலவகைகளில் தெரிகின்றது.

அறம்ஒன் றேதரு மெய்யின்பம் என்ற நல்
லறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்
பிறவிரும்பி உலகினில் யான்பட்ட
பீழை எத்தனை கோடி! நினைக்கவும்
திறன்அழிந் தென் மனம்உடை வெட்துமால்
தேசத்துள்ள இளைஞர் அறிமினோ
அறம்ஒன் றே தரு மெய்யின்பம்; ஆதலால்
அறனையே துணைஎன்று கொண் டுய்திரால்

என்று பாடினார்.

அறத்தை வலியுறுத்திய திருவள்ளுவர் சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லியினைத் தவிர்க்க வேண்டுவது குறித்தும் பாடியுள்ளார்.

சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் (குறள் : 306)

முன்னோர் மொழிபொருளைப் பொன்னேபோல் போற்றுபவர் பாரதியார் என்பதனைப் பின்வரும் பாரதியின் பாடற்பகுதியால் அறியலாம்.

கோனாகிச் சாத்திரத்தை யாளும் மாண்பார்
ஜகதீச சந்திர வசு கூறுகின்றான்
(ஞானானுபவத்தில் இது முடிவாம் கண்டீர்)
நாடியிலே அதிர்ச்சியினால் மரணம் என்றான்
கோபத்தால் நாடியிலே அதிர்ச்சி உண்டாம்.

அடுத்து, 'பொருள்தனைப் போற்றிவாழ்' என்னும் தமிழ் முதுரைப்படி, திருவள்ளுவர் பொருளின் இன்றியமையாமையினைப் பலவிடங்களிற் புலப்படுத்தியுள்ளார்.

அருளிலார்க்கு அவ்வுலக மில்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு (குறள் : 247)

என்றும்,

இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு (குறள் : 752)

என்றும்,

செய்க பொருளைச் செருநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில் (குறள் : 759)

என்றும் திருவள்ளுவர் பலபடப் பொருளின் இன்றியமை யாமையினைப் புலப்படுத்தியுள்ளார். பொருளின்றித் தம் வாழ்நாளில் பல இடர்களைக் கண்டவர் பாரதியார் எனவே அவர்,

பொருளி லார்க்கிலை இவ்வுலகு என்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்
பொருளிலார்க்கு இனமில்லை துணையிலை
பொழுதெலாம் இடர் வெள்ளம் வந்தெற்றுமால்

என்று திருவள்ளுவர் பெருமான் அருளிய தொடரை வைத்தே உலக அனுபவ நிலையினை உள்ளபடியே எடுத்துரைத்தார்.

பாரதியார் பசித்து வாழ்ந்தவர்; பசியின் கொடுமை அவருக்குத் தெரியும். எனவே அவர் பின்வருமாறு பாடினார்.

வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றார்.

திருவள்ளுவர் பெருமானும்,

நெருப்பினுள் துஞ்சலு மாகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது (குறள் : 1049)

என்று வறுமையின் கொடுமையினைச் சொற்களிற் குறட்பாவாக வடித்தார். மேலும் திருவள்ளுவர் சொன்னார்.

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (குறள் : 1062)

என்று இக்கருத்தினைப் பின்பற்றியே பாரதியாரும்,

இனி ஒரு விதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவிலை எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்றார்.

வேடத்தில் மயங்குவது வெளி உலகு அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் காவி கட்டியவர்களை யெல்லாம் இராமலிங்க அடிகளாராக எண்ணும் மனப் பான்மை வந்துவிட்டது. எனவே காவியுடை தரித்து, கமண்டலத்தைக் கையிலேந்தி ஊரை ஏமாற்றுபவர்கள் தொகையும் மிகுந்துவிட்டது. திருவள்ளுவர் பெருமான் காலத்து நிலையும் இதுதான்போலும்! அவர்,

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (குறள் : 280)

என்று போலித் துறவத்தைக் கண்டித்தார். வள்ளுவர் வழியில் நடை பழகிய பாரதியாரும்,

காவித்துணி வேண்டா; கற்றைச்சடை வேண்டா
பாவித்தல் போதும் பரமநிலை எய்துதற்கே

என்றார்.

படித்தவர்கள் படியாதவர்களைப் பற்றிக் கவலையுறாமல் வாழ்வதென்பது அன்னியக் கல்வியால் விளைந்த மற்றோர் அதிர்ச்சி நிலையாகும். பாரதியாரும் இதனைப் 'புதிய கோணங்கி'யில் 'படித்தவன் ஐயோ வெனப் போவான்' என முழங்குகிறார். காரணம், படித்தவனிடம் சூதும் மோசமும் சேர்ந்து, சமுதாயத்தைத் திரும்பிப் பார்க்காத நிலை ஏற்பட்டுவிட்டது என்பது தான் திருவள்ளுவர் பெருமான்,

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் (குறள் : 2)

என்று கற்றதன் பயன் கடவுளைத் தொழுவது என்றார். இம்முறையில் பாரதியாருடைய 'முத்து மாரியம்மன்,' பாட்டும் அமைந்திருக்கக் காணலாம்.

உலகத்து நாயகியே—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!
உன்பாதம் சரண் புகுந்தோம்—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ!

பல கற்றும் பலகேட்டும்—எங்கள் முத்து
மாரியம்மா எங்கள் முத்து மாரீ;
பயன் ஒன்றும் இல்லையடி—எங்கள் முத்து
மாரியம்மா! எங்கள் முத்து மாரீ!

இவ்வாறு, தெய்வப் புலவர் திருவள்ளுவர் பெருமானின் அடியொற்றிப் பைந்தமிழ்ச் சாரதி பாரதியும் பாடல்கள் புனைந்துள்ளார் என்பது பல சான்றுகளால் நிறுவப்படுகின்றது.

# 3. தமிழ்மொழி தமிழ்நாடு பற்றிப் பாரதியார்

இந்த நூற்றாண்டினைப் பாரதி நூற்றாண்டு என்று சொல்லுமளவிற்குப் பாரதி இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறுகின்றார். பாரதி வாழ்ந்த காலத்தையொட்டி வாழ்ந்த பெருங்கவிஞர்களாகப் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் வெ. இராமலிங்கம்பிள்ளை ஆகிய மூவரையும் குறிக்கலாம். பாரதியால் ஈர்க்கப்பெற்றுச் சுப்புரத்தினமாக இருந்த தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டு பாரதியிடம் தாம் கொண்டிருந்த மதிப்பைப் புலப்படுத்தினார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா,
அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினானேயடா
அதைக் கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா
அந்தக் கிறுக்கில் உளறும்மொழி பொறுப்பாயேயடா

என்று கவிமணி பாரதி பாட்டிற்குத் திறனாய்வு மொழி கண்டார். பாரதி சென்ற தேசிய நெறியிற் சென்று காந்தியக் கவிஞராகத் துலங்கியவர் நாமக்கல்லார் ஆவர். இவ்வாறு சமகாலத்துப் புலவர் பெருமக்களால் ஒருமுகமாகப் பாராட்டப்பெற்றவர் பாரதி என்பதனை அறியும்பொழுது பாரதியின் திறமும் புகழும் குன்றிலிட்ட விளக்கெனத் திகழ்வதைக் காணலாம்.

பாரதி பெருங்கவிஞராகத் திகழ்ந்தபோது விநாயகர் நான்மணிமாலை பாடினார். அவ்விநாயகர் நான்மணி மாலையில் வெண்பாவில் அமைந்த ஒரு பாடல் வருமாறு :

நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்; உமக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்:
சிந்தையே யிம்மூன்றுஞ் செய்

எனவே கவிதையைத் தம் தொழிலாகக் கொண்டு, தாம் பிறந்த பொன்னாட்டிற்குழைத்தலையே நம் உயிர் மூச்சாகக் கொண்டு, அணுவளவும் அயராமல் தாம் வாழ்ந்த காலஎல்லை அளவும் வாழ்ந்தவர் பாரதியார் ஆவர். காலனையே சிறு புல்லாக நினைத்து மிதிக்கத் துணிந்த பாரதியார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

தேடிச்சோறு நிதந்தின்று—பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி—மனா
வாடித் துன்பமிக வுழன்று—பிறர்
வாடப்பல செயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப் பருவமெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப்பே லே—நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?

என்று பாடும் பாரதியின் பாட்டில் ஒரு கொள்கைப் பிடிப்பு இருப்பதனைப் பார்க்கலாம்.

பாரதி இன்று பாராட்டப் பெறுவதற்கே பெருங் காரணமாய் அமைந்தன. அவர் தம் கவிதையாற்றலும், தாய்மொழிப் பற்றும், தாய்நாட்டுப் பற்றுமேயாகும். பாப்பாவுக்குப் பாட்டிசைக்கும் பாரதி தம் தமிழ்மொழிப் பற்றை எடுத்துரைக்கின்றார்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.

பாப்பாவுக்குப் பாடிய பாரதி பெரியவர்களுக்கும் தமிழ்மொழிப் பற்றினைக் கொளுத்துகின்றார். மொழிப் பற்றற்ற மக்களைப் பார்த்துப் பின்வருவாறு இடித்துரைக்கின்றார் பாரதியார்.

பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!

என்று அறைகூவல் விடுத்த பாரதி, அவர்கள் மொழிப் பற்று பெறவேண்டும் என்பதற்குப் பின்வருமாறு உரத்த குரலில் உண்மையை எடுத்துரைக்கின்றார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.

இவ்வாறு சொல்வதற்குப் பாரதியாருக்குத் தகுதி உண்டு. எட்டையபுரத்தில் தமிழும், திருநெல்வேலியில் ஆங்கிலமும், காசியில் இந்தியும், வடமொழியும், புதுச்சேரியில் பிரெஞ்சும், வங்காளமும், பிற நாட்டு மொழிகளான ஜெர்மன், இலத்தீன், ஓரளவிற்கு அரபு, உருது, மலையாளம், தெலுங்கு மொழிகளும் கற்றுத் தேர்ந்தவர் பாரதியார் ஆவர்.

மொழியுணர்ச்சியற்ற மக்களுக்கு மொழியார்வத்தை ஏற்படுத்தவேண்டும் என்பது அவர்தம் தலையாய நோக்கமாக அமைந்ததனைக் கீழ்வரும் அவர்தம் கவிதை அடிகள் உணர்த்தும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

பாரதியாருக்குத் தமிழ் மொழிமாட்டு அமைந்திருந்த காதல் அளப்பரிதாகும். ஏனெனில் தமிழ்ச் சுவை தேர்ந்தால் துறக்கவும் இன்பமே இங்கு வந்து வாய்த்து விடும் என்று உறுதியாக நம்பினார் பாரதியார். அவரே கூறுகிறார் கேட்போம்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்!
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

தமிழ்ச்சாதி தமிழ்மொழியால் சாகாவரம் பெற்ற ஒன்றாகக் கருதுகின்றார் பாரதியார். இதனைப்பின் வரும் பகுதி உணர்த்தும்.

சிலப்பதி காரச் செய்யுளைக் கருதியும்
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவு மழகுங் கருதியும்
எல்லையொன் றின்மை யெனும் பொருளதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலு
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை யமரத் தன்மைவாய்த் ததுவென்

றுறுதிகொண் டிருந்தேன். ஒரு பதினாயிரஞ்
சனிவாய்ப்பட்டுத் தமிழச்சாதிதான்
உள்ளுடைவின்றி யுழைத்திடு நெறிகளைக்
கண்டெனதுள்ளங் கலங்கிடா திருந்தேன்.

"தமிழ்த்தாய்" என்னும் பிறிதோர் தலைப்பில் அமைந்த பாடலிலும் இக்கருத்து எதிரொலிக்கக் காணலாம்.

ஆதிசிவன் பெற்றுவிட்டான் – என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணஞ் செய்துகொடுத்தான்
மூன்று குலத்தமிழ் மன்னர் – என்னை
மூண்ட நல்லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளி னுள்ளே—உயர்
ஆரியத் திற்கு நிகரென வாழ்ந்தேன்
கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல வோர்கள் – பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

இவ்வாறு பாரதியார் பலவிடங்களிலும் தம் தமிழ் மொழிப்பற்றைத் திறம்பட வெளியிட்டிருக்கக் காணலாம்.

ஆயினும் பாரதியார் வாழ்ந்த காலத்தில் தமிழ் மொழிக்கு நல்ல ஆக்கம் இல்லை புலவர்கள் ஜமீன்தார் களுக்குச் சீட்டுக்கவி எழுதிப் பொருள் பெற்று வாழ்ந்து வந்தனர். நாட்டில் நடைபெற்ற அன்னிய ஆட்சி தமிழை ஆதரிக்கவில்லை; அதனால் வளர்க்கவும் இல்லை. அன்னிய மொழியாகிய ஆங்கிலமே இங்கு அரசோச்சியது.

பாரதியாரும் திருநெல்வேலி சென்று தம் தந்தையின் வற்புறுத்தலால் ஆங்கிலப் பயிற்சி பெற்றதனைப் பின் வருமாறு அவல உணர்வுடன் குறிப்பிடுகின்றார்.

நெல்லை யூர்சென்றவ் வூணர் கலைத்திறன்
　　நேரு மாறெனை எந்தை பணித்தனன்
புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
　　போக்கல் போலவும் ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
　　நாடு விப்பது போலவும் எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
　　ஆரியர்க் கிங் கருவருப் பாவதை
நரியு யிர்ச்சிறு சேவகர் தாதர்கள்
　　நாயெ னத்திரி யொற்றர் உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
　　பேடி யர்பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருதுமிவ் வகை மாக்கள் பயின்றிடுங்
　　கலைப யில்கென வென்னை விடுத்தனன்
அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்
　　வற்பர் கல்வியி னெஞ்சு பொருந்துமோ?

அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
　　தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர்
முன்ன நாடு திகழ்ந்த பெருமையும்
　　மூண்டி ருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
　　பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற் றெங்க ணுணர்த்துவேன்
　　இங்கி வர்க்கென துள்ள மெரிவதே!

என்று கூறி,

செலவு தந்தைக்கோ ராயிரஞ்சென்றது
தீதெனக்குப் பல்லாயிரஞ்சேர்ந்தன
நலமோ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்

என்று ஆவேசமாக முழங்குகின்றார் பாரதியார். இவ்வாறு ஆங்கிலப் பள்ளியில் படிப்பவர்கள் கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததனையும், சேரன் தம்பி சிலம்பை இசைத்ததனையும், தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததனையும் அறியாதவர்களாகிறார்கள் என்பது பாரதியின் கணிப்பாகும். பாரதி உரைநடையிற் பின்வருமாறு அன்று தமிழ்நாட்டில் நிலவிய இழிநிலையினைப் புலப்படுத்துகின்றார்.

உண்மையான கவிதைக்குத் தமிழ்நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து. கதைகளை மொழிபெயர்த்துப் போட்டால் பலர் வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புதுநாவல்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்குக் கொஞ்ச லாப மேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர் தோன்றியிருக்கிறார்கள்; இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக் காணும் போது அதில் ரஸமனுபவிக்க வழியில்லை.

—பாரதி நூல்கள் : கட்டுரைகள்.
பக்கம் 397 : பாரதி பிரசுராலயம்.

மேலும் பாரதியார் அக்கால அரசும்தமிழிற்கு ஆதரவாக இல்லை என்பதனைப் பின்வரும் அடிகளில் தெற்றெனப் புலப்படுத்துகின்றார்.

தமிழ்நாட்டில் நடைபெறும் ராஜாங்கம் தமிழ்ப் பாஷையில் தேர்ச்சியுடையதன்று. 'தமிழ் முழு நாகரிகமுடையதா. இல்லையா' என்பதைப் பற்றிய சந்தேகங்களுடையது. ஆதலால் தமிழ்ப் படிப்பில்லாமலும், தமிழ் மனமில்லாமலும் ஸந்தோஷமடைந்திருக்கும் இயல்புடையது.

—பாரதி நூல்கள்; கட்டுரைகள்,
பக்கம் 40ℓ, பாரதி பிரசுராலயம்.

கால நிலையாலும், தேச நிலையாலும், ஆட்சி நிலையாலும், மக்கள் மனப்போக்காலும் தமிழ்மொழி தாழ்நிலையில் மதிக்கப்பெற்றுப் புறக்கணிக்கப்பட்ட நிலையினைப் படம்பிடித்துக்காட்டிப் பசுமரத்தாணியென நம் நெஞ்சில் பதியவைப்பார் போன்று 'தமிழ்த் தாயின்' கூற்றில் பின்வருமாறு பாடுகின்றார் :

தந்தை அருள்வலி யாலும் முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான்
இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவ தில்லை—அவை
 சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
 மேற்குமொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
 இந்த வசையெனக் கெய்திடலாமோ!
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
 செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்
தந்தை யருள்வலி யாலும்—இன்று
 சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
 ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

இந்த நீண்ட பாடலை நெடிது நோக்கிடும்பொழுது பாரதி உணர்வின் இமயமாக விளங்கிய திறமும், தமிழ் மொழிக்கு வசை வந்துற்றபோது துடிதுடித்த நெகிழ்வும், அவ் வசை போக்கவேண்டி விடுக்கும் வேண்டுகோளும், அவ்வேண்டுகோள் நிறைவேறும் காலையில் அவன் கொள்ளும் நம்பிக்கை எக்காளமும் நன்கு விளங்கக் காணலாம்.

எனவே ஆக்க வழிகளில் தமிழ்மொழியினை வளர்க்க வேண்டும் என்ற அக்கறைகொண்டு சில திட்டமுறைகளையும் செயற்பாட்டிற்கென அறிஞர் பெருமக்களிடம் எடுத்துரைக்கின்றார் பாரதியார். அவை வருமாறு :

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
 தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
 தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

மொழிபெயர்ப்பிலக்கியம் மட்டுமின்றி, இயல்பாகவே எழுதப்படும் கவிதை இலக்கியமும் எளிமையும் புதுமையுங் கொண்டு திகழவேண்டும் என்பதனைப் பாரதியார் பாஞ்சாலி சபதத்தின் முதற்பதிப்பின் முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

> எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன். காவியத்துக்குள்ள நயங்கள் குறைவு படாமலும் நடத்தல் வேண்டும்.

இக் கருத்தினையே கட்டுரையொன்றிலும் பின்வருமாறு புலப்படுத்தியிருக்கக் காணலாம்.

> யாவருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிகச் செல்வம் சேர மார்க்கமில்லை என்பது ப்ரத்யக்ஷம். எளிய நடையில் எழுதினால் அச்சுத் தொழிலும் பொது ஜனக் கல்வியும் பரவிவரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும்.
>
> —பாரதி நூல்கள்; கட்டுரைகள் பக்கம் 584, பாரதி பிரசுராலயம்.

இவ்வாறெல்லாம் காலத்திற்கு ஏற்பக் காலந்தோறும் வளர்ந்து கன்னித் தமிழாகவே—முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய் விளங்கும் தமிழ்மொழியினைப் பின்வருமாறு நாவார மனமார வாழ்த்தினார் பாரதியார்.

வாழ்க நிரந்தரம். வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்து மளத்திடு
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே.

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

பாரதியாருக்கு நாடு என்றால் அது பாரத மணித்திரு நாடுதான், உலகனைத்தையும் ஓர் குடும்பமாகக் கண்டவர் பாரதியார். காக்கை குருவிகளைத் தம் சாதியாகக் கண்டு கடலும் மலையும் தம் கூட்டமென எண்ணி வாழ்ந்தவர் பாரதி "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா இறைவா" என்று உளம் உருகி நின்றவர்

பாரதி. எனவே அவர்தம் பரந்த உள்ளம் பாரதத் திருநாட்டினை நாடாகக் கண்டாலும் தாம் பிறந்த மண்ணாகிய செந்தமிழ்த் திருநாட்டினையும் பாடாமல் நிற்கவில்லை. பாரத நாட்டைப் பாடிய பாரதி தமிழ் நாட்டினையும் மறவாமற் போற்றிப் பாடுகின்றார். பாட்டின் தொடக்கமே உவகைப் பெருக்கை உணர்த்தி விடுகின்றது.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

தமிழ்மொழி புகழ் மணக்க வாழும் எல்லையினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

நீலத் திரைக்கட லோரத்திலே – நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை – வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டி கிடக்குந் தமிழ்நாடு.

கல்வியில் தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்பதும் கவிச்சக்ரவர்த்தி கம்பன் பிறந்திருப்பதும் பாரதிக்குப் பெருமிதம் சேர்க்கின்றன. எனவே பின்வருமாறு பாடுகின்றார்.

கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு நல்ல
பல்வித மாயின சாத்திரத் தின்மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு.

மேலும் திருக்குறள் அளித்த திருவள்ளுவனை உலகுக்கே கொடையாக வழங்கிவிட்டதாம் தமிழ்நாடு.

தமிழன்னைக்கு அணியாகும் அழகு ஆரமாம் சிலப்பதி காரத்தைத் தந்த நாடும் தமிழ்நாடுதான் என்று மகிழ் கிறார் பாரதி.

**வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ்நாடு — நெஞ்சை**
**அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி**
**யாரம் படைத்த தமிழ்நாடு**

இவ்வாறாகத் தமிழ்நாட்டை எண்ணி மகிழும் பாரதியார் 'வாழிய செந்தமிழ்' என்னும் வாழ்த்துப் பாடலில் தமிழ்மொழியையும், அம்மொழி பேசும் தமிழரையும் அத்தமிழர் வாழும் தமிழ்நாட்டை உள்ளடக்கிய பாரத மணித்திருநாட்டையும் ஒன்றிணைத்துப் பேசுகின்றார்.

**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!**
**வாழிய பாரத மணித்திரு நாடு**

இத்திருநாட்டில் இன்னல்கள் மாய்ந்து நன்மைகள் நிறைந்து, அறம் வளர்ந்து, மறம் தொலைந்து மக்கள் அனைவரும் நல்வாழ்வும் நலவாழ்வும் வாழவேண்டும் என்று எண்ணினார் பாரதியார். அவர் எண்ணங்கள் நிறை வேறி இன்பங்கள் பொங்கி, அமைதி இந்நாட்டில் பொலிவ தாகுக.

# 4. 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'

முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய், காலம் பல கடந்தும் தன் சீரிளமைத் திறம் குன்றாமல் நின்று மிளிர்வது கன்னித் தமிழாகும்! என்று பிறந்தவள் இவள் என்று உணர முடியாத இயல்பினைக் கொண்டவளாய் விளங்குபவள் தமிழ்த்தாய். முப்பது நூற்றாண்டுக் காலமாக ஒருமுறை யான வரலாற்றினைக் கொண்டிலங்குவது தமிழ்மொழி யாகும். தமிழ்மொழியின் பழமையும் பெருமையும் பாரறிந்தனவாகும்.

பாரதியின் பாப்பாப் பாட்டு' மிகவும் புகழ் பெற்ற தாகும். 'விளையும் பயிர் முளையிலே விளங்கும்' என்பது ஆன்றோர் அருளிய மொழி. 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்பதும், "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்பதும் அவர்களின் அனுபவத்தில் விளைத்த பொன்மொழிகளாகும். எனவே பாரதி ஒரு புதிய உத்தியினைக் கையாளுகின்றார். பாப்பாவுக்கு மிகவுயர்ந்த அறிவுரைகளை விளக்கமாக எடுத்துரைக் கின்றார். அவற்றில் தமிழ்மொழியைப் பற்றிய மிக முக்கியமான கருத்து ஒன்றினைக் காணுதல் வேண்டும்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே; அதைத்
தொழுது படித்திடடி பாப்பா.

இந்த எண்ணம் கொண்டவர் பாரதி என்பதனாலேதான் அவருடைய புகழ்மிக்க நாட்டு வணக்கப் பாடலிலும் இந்தக் கருத்தின் எதிரொலி விளங்கியது.

**வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்**
**வாழிய பாரத மணித்திரு நாடு!**

மேலும் அவர் தமிழ்மொழியின் அடக்கலாற்றாத அரும்பண்புகளைப் பேசுகிறார். 'தமிழ்மொழி வாழ்த்து' என்ற பகுதியில்,

**வானம் அறிந்தத னைத்தும் அறிந்து**
**வளர்மொழி வாழியவே**

என்கிறார்.

'நாட்டு வணக்கம்' என்ற பாடலில் ஒவ்வொருவரின் தாய்மொழியிற் கிளர்ந்தெழும் எண்ணம் வளர்ந்து சிறக்கின்றது என்ற கருத்தினைத் தெரிவிக்கின்றார்.

**எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி**
**யிருந்தது மிந்நாடே—அதன்**
**முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து**
**முடிந்தது மிந்நாடே—அவர்**
**சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து**
**சிறந்தது மிந்நாடே**

எனவேதான் அவர் "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே; எம் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்றார். இப் பழம்பெருமை வாய்ந்த தமிழ் மொழியினை ஆதிசிவன் பெற்றெடுத்துள்ளானாம். அகத்தியன் என்பான் நிறை இலக்கணம் அமைத்துக்

கொடுத்தானாம். முத்தமிழாய் தமிழ் நில முழுதாண்ட வேந்தர்கள் நித்த நித்தம் தமிழ்மொழியைப் பேணி வளர்த்தனராம். ஆன்ற மொழிகளுள்ளே உயர் ஆரியத்திற்கு நிகரெனத் தமிழமொழி வாழ்ந்ததாம். இதன் பயனாக,

> கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து—நல்ல
> காற்றையும் வானவெளியையுஞ் சேர்த்துத்
> தெள்ளு தமிழ்ப் புலவோர்கள்—பல
> தீஞ்சுவைக் காவியஞ் செய்துகொடுத்தார்

என்கிறார் பாரதியார். மூன்று பெருந்தமிழ்ப் புலவர்கள் தோன்றியதனால் இத் தமிழ்நாடு பெருமை மிகப்பெற்றது என்பதனைப் பின்வருமாறு விளக்குகின்றார்.

> கல்விசிறந்த தமிழ்நாடு—புகழ்க்
> கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்றும்,

> வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
> அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
> யாரம் படைத்த தமிழ்நாடு

என்றும் பாரதியார் பாடிப் பரவசப்படுவதனைக் காணப் பாரதியின் தமிழ்மொழி பற்றிய பெருமிதமும் தமிழ்ப் புலவர்களைப் பற்றிய மதிப்பும் ஒருங்கே புலனாகின்றன.

'தமிழ்ச்சாதி' என்னும் தலைப்பிலமைந்த கவிதைப் பகுதியில் இப் பெருமிதத்தோடு பாரதியாரின் மனத்தில் ஏற்பட்டுப்போன கலக்கத்தினையும் காண்கின்றோம்.

விதியே, தமிழச் சாதியை யெவ்வகை விதித்தாய் என்பதன் மெய்யெனக்குணர்த்துவாய். ஏனெனில் சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும் திருக்குறளுறுதி யும் தெளிவும் பொருளின் ஆழமும் விரிவும் அழகுங் கருதியும் எல்லையொன்றின்மையெனும் பொருள தனைக் கம்பன் குறிகளாற் காட்டிட முயலும் முயற்சியைக் கருதியும், முன்பு நான் தமிழச்சாதியை அமரத்தன்மை வாய்ந்தது என்று உறுதிகொண்டி ருந்தேன். ஒரு பதினாயிரஞ் சனிவாய்ப்பட்டுத் தமிழச்சாதிதான் உள்ளுடைவின்றியுழைத்திடு நெறி

களைக் கண்டெனதுள்ளங் கலங்கிடாதிருந்தேன்.

என்று கூறிப் பின் வாட்டமுறு நிலையினையும் வகையுற எடுத்து மொழிகின்றார்.

இந்தத் தமிழ்த்தாயின் நிலை படிப்படியே மாறிப் போயிற்று.

தந்தை அருள்வலி யாலும் முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டுங் காலன் — என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான்

என்று குறிப்பிட்டுவிட்டுப் பாரதியார் மனவேதனையோடு பின்னர் மொழிவதனையும் கீழே காண்க.

இன்னொரு சொல்லினைக் கேட்டேன்! — இனி
ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை — இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள் பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவுங் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச்சாகும்—அந்த
மேற்குமொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ!
சென்றிடு வீரெட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தலைவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

மேற்காணும் பாடல்களை ஊன்றி நோக்கும்பொழுது பாரதி எந்த அளவிற்குத் தாய்மொழி பற்றிய வசை மொழியால் துடிதுடித்தார் என்பதையும், அவ்வசையினை நீக்கிடச் செயல்படவேண்டிய வழித்திறங்களை உள்ள படியே உளம் ஒன்றி உரைத்திருக்கின்றார் என்பதையும் ஒருங்கே காணவேண்டும்.

பாரதியார் பல மொழிகளைப் பல்வேறு சமயங்களில் பல்வேறு காரணங்களுக்காகக் கற்றுக்கொண்டுள்ளார். திருநெல்வேலியில் ஆங்கிலமும் தமிழும் பாங்குறக் கற்றார். ஆங்கிலக் கல்வியால் 'தீது தமக்குப் பல்லாயிரம் சேர்ந்த தாகவும், அக் கல்வியால் நலமோர் எட்டுணையும் காணவில்லையென்றும், இதை நாற்பதாயிரம் கோயிலிற்

சொல்வதற்குத் தாம் காத்திருப்பதாகவும் பாரதியார் தம் சுயசரிதையிற் குறிப்பிட்டுள்ளார். வளரும் இளம் பருவத்திலேயே தாய்மொழிப் பற்றில் அவர் கொண்டிருந்த அதிதீவிர வேட்கையும் அன்னிய மொழியாம் ஆங்கில மொழியிடத்தில் அவர் கொண்டிருந்த கசப்புணர்ச்சியும் காணலாம். ஆயினும் அவருக்கு ஆங்கிலம் நன்றாக வந்தது. ஆங்கிலேயரும் வியக்கும் வண்ணம் அம்மொழியிற் பேசவும் எழுதவும் அவர் வல்லவரானார். 'ஷெல்லிதாசன்' என்ற புனைபெயரில் அவர் ஆங்கிலக் கவிதைகள் பலவற்றை மொழிபெயர்த்துத் தமிழில் தந்தார். பகவத்கீதையை வடமொழியிலிருந்து எளிமையாக இனிமையாகத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். காசியில் சில காலம் தம் அத்தை வீட்டில் வசிக்க நேர்ந்த காரணத்தினால் அவருக்கு இந்திமொழியில் இயல்பாகவே புலமை வாய்த்திருந்தது. புதுவையிற் பல ஆண்டுகள் வாழவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுவிட்டது. வங்காளத்தில் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தபொழுது வங்காள மொழியிலும் புலமை பெற்று விளங்கினார். இலத்தீன், ஜெர்மன் முதலிய மொழிகளை விரும்பிக் கற்றுக்கொண்டார். திருக்குர் ஆனைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்ற முகமது நண்பரின் வேண்டுகோளினை ஏற்று அரபு மொழியைப் பயின்றார். திராவிட மொழிகளில் தெலுங்கும், மலையாள மொழியும் அவருக்குத் தெரியும். இவ்வாறு பல மொழிகளை அறிந்திருந்த பாரதி,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று சொல்வாரானால் அக்கூற்று உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை எனக் கருதலாம்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும்'' எனப் பாரதியார் பாஞ்சாலி சபதத்தின் முதற்பதிப்பின் முன்னுரையிற் கூறியுள்ளார்.

அக்கால அரசு தமிழிற்கு ஆக்கம் செய்யவில்லை என்பதனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தமிழ்நாட்டில் நடைபெறும் ராஜாங்கம் தமிழ்ப் பாஷையில் தேர்ச்சியுடையதன்று. 'தமிழ் முழு நாகரிக முடையதா, இல்லையா' என்பதைப் பற்றிய சந்தேகங் களுடையது; ஆதலால் தமிழ்ப் படிப்பில்லாமல், தமிழ் ஞானமில்லாமலும் ஸந்தோஷமடைந்திருக்கும் இயல் புடையது."

இவ்வாறு பாரதி பிரசுராலயம் பதிப்பித்த 'பாரதி நூல்கள்' (கட்டுரைகள், பக்கம் 401) என்னும் நூலிற் கண்டுள்ளது. மேலும் பாரதியார் இந்நூலின் பிறி தோரிடத்தில்,

> யாவருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிகச் செல்வம் சேர மார்க்கமில்லை என்பது ப்ரத்யக்ஷம். எளிய நடையில் எழுதினால் அச்சுத் தொழிலும் பொதுஜனக் கல்வி

யும் பரவிவரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும்.

(மேற்படி, நூல், பக். 584)

என்றும் குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

தமிழ்மொழி புரையோடிப் போயிருந்த நிலைமையினைக் கீழ்வரும் பகுதியில் பாரதி நம் கண்முன்கொண்டு வந்து காட்டுகின்றார்.

"உண்மையான கவிதைக்குத் தமிழ்நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகளை மொழிபெயர்த்துப் போட்டால் பலர்வாங்கி வாசிக்கிறார்கள். அல்லது, இங்கிலீஷ் முறையைத் தழுவி மிகவும் தாழ்ந்த தரத்தில் பலர் புது நாவல்கள் எழுதுகிறார்கள். அவர்களுக்குக் கொஞ்ச லாபமேற்படுகிறது. தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும் பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒருசிலர் தோன்றியிருக்கிறார்கள்; இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை; அச்சிட்டால் வாங்குவாரில்லை. அருமை தெரியாத ஜனங்கள் புதிய வழியில் ஒரு நூலைக்காணும் போது அதில் ரஸமனுபவிக்க வழியில்லை" (மேற்படி, நூல் ப. 397)

தமிழ்மொழி இந்த வகையில் பின் தள்ளப்பட்டுப் பிற்போக்கு நிலையில் ஆட்சியாளராலும், பொதுமக்களாலும் கற்றறிந்த பெரியவர்களாலும் கருதப்பட்டு வந்த—இழிநிலையில் எண்ணப்பட்டு வந்த நிலையை மாற்றவேண்டுமென்று ஆவேசம் கொள்கிறார் பாரதியார். எனவே மக்களைப் பார்த்துப் பின்வருமாறு அறைகூவல் விடுக்கிறார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்வீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

*அடுத்த பாடலில் தமிழ்ப் புலவர்கள் பற்றிப் பெருமிதம் தோன்றப் பாரதியார் முழங்குகின்றார்.*

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை, உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒருசொற் கேளீர்
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

*தமிழ்மொழியினை 'வானமளந்த தனைத்து மளந்த வண்மொழி'யாக மாற்றுவதற்குப் பாரதியார் ஆக்க முறைகளின் வழி வகைகளை வகுத்திடுகின்றார். வெறும் சொல்வீச்சுக் கவிஞராக இல்லாமல் செயல்திட்டம் செம்மையுற வடிக்கும் செயல் வீரராகவும் பாரதியார் விளங்குவதனைப் பின்வரும் பாடலிற் கண்டு தெளியலாம்.*

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;

மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

இவ்வாறு ஆக்க வழிகளில் முயன்று தமிழை அரியாசனம் ஏற்றி அவனியிலுள்ளோர் அறியும்படி செய்துவிட்டால் நிகழப்போவது என்ன என்பதனையும் பாரதியாரே பின்வருமாறு நெஞ்சு உவக்கும் வகையில் சுட்டிச் சென்றுள்ளார்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்,
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்குங் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

இந்த நிலையைத் தமிழ்மொழி எட்டிப் பிடித்தல் உறுதி என்று கருதினார் பாரதியார். எனவேதான்,

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே
வான மளந்தத னைத்து மளந்திடு
வண்மொழி வாழிய வே
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
யிசை கொண்டு வாழிய வே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி யோங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

என்று பாடினார். எனவே பாரதியார் அறிந்த பல மொழிகளிலே தமிழ்மொழியே இனிமையுடையது என்பதும், தமிழின் சுவை கண்டவர்கள் அமரர் உலகின் சிறப்பை இவ்வவனியிலேயே கண்டவர் ஆவர் என்பதும் வெள்ளிடை மலை.

# 5. பாரதியாரின் தேசிய கீதங்கள்

## 1. பாரதியார் வாழ்வு

1882ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் எட்டைய புரத்தில் சின்னசாமி ஐயர்—இலட்சுமி அம்மாள் அவர்கள் வாழ்ந்த இல்லற வாழ்வின் இனிய பயனாய்த் தோன்றிய சுப்பிரமணிய பாரதியார், தம் கவிப்புலமையால் தம் பதினொன்றாவது வயதிலேயே 'பாரதி' என்னும் சிறப்புப் பட்டத்தினைப் பெரும்புலவர்கள் வழங்கச் சிறப்புடன் பெற்றார். வாழ்வின் தொடக்கக் காலத்திலேயே பெற்றோரை இழந்து துன்பப்பட்ட பாரதியார், அது போது காசியில் வசித்துவந்த தம் அத்தையார் ஆதரவில் கல்வி கற்றார். நாட்டு விடுதலை வேள்வியில் பங்கு கொண்டார். படித்தறியாத பாமரரையும் தோள் தட்டித் துடித்தெழச் செய்யுமளவிற்கு அவருடைய தேசிய கீதங்கள் உணர்ச்சி விளைவிப்பனவாய் அமைந்தன. அன்னிய ஆங்கில ஆட்சியின் அடக்குமுறைக்குப் பயந்து பாரதியார் புதுச்சேரியில் சிலகாலம் மறைந்து வாழ்ந்த பொழுது எண்ணற்ற ஏற்றமிகு பாடல்களை எழுதிக் குவித்தார். சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகையில் பொறுப்பேற்றுச் சிலகட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதினார். திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாளிடம் நீங்காப் பக்திகொண்டு வாழ்ந்த அவர் இறுதியில் உடல் நலிந்து 1921ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## 2. விடுதலைக்குப் பாடிய வீரக் கவிஞன்

பாரதியார் பல பாடல்கள் எழுதியிருந்தாலும் அவரை நாட்டு மக்கள் விடுதலை வேட்கை வெறி கொண்ட கவிஞர் என்றே என்றென்றும் நோக்குவர். காரணம் நாடு அன்னியர் ஆட்சியால் அடிமையுற்று, தாழ்வுற்று விடுதலைத் தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற நேரத்தில் அன்னிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுத்துப் பாட்டிசைத்து மக்கள் நெஞ்சில் சுதந்திரக் கனலைச் சுடர்விட்டு எரியச் செய்த ஒப்பற்ற திருப்பணி பாரதியார் என்னும் மகாகவி ஒருவரையே சேரும் எனலாம்.

## 3. தேசீய கீதங்கள்

1908ஆம் ஆண்டில் "ஸ்வதேச கீதங்கள்" என்னும் நூல் முதன்முதவில் வெளியாயிற்று. 1909ஆம் ஆண்டில் "ஜன்மபூமி" (ஸ்வதேச கீதங்கள்—இரண்டாம் பாகம்) வெளியாயிற்று. "மாதா மணிவாசகம்" என்னும் நூல் 1914ஆம் ஆண்டில் தென்னாப்பிரிக்காவில் வெளியாயிற்று. பாரதியாரின் நெருங்கிய நண்பர் திரு. பரலி சு. நெல்லையப்பர் "நாட்டுப் பாட்டு" என்னும் பாடல் தொகுதியை முதலில் வெளியிட்டார்.

'முகவுரை' என்ற தலைப்பில் பாரதியார் எழுதியிருக்கும் சில வரிகள் சிந்திக்கத் தக்கன. அவை வருமாறு:

> இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம் அவாங்மன கோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில், ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னையறியாது குதூஹலமடைகின்றது.

சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமே யன்றி அசேதனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே, நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தர்மம்—ஓர் மார்க்கம் தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர்போல, அவ்வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரத நாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய "தேசபக்தி" என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதை மலர் புனைந்து, மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.

நான் எதிர்பார்த்திராத வண்ணமாக மெய்த்தொண்டர்கள் பலர் "இம்மலர்கள் மிக நல்லன" என்று பாராட்டி, மகிழ்ச்சியறிவித்தார்கள். மாதாவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பதமலர்க்குச் சில புதிய மலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சியளிக்குமென்றே நினைக்கின்றேன்; "குழலினிது யாழினி தென்ப தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" என்பது வேதமாதலின்.

மேற்காணும் பகுதிகளிலிருந்து நாம் தெரிந்து கொள்வன நான்கு செய்திகளாகும்.

1. "சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய 'தேச பக்தி' என்ற நவீன மார்க்கம் தோன்றியது" என்று பாரதியார் குறிப்பிடுவதால் பாரதியார் தேசபக்தியிற் கொண்டுள்ள அளவிறந்த நாட்டம் புலனாகின்றது.

2. "நல்லோருடைய குணங்களிலே குறைவுடைய வனாகி யானும் தேவியினது திருவையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன்" என்று பாரதியார் கூறுவதால் தம்மைக் குறைவுடைய பிறவியாகக் கூறிக் கொள்ளும் அடக்கவுணர்வும், தேவியின் திருவருளால் எல்லாம் சித்திக்கும் என எண்ணும் அவர்தம் சக்தி வழிபாடும் ஒருங்கே வெளிப்படுகின்றன.

3. "நான் எதிர்பாராத வண்ணமாக மெய்த் தொண்டர்கள் பலர் 'இம்மலர்கள் மிக நல்லன' என்று பாராட்டி மகிழ்ச்சி அறிவித்தார்கள்"—இதனால் பாரதியார் வாழ்ந்த காலத்திலேயே பலரால் தேசிய கீதங்கள் பாராட்டப்பெற்றன என்ற செய்தி விளங்கு கின்றது.

4. "குழலினிது யாழினி தென்ப தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்" என்பது 'வேதமாகலின்' என்ற இறுதிப் பகுதியால் பாரதியார் திருக்குறளையே வேதம் என்று எண்ணி மதித்த பான்மை புலனாகின்றது.

## 4. தேசிய கீதங்கள்—உள்ளீடு

'தேச பக்திப் பாடல்கள்' என்ற பெருந்தலைப்பில் 1. பாரத நாடு, 2. தமிழ்நாடு, 3. சுதந்திரப் பள்ளு, 4. தேசிய இயக்கப் பாடல்கள், 5. தேசியத் தலைவர்கள், 6. பிற நாடுகள் என்ற ஆறு சிறு தலைப்புகளில் ஐம்பத்து

மூன்று (53) பாடல்கள் கொண்டதாகத் தேசிய கீதங்கள் அமைந்துள்ளன.

## 5. பாரத நாடு

பாரதியார் நாட்டுப்பற்றினை உயிர் மூச்சாகக் கொண்ட கவிஞர். எனவே பாரதியாரின் தேசிய கீதங்களில் நாட்டுப்பற்று என்னும் நல்ல 'உயிர்காற்று' பெரிதும் வீசக் காணலாம். தாயுமானவர் ஆனந்தக் களிப்பு மெட்டில் அமைந்துள்ள வந்தே மாதரப் பாடல்,

> ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
> அன்னியர் வந்து புகலென்ன நீதி?

என்பதனையும்,

> ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
> ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே

என்பதனையும் வலியுறுத்துகின்றது.

'நாட்டுத் தாயே உனக்கு வணக்கம்' என்னும் பொருள் தரும் 'வந்தே மாதரம்' என்னுஞ் சொல் ஒரு வங்காளச் சொல்லாகும். 'நொந்தே போயினும் வெந்தே மாயினும்' பாரத தேசத்தவர் உவந்தே சொல்வது வந்தே மாதரம் என்கிறார் பாரதியார்.

> எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
> யிருந்தது மிந்நாடே

என்று தொடங்கும் பாடல் மாணவர்கள் மனத்தில் இருத்த வேண்டிய பாடலாகும். ஏனெனில் பாரத மணித் திருநாட்டில் பிறந்ததற்காக ஒவ்வோர் இந்தியனும் பெருமைப்பட வேண்டும் என்பதனைப் புதிய நோக்கில் பாரதியார் காணுவதனை இப்பாடலில் காணலாம்.

'பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு' என்ற பாடலிலும் அப்பெருமித உணர்வு சுடர்விட்டு ஒளி விடுவதைக் காணலாம்.

## 6. பாரத நாட்டின் ஒருமைப்பாடு

புன்னாகவராளி இராகத்தில் அமைந்துள்ள 'பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்' என்று தொடங்கும் பாடல் மனப்பாடஞ் செய்யவேண்டிய பாடல் எனலாம். ஏனெனில், இப் பாடலில்தான் பாரத நாட்டின் ஒருமைப் பாடு மிகச் சிறப்பாகக் கிளத்தப்படுகின்றது. சான்றாகச் சில அடிகள் :

வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்
மேலைக்கடல் முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித்தல மனைத்துங் கோயில் செய்குவோம்...
சிங்களத் தீவினுக் கோர்பால மமைப்போம்...
சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துப்
தோணிக ளோட்டிவிளை யாடி வருவோம்...
ஓயுதல் செய்யோம் தலைசாயுதல் செய்யோம்...
சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்...

## 7. பெருமித ஊற்று

பூபாள இராகத்தில் அமைந்துள்ள 'மன்னு மிமய மலை யெங்கள் மலையே' என்று தொடங்கும் பாடலும் பெருமிதத்தின் ஊற்றாயமைந்திருக்கக் காணலாம். இப் பாடலில்தான் பாரதியார்,

இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்

என்று தாய்நாட்டுக்காக மக்கள் மேற்கொள்ள வேண்டிய சபதத்தினை எடுத்து மொழிகின்றார்.

'ஜயபாரத' என்ற பாடலில் பாரத அன்னையைப் பலபடப் பாரதியார் வாழ்த்தி வணங்குகின்றார். அடுத்து, 'பாரதமாதா' என்ற தலைப்பில்,

ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகின்பக் கேணி

என்று இறைவனையும், இறைவன் படைத்த உயிர்களை யும், அவ்வுயிர்கள் துய்க்க வேண்டுமென்று அவன் படைத்த இன்பங்களையும் சுட்டுகின்றார்.

## 8. பாரதத் தாய்

காவடிச் சிந்தில் 'ஆறுமுகவடி வேலவனே' என்ற வர்ண மெட்டில் அமைந்துள்ள 'எங்கள் தாய்' என்ற தலைப்பில் அமைந்துள்ள பாடல் நெஞ்சினிலே நிறுத்தற் குரியது.

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
    சூழ்நிலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
    இயல்பின ளாமெங்கள் தாய்

என்று பாரதத்தாயின் பழமையும் பெருமையும் பாரதியா ரால் பசுமரத்தாணியென நம் மனத்தில் பதியும்வண்ணம் கிளத்தப்பட்டுள்ளன.

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்புமொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்

என்ற பாடல் ஒருமித்த பாரதத்தின் உயர்நிலையை, உயிர் நிலையை எடுத்து மொழிகின்றது.

பூமியினும் பொறைமிக்குடையாள்

என்ற அடியும்,

நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயினவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள்

என்னும் பாடலும் பாரதத் தாயின் பண்பினைப் பகர வல்லனவாக உள்ளன. 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி, உள்ளத்திலே உவகையினையும் ஒரு புத்தெழுச்சியினையும் தரவல்லது ''பொழுது புலர்ந்தது; யாம் செய்த தவத்தால் புன்மை யிருட்கணம் போயின யாவும்'' என்ற அடிகளில் அடிமையிருளில் மூழ்கி அல்லலுற்றுத் தவிக்கும் பாரத மக்களுக்கு ஒரு நம்பிக்கையொளியினை ஏற்றிக் காட்டு கின்றார். 'பாரத மாதா நவரத்னமாலை', 'பாரததேவி யின் திருத்தசாங்கம்' முதலிய பாடல்கள் பாரததேவியை வழிபட்டுப் பாட்டியற்றிய பாரதியாரின் நாட்டுப் பற்றினை நயமுறக் கிளத்தி நிற்கின்றன.

## 9. தாயின் மணிக்கொடி

"தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்" என்று தொடங்கும் பாடல்

பாமர மக்களின் நெஞ்சங்களையெல்லாம் அள்ளும் வகையில் 'தாயுமானவர் ஆனந்தக் களிப்பு வர்ணமெட்டில்' அமைந்திருக்கக் காணலாம்.

தங்கள் நல்லுயிரீந்துங் கொடியினைக் காக்கும் நம்பற்குரிய வீரர்களைப் பாரதியார் தாயின் மணிக்கொடியின் கீழ் அணிவகுத்து நிற்பதனைப் பார்க்கின்றார்.

## 10. பிரிவெனும் பேதமை

'நொண்டிச் சிந்து' மெட்டில் அமைந்துள்ள 'நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்' என்ற பாடல் பாரத நாட்டின் அன்றைய நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுவதாகும்.

ஐந்து தலைப் பாம்பு என்பானாம் அப்பன்; ஆனால் மகன் ஆறு தலைப் பாம்பு என்று சொல்லிவிட்டால் அந்த ஒரு காரணத்தினாலேயே இருவரும் நெஞ்சம் மாறுபட்டுப் பகைகொண்டு நெடுநாள் அவ்வாறே வாழவும் தலைப்பட்டுவிடுவார்களாம். இதனை நயம்பட உரைக்கிறார் பாரதியார். கஞ்சி குடிப்பதற்குரிய வாய்ப்பினைக் கூடப் பெறாத பலர், அன்று பாரத தேசியத்தில் இருந்தார்களாம். அதுவல்ல கொடுமை! அதனினும் கொடுமை, தாங்கள் ஏன் கஞ்சிகூடக் குடிக்க முடியாமல் துன்பப்படுகிறோம் என்று தெரிந்துகொள்ளக்கூடிய அறிவுமில்லாதவர்களாக அம்மக்கள் வாழ்கிறார்களாம். நாள்தோறும் பஞ்சத்தால் வாடிப் பட்டினியால் பரிதவித்துச் செத்து மடியும் இக்கோடானு கோடி மக்களின் துயரினைத் தீர்ப்பதற்கு வழியேதும் இல்லையா என்று கருதிக் கவி பாடிடும் பாரதியாரின் பாட்டிலே நெஞ்சைப் பிழியும் அவலம் ததும்பி நிற்பதைக் காணலாம்.

## 11. புதிய பாரதம்

எனவே, பாரதி புதிய பாரதத்தைக் கற்பனைக் கண் கொண்டு காண்கிறார். வலிமையற்ற, பொலிவற்ற, பொறியிழந்த, ஒளியிழந்த, கிலிபிடித்த பாரதம் போய் ஒளி படைத்த, உறுதிகொண்ட பாரதம் உருவாவதனை மனக்கண்முன் கொண்டுவந்து காண்கிறார் பாரதியார்.

'பாரத சமுதாயம் வாழ்கவே' என்னும் பாடல் மிகவும் முக்கியமான பாடலாகும். இப்பாடலில், கனியும் கிழங்குந் தானியங்களும் கணக்கின்றித் தரும் நம்நாட்டில் மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இருப்பதைக் காட்டி,

> இனியொரு விதி செய்வோம்—அதை
> எந்த நாளும் காப்போம்
> தனியொருவனுக் குணவிலை யெனில்
> ஜகத்தினை யழித்திடுவோம்

என்று வீர முழக்கமிடுகின்றார்.

> எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
> எல்லாரு மிந்திய மக்கள்
> எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
> எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்று முத்தாய்ப்பு வைக்கிறார்.

## 12. தமிழ்நாடு

பாரதநாட்டுப் பற்று பரக்கக் கொண்டிருந்த பாரதியார் தாம்பிறந்த தமிழ்நாட்டினை மறந்தவரல்லர். "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து

பாயுது காதினிலே" என்று அவர் பாடியிருப்பதனைப் பழக்கும்பொழுது அவர்தம் செந்தமிழ் நாட்டுப்பற்று செவ்வியின் புலனாகின்றது. "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்றும், "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்றும் "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" என்றும், "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார மென்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு" என்றும் பாரதியார் பெருமிதம் பொங்கித் ததும்பிப் பாடுகின்றார். தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களைப் பார்த்து, பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் புத்தம் புதிய கலைகளை மேல்நாடுகள் வளர்ப்பதுபோல் தமிழ் நாடும் வளர்க்க வேண்டும், என்று கூறி,

சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று வேண்டுகோளும் விடுக்கின்றார் பாரதியார்.

## 13. தமிழ்மொழியின் சிறப்பு

ஆன்ற மொழிகளினுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்

என்று தமிழ்மொழியைக் குறிப்பிட்ட பாரதியார், பிறிதோரிடத்தில்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே,

தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

என்று தமிழ் மக்களுக்குக் கட்டளையிடுகின்றார்.

"தமிழ்" என்ற தலைப்பில் பாரதியார் பாடியுள்ள பாடல் மனப் பாடஞ் செய்தற்குரியதாகும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சியில்லை

என்றும், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழ் மொழியில் பெயர்த்தலோடு, இறவாத புகழுடைய புது நூல்களைத் தமிழ்மொழியில் இயற்றிட வேண்டும் என்கிறார். உள்ளத்தில் உண்மையொளி உண்டானால் வாக்கினில் ஒளியுண்டாகும். கலைப்பெருக்கமும் கவிப் பெருக்கமும் வெள்ளப்பெருக்கம் போல் மேவிடுமானால் பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவிபெற்றிடுவர் என்று கூறி, முடிவாக,

தெள்ளுற்ற தமிழமுதி ன்சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

என்கிறார்.

வான மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே

என்றும்.

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

என்றும் பாரதியார் கொண்ட வேட்கை அவர்தம் செந்தமிழ்ப் பற்றைச் சீரிதாகக் கிளத்தும்.

சிலப்பதிகாரச் செய்யுளைக் கருதியும்
திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவு மழகுங் கருதியும்
'எல்லையொன் றின்மை' யெனும் பொருளதனைக்

கம்பன் குறிகளாற் காட்டிட முயலு
முயற்சியைக் கருதியும் முன்புநான் தமிழச்
சாதியை யமரத் தன்மை வாயந்தது''வென்
றுறுதி கொண்டிருந்தேன்

என்கிறார் பாரதியார்.

## 14. சுதந்திரப் பள்ளு

தில்லைவெளியிலே கலந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ

என்னும் பாடல் சென்ற நூற்றாண்டில் புகழ் சிறக்க விளங்கிய பாடலாகும். அப்பாடலின் வர்ணமெட்டில் அமைந்ததே 'சுதந்திரப் பெருமை' என்னும் தலைப்பில் அமைந்த பாடல்.

'வீர சுதந்திரமே' பாரத நாட்டு மக்களின் உயிர் மூச்சான லட்சியம் என்பதனை இப்பாடலில் பாரதியார் புலப்படுத்தும் பாங்கே தனித்திறன் வாய்ந்ததாகும்.

வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? — என்றும்
ஆரமுதுண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?

என்ற தொடக்கப் பாடல் ஒரு சிறந்த தொடக்கம் எனலாம்.

கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?

என்றும்,

கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்
கைகொட்டிச் சிரியாரோ?

என்றும் அவர் காட்டும் செய்திகள் கருத்தாழம் மிக்கன வாகும்.

'சுதந்திரப் பயிர்' என்ற பாடல் சோகம் இழை யோடும் பாடலாகும்.

ஓராயிர வருட மோய்ந்து கிடந்தபினர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?

என்றும்,

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ

என்றும் பாரதியார் கூறும் கூற்றில் அவல உணர்வுகள் (element of pathos) பொங்கி நிற்பதனைக் காணலாம்.

என்று தணியு மிந்தச் சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?

என்ற அடிகள் வைரமணி விளக்குகள். எந்நிலையிலும் சுதந்திர தேவியின் திருப்பாதத்தினை மறவாத நிலையினைப் பாரதியார் 'சுதந்திர தேவியின் துதி' என்ற பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

## 15. பெண் விடுதலை

பெண்ணின் விடுதலைக்குப் பாடிய பாவலன் பாரதி, பெண்ணுக்கு விடுதலை இங்கில்லையென்றால் இம் மண்ணில் எவருக்கும் விடுதலை இல்லை என்கின்றார். பறையருக்கும் தீயர் புலையருக்கும் விடுதலை என்று பாடிய கவிஞர்,

மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம்

என்று குறிப்பிட்டு,

தாதரென்ற நிலைமைமாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வ மிந்த நாட்டிலே

என்கிறார்.

## 16. உழவும் தொழிலும்

திருவள்ளுவர் உழுதொழில் செய்வோர்க்கு உயரிடம் தந்து பாராட்டியது போலவே பாரதியாரும்,

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்

என்று கூறிப் பாட்டின் இறுதியில்

நாமிருக்கு நாடு நமதென்ப தறிந்தோம்
நமக்கே யுரிமையா மென்ப தறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்கு மினிஅடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை செய்துவாழ்வோம்

என்று சுதந்திரப் பிரகடனம் செய்கிறார்.

## 17. தேசிய இயக்கம்

சத்ரபதி சிவாஜி தன் படை வீரர்களுக்குக் கூறுவதாக அமைந்துள்ள பாடலின் மையக்கருத்து,

பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர்; இந்நினை வகற்றாதீர்
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்: இந்நினை வகற்றாதீர்

என்பதாகும்.

"தொண்டு செய்யு மடிமை—உனக்குச் சுதந்திர நினைவோடா" என்ற பாடல் ஒவ்வோர் இந்தியனும் உளம் துடித்துப் படிக்கவேண்டிய பாடலாகும்.

**சேர்ந்து வாழு வீரா? உங்கள்**
**சிறுமைக் குணங்கள் போச்சோ?**

என்று சுயராஜ்யம் வேண்டுமென்ற பாரத நாட்டு மகனொருவனை ஆங்கிலேய அதிகாரி ஒருவன் கேட்பதாக அமைந்துள்ள பாடல் எண்ணலூட்டல் சக்தி (thought provoking) நிறைந்த பாடலாகும். 'தேச பக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி' என்ற பாடலையும் உடன் காணவேண்டும்.

**வந்தே மாதர மென்றுயிர் போம்வரை**
**வாழ்த்துவோம் முடிதாழ்த்துவோம்**
**நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்**
**நாய்களோ பன்றிச் சேய்களோ?**
**ஒற்றுமை வழியொன்றே வழியென்ப**
**தோர்ந்திட்டோம்—நன்கு—தேர்ந்திட்டோம்**
**சதையைத் துண்டு துண்டாக்கினு முன்னெண்ணம்**
**சாயுமோ ஜீவன்—ஓயுமோ**

என்ற அடிகள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க நினைக்கும் தேசபக்தன் உள்ளத்தில் என்றென்றும் நின்று நிலவும். 'நடிப்புச் சுதேசிகள்' என்ற பாடலைப் பலமுறை பயில்க.

**சொந்தச் சகோதரர்கள்**
**துன்பத்திற் சாதல் கண்டும்**
**சிந்தை யிரங்காரடீ—கிளியே**
**செம்மை மறந்தாரடீ**

என்றபடி நடிப்புச் சுதேசிகளைப் பாரதியார் நமக்கு இனங்காட்டுகின்றார்.

## 18. தேசியத் தலைவர்கள்

நாட்டு விடுதலைப் போரினை முன்னின்று அகிம்சை வழியில் நடத்தி நல் வெற்றி பெற்றவர் நாட்டுத் தந்தை அண்ணல் காந்தியடிகளாவர் அவரைப் பாரதியார் பின் வருமாறு புகழ்கின்றார் :

வாழ்கநீ! எம்மான், இந்த
　　வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
　　விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
　　பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
　　மஹாத்மா! நீவாழ்க! வாழ்க!

குரு கோவிந்தரையும், தாதாபாய் நவுரோஜியையும் பூபேந்திரரையும், திலகரையும், லாலா லஜபதிராயையும், வ.உ சிதம்பரனாரையும் வாழ்த்திக் கவிதைகள் பாடி யுள்ளார்.

## 19. பிறநாடுகள்

மாஜினி செய்த சபதம், வீழ்ந்த பெல்ஜியத்திற்கு வாழ்த்து, புதிய ருஷியாவுக்குப் பாராட்டு, பீஜித் தீவில் துன்பப்படும் பெண்களுக்கு ஆறுதல் முதலியன பாரதியார் தம் கவிதையில் வடித்திருக்கும் செய்திகளாகும்.

வீழ்ந்த பெல்ஜியம் நாட்டை 'அறத்தினால் வீழ்ந்து விட்டாய்' என்று சொல்லி உவமையாக ஒரு காட்சியையும் பாரதியார் காட்டுகின்றார்.

முறத்தினாற் புலியைக் காக்கு மொய்வரைக்
குறப்பெண் போலத்
திறத்தினால் எளியை யாகிச் செய்கையால்
உயர்ந்து நின்றாய்.

ஜாரி சக்கரவர்த்தியின் வீழ்ச்சியை இமயமலை வீழ்ந்த தற்கொப்பாகக் குறிப்பிட்ட பாரதியார் ஓர் அரிய உவமையினையும் கையாளுகின்றார்.

புயற்காற்றுச் சூறைதன்னில்
திமுதிமென மரம் விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போல

என்ற உவமை அழகியதும் அரியதுமாகும்.

பீஜித் தீவின் கரும்புத் தோட்டத்திலே அவதியுறும் பெண்களை நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகின்றார். கால்களும் கைகளும் சோர அவர்கள் வருந்துவது, விம்மி விம்மியழுவது, நெஞ்சங் குமுறுவது, துன்பப்பட்டு மடிவது அனைத்தும் பாரதியாரால் அவலந் தோன்றப் பாடப் பட்டுள்ளன.

## 20. முடிவுரை

பாரதியார் பல திறப்பட்ட பாடல்களைப் பாடியிருந் தாலும் அவர் நாட்டு மக்களால் நினைவு கூறப்படுவது அவர்தம் தேசிய கீதங்களால் ஆகும். விடுதலை வேட்கை வெறிகொண்டு பாடிய தேசியக் கவிஞர் அவர் எனலாம். நாடு விடுதலை பெற்ற பிறகும் அவர் பாடிய தேசிய கீதங்கள் மக்களிடையே வாழ்கின்றன. ஏனெனில் அப் பாடல்களில் அமைந்துள்ள சுதந்திர உணர்வு என்றென்றும் வாழவல்லனவாகும். பாரதியார் பக்திப் பாடல்களும், காதற் பாடல்களும், தத்துவப் பாடல்களும், பாடியிருப்

பினும் அவருடைய தேசிய கீதங்களால் அவர் காலத்தின் கருவாகவும் தேவையாகவும் கர்த்தாவாகவும் விளங்கிய பான்மை தெற்றெனப் புலனாகின்றது.

எனவே பாரதியரின் தேசிய கீதங்களைப் பயில்கிறவர்கள், அப் பாடல்களில் அமைந்துள்ள,

1. பாரதநாட்டுப் பெருமை
2. நாட்டின் அன்றைய அவலநிலை
3. புதிய பாரதம்
4. நாட்டொருமைப்பாடு
5. தமிழ்மொழிப்பற்று
6. தமிழ்நாட்டுப்பற்று
7. தேசியத் தலைவர் பாராட்டு
8. பிறநாடுகளின் தேசிய உணர்வுகள்
9. பாரதியின் பாநலம்

முதலியனவற்றை ஊன்றிக் காணவேண்டும்.

# 6. பாரதி கண்ட தேசிய ஒருமைப்பாடு

பாட்டுக்கொரு புலவன் பாரதி என்று நாட்டு மக்களால் நயமுறப் பாராட்டப் பெறும் பாரதியார், விடுதலை வேட்கை வெறிகொண்ட ஓர் ஒப்பற்ற கவிஞராவர். இந்திய நாட்டின் இணையிலாத விடுதலைப் போராட்டத்தில் வீறுடன் பங்கு கொண்ட நாட்டுப்பற்று நிறைந்த நல்ல கவிஞர். அவருக்குத் தாம் பிறந்த தாய் நாடாம் இந்தியத் திருநாட்டை எண்ணிப் பார்க்கும் பொழுதெல்லாம் ஒரு பெருமித உணர்ச்சி தோன்று வதனைக் காணலாம்.

எந்தையுந்தாயு மகிழ்ந்து குலாவி
    யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
    முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
    சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தியென்
    வாயுற வாழ்த்தேனோ

என்று 'நாட்டு வணக்கம்' பாடுகின்றார் கவிஞர். நாட்டின் உயர்விற்கு நற்காரணமாய்த் துலங்கும் நங்கையர் புகழை யும் நெஞ்சினிக்கப் பாடுகின்றார் பாரதி.

.....................எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
    அறிந்தது மிந்நாடே—அவர்

கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே

என்கிறார்.

மன்னு மிமயமலை யெங்கள் மலையே

என்றும்,

மாநில மீதது போற் பிறிதிலையே

என்றும்,

இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே

என்றும்,

இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே

என்றும் பரவசத்துடன் பாடும் பாரதி,

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மி஁தை மெய்க்கிலை யீடே

என்றும் பாடிப் பாடிப் பெருமிதம் கொள்கிறார்.

மேலும் சத்ரபதி சிவாஜி, தன் சைனியத்திற்குக் கூறியதாக அவர் எழுதும் பாடலில்,

பாரத பூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர்: இந் நினைவகற் றாதீர்
பாரத நாடு பார்க்கெலாம் திலகம்
நீரதன் புதல்வர்; இந் நினைவகற் றாதீர்

என்று மீண்டும் மீண்டும் குறிப்பிடுகின்றார்.

'புன்னாக வராளி' இராகத்தில் அமைந்த 'பாரத தேசம்' என்ற பாடலில் பாரதியின் நாட்டு ஒருமைப் பாட்டுணர்ச்சி தெளிவுறத் திகழ்வதனைக் காணலாம்.

சிந்துநதியில் நல்ல நிலாக் காலத்தில் ஒரு தோணி ஓடுகிறது. அத் தோணியில் சேர நாட்டுப் பெண்ணோடு தமிழ்நாட்டு இளைஞன் அமர்ந்துள்ளான். இருவரும் சுந்தரத் தெலுங்கிற் பாட்டிசைக்கின்றார்கள். நாட்டின் வடக்கே சிந்துநதி; கீழ்க்கோடியில் கேரளம்; அதனை யடுத்துத் தமிழ்நாடு; அதனையும் அடுத்து ஆந்திரா— இந்த நான்கு நாடுகளையும் ஒருங்கிணைத்து ஓர் உற்சாகப் பாடல். இப் பாட்டோடு நிற்கவில்லை பாரதி. 'கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டத்தினைக் காவிரி வெற்றிலைக்குப் பண்டமாற்றுச் செய்து கொள் வோம்' என்கிறார். சிங்க மராட்டியரின் சீர்சால் கவிதை களுக்குச் சேரநாட்டுத் தந்தங்களைப் பரிசளிப்போம் என்றும் காசி நகர்ப்புலவர் பேசும் உரை தனைக் காஞ்சிமா நகரிற் கேட்பதற்கு ஒரு கருவி செய்வோம் என்றும் உரைக் கிறார். இராசபுதனத்து வீரர் தமக்குக் கன்னடத்துத் தங்கத்தை வழங்குவோம் என்று கூறி மகிழ்கிறார் பாரதி. சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைத்துச் சேதுவை மேடாக்கி வீதி அமைத்து இரு நாடுகளுக்கிடையே நல்லுறவுப் பாலத்தை—நட்புறவுப் பாலத்தை அமைப் போம் என்கிறார். வங்க நாட்டில் ஆற்று நீர்ப் பெருக்கின் மிகுதியைத் திருப்பிவிட்டு நீர் வளம் குறைந்த மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம் என்கிறார்.

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்

என்றும்,

முப்பதுகோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொதுஉடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை

என்றும் பாரதி, 'பாரத நாடு' என்னும் வீணையில் 'ஒருமைப்பாடு' என்னும் கீதத்தினை இனிமையுற இசைக்கின்றார்.

'ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை ஜாதியில்' என்றும், 'இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே' என்றும் கூறி, கல்விச் செல்வம் பொருட்செல்வம் இரண்டனையும் பெற்று ஆண்களும், பெண்களும்—ஏன்? மனிதர் யாவரும் சரிநிகர் சமானமாக வாழ்வர் என்கிறார் எட்டையபுரம் தந்த எழிற்கவிஞர் பாரதியார்.

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்று அழுத்தந் திருத்தமாக மூன்று முறை முழங்குகின்றார் பாரதி.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்

என்று நாட்டு மக்களின் ஒற்றுமையினை வற்புறுத்தும் கவிஞர்.

எப்பதம் வாய்த்திடு மேனும் — நம்மில்
யாவர்க்கு மந்தநிலை பொதுவாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

என்று குறிப்பிடுகின்றார்.

தாயின் மணிக்கொடியின் கீழ்ச் செந்தமிழ் நாட்டுப் பொருநரும், சேரநாட்டு வீரர்களும், சிந்தை துணிந்த தெலுங்கர்களும், தாயின் சேவடிக்கே பணிசெய்திடு துளுவர்களும், கன்னடியர்களும், ஒட்டியராம் ஒரிஸாக் காரர்களும், 'போரிற் காலனும் அஞ்சக் கலக்கும்' மராட்டியர்களும், பொன்னகர்த் தேவர்களொப்ப நிற்கும் பொற்புடையாராம்' இந்துஸ்தானத்து மல்லர் களும், ராஜபுதனத்து வீரர்களும், பஞ்சநதத்துப் பிறந் தோரும், 'துஞ்சு பொழுதிலும் தாயின் பதத்தொண்டு நினைத்திடும்' வங்கத்தினரும் ஒன்றாகச் சேர்ந்து நின்று, தாயின் மணிக்கொடியைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திடும் அற்புதக் காட்சியின் மாட்சியினையும் பாடுகிறார் பாரதியார்.

இவ்வாறு பாரதியார், பாரத நாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமை உணர்வோடு—ஒருமைப்பாட்டுச் சிந்தையுடன், பாரதத் தாயின் திருப்புதல்வர்கள் என்ற வீறார்ந்த பெருமையுடன் வாழவேண்டும் என்பதனைச் சித்திரித்துக் காட்டி நிற்பதோடு 'சேதமில்லாத இந்துஸ் தானத்தில் பேதமில்லாமல் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஒருங்கிணைந்து வாழும் மாட்சியினை—பாரத நாட்டின் ஒருமைப்பாட்டினைப் பண்போடும் பயனோடும் குறிப்பிடுகின்றார்.

# 7. பாரதியார் கண்ட சமுதாயம்

"புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத்
தமிழ்மொழியைப் புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும் வசை"[1]

தனை நீக்க வந்த வண்டமிழ்க் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார்.

"எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான்"[2]

என்று தம் 'பாஞ்சாலி சபதம்' முன்னுரையில் கூறும் பாரதியார்,

"சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை எந்நாளும் அழியாத
மகா கவிதை"[3]

என்று எட்டையபுரம் மன்னருக்கு எழுதிய சீட்டுக்கவி ஒன்றில் தமது கவிதைகளைப் பற்றித் தாமே திறனாய்வு செய்துள்ளார்.

---

1. பாரதியார் கவிதைகள்; ஓலைத்தூக்கு.
2. பாரதியார் கவிதைகள்; அனுபந்தங்கள்,
3. பாரதியார் கவிதைகள்; ஓலைத்தூக்கு,

தம்மை சூழ்ந்திருந்த சமுதாயத்தை மறந்து எங்கேயோ பார்த்து, எதையோ நினைத்து, எவ்வாறோ பாடிய புலவர்கள்போல் பாரதி பாடவில்லை. தம்மைச் சூழயிருந்த சமுதாயத்தை உற்று நோக்கினார்; அவர்கள் இழிநிலையை அவர்களைப் பிணித்திருக்கும் சிறுமைக் கட்டுகளை நினைந்தார்; அவர்களும் சுவைத்து இன்புறத் தக்க நிலையில் பாடினார்.[4]

வாஞ்சையுண்டோ வயதங்ஙனமே இரு
பத்திரண்டாமளவும் வெள்ளைப்
பண்மகள் காதலைப் பற்றி நின்றேன்[5]

என்னும் பாடல் அவர் உள்ளம் கருதுமளவுக்குச் சிறந்த படைப்பு எதனையும் தம் இருபத்திரண்டாம் ஆண்டு வரையிலும் படைக்கமுடியவில்லை என்பதனைக் காட்டி நிற்கிறது.

ஒவ்வொரு மொழி இலக்கியத்திலும் சில நூற்றாண்டு களுக்கு ஒருமுறை தோன்றி விளங்கும் புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க பெரும்புலவர் பாரதி. "வ உ. சிதம்பரம் பிள்ளையின் பேச்சையும் பாரதியின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர் பெற்றெழும்; அடிமைப்பட்ட நாடு ஐந்து நிமிடங்களில் விடுதலை பெறும்; புரட்சி ஓங்கி எழும்" என வ உ.சி. வழக்கில் தீர்ப்புக் கூறிய ஆங்கில நடுவர் ஒருவரே கூறியிருக் கிறாராம்.[6]

கவிஞர்களில் மூவகையினர் உண்டு. நாடு இருந்த பழைய நிலையைப் பாடுவோர் ஒருவகையினர்; நாடு இப்

---

4. ப. அருணாசலம், கவியரசர் பாரதி, பக். 1.
5. பாரதியார் கவிதைகள், மூன்று காதல்,
6. கவியரசர் பாரதி, பக். 53.

போது இருக்கின்ற நிலையைப் பாடுவோர் மற்றொரு வகையினர்; நாடு இந்த நிலையையும் இருக்கின்ற நிலையையும் கூறி இனி இருக்கவேண்டிய நிலையையும் எடுத்துக் கூறுவோர் பிறிதொரு வகையினர். இதில் மூன்றாவது வகையினரைச் சேர்ந்தவர் மகாகவி பாரதியார். பாரத சமுதாயம் தன்னைப் பிணித்திருக்கும் எல்லாச் சிறுமைக் கட்டுக்களிலிருந்தும் விடுதலை பெற்று முன்னாள்போல் ஆன்ம உணர்வில் தலைநிற்க வேண்டு மென்றே விரும்புகிறார். 'எண்ணமெல்லாம் நெய்யாக எம்முயிரின் உள்வளர்த்த வண்ணவிளக்'காகவே சுதந்திர வுணர்வைப் பாடுகிறார்.

தீரத்திலே படைவீரத்திலே — நெஞ்சில்
ஈரத்திலே உபகாரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரம் கண்டு

தருவதிலே உயிர்நாடான தம்நாடு சுதந்திரமிழந்து நிற்கும் நிலை பாரதிக்குப் பெரிதும் வருத்தத்தைத் தருகிறது.

"பின்னமுற்றுப் பெருமையிழந்தது நின்
சின்னமற்றழி தேயத்தில் தோன்றினேன்?"[7]

என மனம் நைந்து பாடுகிறார். இவ்வாறு பிறந்த நாட்டுப்பற்று இன்றைய சிறுமையை அகற்றிப் பண்டைய ஒளியுடைய பாரதத்தைக் காணத் துடிக்கிறது. இன்றைய சிறுமைகள் அனைத்தையும் சீறுகிறார்.

---

7. பாரதியார் கவிதைகள் சுதந்திரதேவியின் துதி.

## இறையருளும் சமநிலை எண்ணமும்

'ஒன்று பரம்பொருள் நாம்அதன் மக்கள்
உலகின்பக் கேணி'[8]

என்றும்

'முன்னர் நம திச்சையினாற் பிறந்தோமில்லை
முதலிறுதி இடைநமது வசத்தில் இல்லை'[9]

என்றும் இறையருளை உணர்ந்த தெளிந்த ஞானம் பாரதியாருக்கு இருந்தது. அதனால் ஜாதி மதங்களைப் பாரோம்—உயர் ஜன்மம் இத் தேசத்தில் எய்தினராயின் வேதியராயினும் ஒன்றே—அன்றி வேறு குலத்தின ராயினும் ஒன்றே' என்று கருதினார்.

தன்மையொன்றி லாததுவாய்த் தானே ஒருபொருளாய்த்
தன்மைபல வுடைத்ததாய்த் தான்பலவாய் நிற்பதுவாய்

இருக்கும் இறைவனை[10] வழிபட, காவித்துணி வேண்டா, கற்றைச் சடை வேண்டா, பாவித்தல் போதும் பரமநிலை யெய்துதற்கே; சாத்திரங்கள் வேண்டா சதுமறைகளேது மில்லை, தோத்திரங்களில்லையுளந் தொட்டு நின்றாற் போதுமடா[11] என்று புதுநெறி காட்டுகின்றார்.

இறைவனை வணங்கும்போது ஆசையைக் கொல் வதும், புலை அச்சத்தைக் கொன்று பொசுக்குவதும், கெட்ட பாசத்தை அறுப்பதும் உயர் நோக்கங்களாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறார்.

---

8. பாரதியார் கவிதைகள்;
9. பாரதியார் கவிதைகள்;
10. பாரதியார் கவிதைகள்;
11. பாரதியார் கவிதைகள்;

பிறப்பால் இந்துவாக இருந்தாலும் பல்வேறு சமயங்களையும் பாரதியார் போற்றி மதித்திருக்கிறார்.

வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான்

என்று உபநிடதக் கருத்தைக் கூறிய அவர்.

சொல்லாலும் மனத்தாலும் தொடரொணாத பெருஞ்சோதி
அல்லா அல்லா அல்லா[12]

என்று அல்லாவையும்,

பொன்மரத்தின் கீழ்—அந்தப்
பொன்மரத்தின் கீழ்—வெறுஞ்
சின்மயமானதோர் தேவன் இருந்தான்[13]

என்று புத்த பகவானையும்

ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்
எழுந்து யிர்த்தனன் நாள்ஒரு மூன்றில்
நேச மாமரி யாமக்த லேனா
நேரிலே இந்தச் செய்தியைக் கண்டான்[14]

என்று இயேசுநாதரையும் தனித்தனியே போற்றிச் சமரசத் தன்மையை உணர்த்துகிறார். ஆகவே 'தெய்வம் பலபல சொல்லிப் பகைத் தீயை வளர்ப்பவர் மூடர்: உய்வதனைத் திலும் ஒன்றாய்•எங்கும் ஓர் பொருளானது தெய்வம்,[15] என்று சொல்லி சமய வேறுபாடற்ற—சமயப் பொறையுடைய

12. நான், செய். 1.
13. அல்லா, செய். 1.
14. ஆரியதரிசனம், செய். 4.
15. யேசுகிறிஸ்து, செய். 1.

ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்க விரும்புகிறார் என்பது தெளிவாகும். அந்தச் சமுதாயத்தில்,

'ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகளைப் பார்த்து,

'செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணியிருப்பர்
பித்தமனிதர் அவர்சொலுஞ் சாத்திரம்
பேயுரையா மென்றிங் கூதேடா சங்கம்'[16]

என்று சங்கநாதம் செய்கிறார்.

## சமுதாயச் சிறுமைகள்

சமுதாயச் சிறுமைகள் என்று கூறும்போது பெண் இனத்தினை ஆண் இனம் அடிமைப்படுத்திவைப்பது ஒன்று; சாதிச் செருக்கால் தாம் பிறந்த சாதியே உயர்ந்ததென்று கூறிப் பிற சாதியர்களை இகழ்ந் துரைத்தல் ஒன்று; பாரதியார் பெண்ணடிமையை வெறுப்பதோடு சாதிச் செருக்கையும் சாடுகிறார்.[17]

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்) என்னும்

'நாலு வகுப்புமிங் கொன்றே இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலைதவறிச் சிதைந்தே செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி'[18]

என்கிறார். ஆனால்

16. முரசு, செய். 11.
17. பாரதியார் கவிதைகள்; சங்கு
18. பாரதியார் கவிதைகள்; முரசு, பக். 209.

'சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்'[19]

என்பது அவருடைய கொள்கையாகும். ஆகவே,

பறையருக்கும் தீயருக்கும் புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை
.........................
ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்
இழிவுகொண்ட மனிதரென்போர் இந்தியாவில்
இல்லையே[20]

என்றும், "பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே வெள்ளைப் பரங்கியரைத் துரையென்ற காலமும் போச்சே"[21] என்றும்,

சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு
நிறைய வுடையவர்கள் மேலோர்[22]

என்றும் ஞானமுழக்கம் செய்கிறார்.

## பெண் விடுதலை

மனித இனத்தின் நேர்பாதியாகவுள்ள பெண்ணினம் ஆணினத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதைப் பாரதியாரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. சமுதாயத்தின் நிலையான இன்ப வாழ்க்கைக்குப் பெண் விடுதலை இன்றியமையாதது என்பதை உணர்ந்தார்.

---

19. பாரதியார் கவிதைகள்; முரசு : 8 பக். 210.
20. பாரதியார் கவிதைகள்; விடுதலை : 1 பக். 57.
21. பாரதியார் கவிதைகள்; சுதந்திரப்பள்ளு : 1 பக் 58.
22. பாரதியார் கவிதைகள்; பாப்பாப்பாட்டு : 15 பக். 208.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து' பாய்ந்த பாரதியாருக்கு, மாதர்க்குச் சுதந்திர முண்டு என்னும் போதினில் நாரதர் வீணையாக, கண்ணபிரான் குழலோசையாக, வேதவாக்காக, தேவர் அமிழ்தமாக இன்புறுத்துகிறது.[23]

இந்தியப் பெண்கள் கல்வியில் மேன்மையுற்றுக் கடல் கடந்து பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள பல கலைகளையும் கற்று வருதல் வேண்டும்; பொதுமக்கள் நலம் பேணிச் சமுதாயத் தொண்டாற்ற வேண்டும்; வீட்டோடு அடங்கிக் கிடக்கின்ற நிலையினை ஒழித்தல் வேண்டும்; அதற்குரிய உரிமையை ஆண்கள் அவர்களுக்கு வழங்கியுதவ வேண்டும்.

திலக வாணுத லார் நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திட வேண்டுமாம்
விலகி வீட்டில் ஓர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்[24]

ஏனெனில்,

வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலிய ழிப்பது பெண்கள் அறமடா
கைகள் கோத்துக் களித்து நின் றாடுவோம்[25]

என்று பாடுகிறார்.

23. பாரதியார் கட்டுரைகள் பக். 213.
24. பாரதியார் கவிதைகள், புதுமைப்பெண் : 8.
25. " பெண்மை : 8.

திருமணத்தின்போது பெண்களின் விருப்பத்துக்கு மதிப்பளிக்கவேண்டும். கற்பு வாழ்க்கை ஆண்—பெண் இருவருக்கும் வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

> கற்புநிலை என்று சொல்ல வந்தா இரு
> கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்
> வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
> வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்[26]

என்று பாரதியாரின் பெண்கள், 'விடுதலைக் கும்மியடித்து மகிழ்கின்றனர்.

> 'ருதுவான பிறகு, பெண்ணுடைய இஷ்டப்படி கலியாணம் செய்யவேண்டும்; புருஷன் கொடுமையைச் சகிக்கமுடியாமலிருந்தால், ஸ்திரீ சட்டப்படி அவனை த்யாஜ்யம் செய்துவிடச் சட்டமும் இடம் கொடுக்கவேண்டும்; ஊர்க்காரரும் தூஷணை செய்யக் கூடாது'

என்றெல்லாம் கூறும் இவருடைய ஆசிரியர் (வேதபுரம் தர்மவீதியில் வாழ்ந்த வாத்தியார் பிரமராய அய்யர்) அவர்களுடைய கருத்துகளே பாரதியாருக்கு உணர்வைத் தட்டியெழுப்பின எனலாம்.[27]

> 'பாரதியார் நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் உடையவர். மார்பை முன்னே தள்ளித் தலையை நிமிர்த்தி அஞ்சாத பார்வையுடன் நடப்பார். அவர் குனிந்து நடந்ததை யாரும்

---

26. பாரதியார் கவிதைகள்; பெண்கள் விடுதலைக் கும்மி 0
27. பாரதியார் கட்டுரைகள்; பக். :127.

பார்த்ததில்லை. பிரெஞ்சுப் படைப் பாட்டுகளைப் பாடிக்கொண்டே நடப்பார்"

என்று பாரதியார் இயல்புபற்றி மு. வேங்ககடசாமி அவர்கள் கூறுகிறார்.[28]

ஆகவே, "சாதம் படைக்கவும் செய்திடுவோம். தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்" என்று புதுமைப்பெண் ஒருத்தி மூலம் தெய்வச்சாதி படைக்க வல்லவர்கள் என்று பெண்களைப் புகழ்ந்த பாரதியார்,

'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்டிர் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டிரோ'[29]

என்று பெண்மைத் தெய்வம் பேசுவதாகப் பாடுகிறார்.

மேலும், "சகோதரிகளே பெண் விடுதலைக்காக இந்த க்ஷணத்திலே தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மகாசக்தி துணை செய்வாள் வந்தே மாதரம்"[30] என்று பெண்களுக்கு அறிவுரையும் தருகிறார்.

## பொருளாதார விடுதலை

பிள்ளைப் பருவத்திலே தம்மைப் பேணவும் அருள் பூணவும் வந்த கவிதைக் காதலியோடு எண்ணிலே இன்பத்து இருங்கடல் திளைத்திருந்த பாரதியார்

---

28. பைந்தமிழ்ச்சாரதி, பாரதியார் வாழ்க்கை வரலாறு, பக் 83.
29. பாரதியார் கவிதைகள், புதுமைப்பெண் பக். 212.
30 பாரதியார் கட்டுரைகள், பக். 145.

வாழ்க்கையில் இடையூறாய் வந்த மிடிமைத் துயரையும் சுவைத்தறிந்தார்.

நின்னொடு களித்து நினைவிழந்திருந்த
எனைத் துயர்ப்படுத்துவந் தெய்தியதுலகிற்
கொடியன யாவினும் கொடியதாம் மிடிமை[31]

இந்த வதுமைப் (அனுபவம்) பட்டறிவே கீழ்க்காணும் பாடல்களாய் வீறுடன் வீழ்கின்றன.

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும்
சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்[32]
தனிஒருவனுக்குணவில்லை எனில்
சகத்தினை அழித்திடுவோம்[33]

தனியுடைமைக் கொடுமை தீர எல்லார்க்கும் எல்லாம் என்னும் பொதுவுமை முரசினை ஒலிக்கின்றார்.

"முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை வாழ்க
மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வாழ்க்கை இனி உண்டோ[34]

ஒரு நாட்டின் செல்வத்திினைப் பிறிதொரு நாடோ, ஒரு தனிமனிதன் பொருளைப் பிறிதொரு தனிமனிதனோ பறித்துக் கொள்வதையும் அவரால் பொறுக்கமுடிய வில்லை.

---

31. பாரதியார் கவிதை பக். 235.
32. பாரதியார் கவிதைகள்; மறவன் பாட்டு : 8.பக். 320.
33. பாரதியார் கவிதைகள்; பாரத சமுதாயம் - சரணங்கள் பக். 41.
34. பாரதியார் கவிதைகள்; பாரத சமுதாயம் : அனுபல்லவி

"பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளைகொண்டு
போகவோ நாங்கள் சாகவோ
அழுது கொண்டிருப்போமோ ஆண்பிள்ளைகள் நாங்கள்
அல்லமோ உயிர் வெல்லமோ"[35]

என்று நம் நாட்டின் பொருள் ஆங்கில நாட்டினரால் கொள்ளை யடிக்கப்படுவதைக் கண்டித்தார். அதைப் போலவே தனிமனிதன் உழைப்பும் பிறரால் உறிஞ்சப் படுவதைக் கண்டிக்கிறார்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் வீணில்
உண்டுகளித்திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்[36]

என்று உறுதிகொண்ட அவர்,

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் இங்கு
வாழும் மனிதர் எல்லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்[37]

என்று ஆணையிடுகிறார்.

"குனிந்தால் வரி, நிமிர்ந்தால் வரி, நின்றால் வரி இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி இன்னும் எண்ண முடியாத வரிகளைப் போட்டு வீடு, வாசல், நிலம். கரை, ஆடு மாடு, சட்டி, பெட்டி இவைகளை ஜப்தி செய்து ஏலங்கூறி கொள்ளையடித்துப் போகும் சர்க்கார்

35. பாரதியார் கவிதைகள்; தேச பக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி; 3 பக். 69.
36. பாரதியார் கவிதைகள்; சுதந்திரப் பள்ளு, 4 பக். 38.
37. பாரதியார் கவிதைகள், முரசு: 23.

பணத்தை நாம் ஏன் திரும்பக் கொள்ளையடிக்கக் கூடாது என்ற கேள்வியும் அவனுக்குண்டாகிறது."

என்று தத்துவக் கட்டுரையில்[38] எழுதுவதை நோக்கும் போது, அரசாங்கமும் மிரூபியும் வரிவிதித்தல் கூடாது என்னும் அவருடைய நம்பிக்கை தெரிகிறது.

பொதுவுடைமை நலச் சமுதாய அமைப்புக்கு இலெனினுடைய பொதுவுடைமைக் கொள்கையைப் பாரதியார் ஏற்றுக் கொள்ளவில்லை.[39] அன்பு வழியையே அரவணைக்கச் சொல்கிறார்.

"பொருளாளிகள் இடைவிடாத உழைப்பையும், அன்பையும் சமத்துவ நினைப்பையும் கைக்கொண்டால், உலகத்தில் அநியாயமாக உத்பாதங்கள் நேரிட்டு உலகமழியாமலும் காப்பாற்ற முடியும்"[40]

ஏனெனில்,

"தீமையை நன்மையாலேதான் வெல்ல முடியும். கொலையையும் கொள்ளையையும் அன்பினாலும் ஈகையாலும்தான் மாற்றமுடியும். இதுதான் கடைசி வரை கைக்கூடி வரக்கூடிய மருந்து மற்றது போலி மருந்து"[41]

என்று அவர் கருதுகிறார்.

இவ்வாறு அரசியல், சமுதாய, பொருளாதாரச் (சிறுமைகள்) சீர்கேடுகள் எல்லாம் நீங்கப் பாடிய

---

38. பாரதியார் கட்டுரைகள் பக். 101.
39. பாரதி தமிழ், பக் 384.
40. பாரதியார் கட்டுரைகள், பக். 374.
41. " பக். 384.

பாரதியாருக்கு இன்ப வாழ்க்கை என்பது அவைகளோடு அமைந்துவிட்டதாகத் தெரியவில்லை. அவர் கண்ட கனவொன்று இன்ப வாழ்வுப் பட்டதாகத் தோன்றுகிறது. அதுயாது?

"விட்டு விடுதலையாகி நிற்பாயிந்தச்
சிட்டுக்குருவியைப் போலே
எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவொடு நீந்துவை"

என்று பறவை வாழ்வினைப் போற்றுகிறார்.

## தேசிய ஒருமைப்பாடு

பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் விடுதலைத் திறம் கெட்டலைந்த அன்றைய இந்தியச் சமுதாயத்தையே கண்டதாகக் கூறுவர்.

பாஞ்சாலி - பாரத அன்னையாகவும்
துரியோதனன் - ஆங்கில ஆட்சியாளனாகவும்
தருமன் - பாரதத்தை ஆண்ட பண்டைய மன்னருள் ஒருவனாகவும்
வீமன் - விடுதலை வேட்கை கொண்ட ஒரு புரட்சி வீரனாகவும்

பாரதியாரின் மனக்கண்ணில் தோன்றியுள்ளனர்.[42]

பாஞ்சாலி சபத்தில் 'பாரதப்போர்' என்று குறிப்பிடப்படுவதெல்லாம், பாரதத்தின் விடுதலைப்போரையே என்பது தெள்ளத் தெளிவு.

"பாரதப்போர் வரும்; நீர் அழிந்திடுவீர்" இந்த வரியில் பாரதியார் சுட்டுவது இந்தியாவின் விடுதலைப் போரையே ஆகும். அப்போரில் ஆங்கிலேயர்

42. சாமுவேல்தாசன்; பாரதி உள்ளம். பக். 104

தோற்றோடுவார் என்ற கவிஞரின் நம்பிக்கை இவ்விடத்தில் கடைரிவிட்டு ஒளிர்கின்றது.[43]

அடிமை இந்தியாவினைக் கண்ட பாரதியார் வீடுதலை பெற்ற இந்தியாவினையும் படைக்கிறார்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்[44]

அப்படிப்பட்ட வீரத்திருநாட்டில் - இந்தியப்பெருநாட்டில் - மனிதன் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இல்லை, மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இல்லை. ஏனெனில் முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை, ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை. ஆகவே அங்கு,

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்தியமக்கள்
எல்லோரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்[45]

அந்தப் பாரத சமுதாயம் காண - மகாகவி பாரதியார் கண்ட சமுதாயம் அமைக்க நாமனைவரும் ஒல்லும் வகையெல்லாம் உழைப்போம், உயர்வோம்.

---

43. சாமுவேல்தாசன்; பாரதி உள்ளம் பக். 123.
44. பாரதியார் கவிதைகள், பாரத தேசம் : 2,5.
45. ,, பாரத சமுதாயம்: 7.

# 8. பாரதியார்—ஒரு மக்கள் கவிஞர்

"ஒரு கவிஞன் பிறக்கிறான்; உருவாக்கப்படுவதில்லை" என்பர். காலத்தின் தேவைக்கேற்பக் காலத்தின் இடையிடையே கவிஞர்கள் தமிழ்நாட்டில் தோன்றி வந்துள்ளனர். இன்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்ககாலத்தில் காதலையும் போரையும் பாடிய கவிஞர்கள் வாழ்ந்தனர். இடைக்காலத்தில் சமயத்தையும் மெய்ஞ்ஞானத்தையும் பற்றிப்பாடிய புலவர்கள் திகழ்ந்தனர். இக்காலத்தே அறிவியலையும் மனித சமூகவியலையும் பற்றிப் பாடும் நோக்குடைய கவிஞர்கள் மிகுந்துள்ளனர். காலந்தோறும் கவிஞர் பலர் வாழ்ந்தாலும் ஒரு சிலரே மக்கள் நெஞ்சில் நீங்காத இடத்தைப் பிடித்து என்றென்றும் வாழுகின்றார்கள். "ஆற்றுமணலை எண்ணினாலும் எண்ணிவிடலாம். ஆனால் தமிழ்க் கவிஞர்களுடைய தொகையை எண்ண முடியாது" என்பர். அம்முறையில் தமிழகத்தில் கவிஞர் தொகை பெருகி வந்திருப்பதற்குக் காரணம், தமிழ்நாடு கவிதைச் சுவையில் காட்டும் ஆர்வமும் கவிஞர்களுக்கு அளிக்கும் சிறப்புமே ஆகும் எனலாம். 'கவிதைச் சுவையில் உயர்நாடு என்று மகாகவி பாரதியாரும் குறிப்பிட்டுள்ளார்.

பிற்காலப் பாண்டியராட்சி தமிழகத்தில் வீழ்ச்சியுற்ற பிறகு நாயக்கராட்சி மலர்ந்தது. இக்கால கட்டத்தில் தோன்றிய புலவர்களை ஏற்றிப்போற்றிப் புரந்து நிற்கும் பேரரசர்கள் இல்லை; சிற்றரசர்கள்கூடத் தாங்கள் நிலப் பகுதிகளைப் பகைவர் படையெடுப்பினின்றும் காத்துக்

கொள்வதிலேயே கவனஞ் செலுத்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஏனெனில் தமிழகத்தில் அக்காலையில் நிகழ்ந்த முசுலீம் மன்னர் படையெடுப்புகள் நாட்டின் நிலையானதோர் அமைதியைக் குலைத்து நின்றன. எனவே ஆங்காங்கே வாழ்ந்த ஜமீன்தாரர்கள், நிலக்கிழார் கள், செல்வர்கள் ஆகியோர் ஆதரவை நாடிப் புலவர்கள் நிற்கவேண்டிய நிலை நேர்ந்தது. "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை'' என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளே தம் தேவாரத்தில் குறிப்பிட்டிருப்பாரேயானால் அவருக்கும் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களின் நிலையைப்பற்றிக் கூறாமலே விளங்கிக் கொள்ளலாம். "நெல் கொண்டு போகுமட்டும் நில்லாய் நெடுஞ்சுவரே' என்று கம்பர் ஒரு பாடல் பாடியுள்ளதாகவும், கூழுக்குப் பாடினாள் ஔவை என்றும் இடைக்கால இலக்கிய வரலாற்றுச் செய்திகளாகச் சிலர் குறிப்பர். கல்லாத ஒருவனை கற்றவன் என்றும், இறக்க இருக்கும் கட்டத்தில் உள்ள வீரன் ஒருவனை, நாட்டினை நன்கு ஆள்வாய் என்றும், பொல்லாத ஒருவனை நல்லான் என்றும் போர்முகத்தையே அறியாத ஒருவனைப் புலியேறு என்றும், சூம்பற்றோள் உடையவனை மல்லாரும் தோளுடையான் என்றும், வழங்காதவனை வள்ளல் என்றும் புகழ்ந்துங்கூட இல்லை என்று கையை விரித்துவிட்ட இடைக்கால வள்ளலையும் "இல்லாது சொன்னேனுக்கு இல்லையென்றான்; யானும் இல்லாது ஏகின்றேனே" என்று நெஞ்சம் மாழ்கிய புலவரையும் காணலாம்.

கல்லாத வொருவனை நான் கற்றா யென்றேன்
காடெறிய மறவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத ஒருவனை நானல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்

மல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே
—*தனிப்பாடற்றிரட்டு; இராமச்சந்திர கவிராயர்*

இத்தகைய நிலைகள் நீடித்திருந்த காலத்தில் பாரதியார் தோன்றினார். தமிழகம் தமிழர்க்குத் தன் பாடலால் உயர்வளிக்கும் தலைவனை எலாம் எண்ணித் தவம் கிடக்கையில் பாரதியார் தோன்றியதாகப் பாரதிதாசன் பாராட்டுவதோடு பாரதியாரால் தமிழ் பெற்ற தகுதிகளையும் திறமாகப் பின்வருமாறு உரைக்கின்றார் :

தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்
பைந்தமிழ்த் தேர்ப்பாகன்! அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக்குயில்; இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடுதுயில் நீக்கப் பாடிவந் தநிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்:
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்.

**தமிழால் பாரதி தகுதி பெற்றதும்**
**தமிழ்பா ரதியால் தகுதி பெற்றதும்**

பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கள் பாரதி மக்கள் கவிஞராகத் துலங்கிய மாட்சியைப் பின்வருமாறு புலப்படுத்துகிறார்.

பாரதி திலகர் யுகத்தின் இனிய உயிருள்ள குரலாக நின்று தமிழ்நாட்டில் பாடத் தொடங்கினார். பொது மக்களுக்கு விளங்கும் நடையில், பொதுமக்கள் விரும்பிப் பாடி வந்த நாடோடிப் பாடல் நடையில் பாடினார்.

பாரதி 1882ஆம் ஆண்டில் எட்டையபுரத்தில் பிறந்தார். எட்டையபுரம் சமஸ்தானத்தில் அவர் தந்தையார் சின்னசாமி ஐயர் வேலையில் இருந்தார். பாரதியும் சமஸ்தானத்தின் ஆதரவில் வளர்ந்தார். சின்னஞ்சிறு வயதிலேயே பாரதி காட்டிய புலமை அவருக்கு அறிஞர் பெருமக்களிடமிருந்து 'பாரதி' எனும் பட்டத்தை வாங்கித் தந்தது. எனவே சுப்பிரமணியன் என்ற இயற்பெயர் கொண்ட அவர் அன்றிலிருந்து சுப்பிரமணிய பாரதியாராகிப் பிற்காலத்தில் 'பாரதி' என்றாலே அவரைக் குறிக்கும் அளவுக்குப் பெயர் பெற்றார். அவர் இறவாப் புகழுக்குக் காரணம் அவர் நாட்டு மக்களின் நல்வாழ்விற்காகப் பாடிய கவிஞராக இருப்பதுதான்.

**நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்**
**இமைப் பொழுதும் சோராதிருத்தல்**

—பாரதியார்-விநாயகர் நான்மணிமாலை, 85

என்று அவரே கூறுகின்றபடி அவர் தம்முடைய கவிதையாலே நாட்டுக்குத் தொண்டாற்றினார். நாட்டு மக்கள்

நலமுற வாழவேண்டும் என்ற துடிப்பிலே அவர் பாடிய பாடல்கள் பலவாகும்.

பாரதி பிறந்த காலத்திலே தமிழ்நாட்டு மக்களின் நிலை எவ்வாறிருந்தது? வாழ்வு எத்தகையதாக அமைந்திருந்தது என்பதனைக் காணவேண்டும். "இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?" என்ற பழமொழி பன்னெடுங் காலமாய் வழங்கிவரும் இந்த நாட்டிலே பாரதி தோன்றினார். தம்மைச் சூழ்ந்து வாழும் மக்களைப் பார்த்தார். அவர்தம் நிலையினைப் பின்வருமாறு வடிக்கின்றார்.

**தேடிச் சோறு நிதம் தின்று பல**
**சின்னஞ்சிறு கதைகள் பேசி—மனம்**
**வாடித் துன்பமுற உழன்று—பிறர்**
**வாடப்பல செயல்கள் செய்து**

—பாரதியார்; யோக சக்தி, 4

வாழும் வாழ்க்கையினைப் பாரதி கண்டிக்கின்றார். அன்னிய ஆட்சியைக் கண்டு அஞ்சி அடிமைபோல் வாழும் மக்களை இகழ்ச்சியோடு பார்க்கிறார். அவர்தம் இரங்கத்தக்க நிலையைப் பின்வருமாறு குறிக்கின்றார்.

**சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்**
**சேவகன் வருதல்கண்டு மனம் பதைப்பார்**
**துப்பாக்கி கொண்டொருவன்—வெகு**
**தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்**
**அப்பாலே வீடுசெல்வான்—அவன்**
**ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்**

எப்போதும் கை கட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார் (நெஞ்சு)

—பாரதியார்; பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, 3

இத்தகு பயம் மிகுந்த மனிதர்களைப் பார்த்து "நெஞ்சு பொறுக்குதிலையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்" என்று பாரதி பாடுகின்றார்.

முதலாவதாக அன்னியர் ஆட்சி நம்மை அடிமைப் படுத்தியதற்குரிய காரணத்தை ஆராய்கிறார். நமக்குள் ஒற்றுமையின்மையே அன்னியர் நம்மை அடிமைகொள்ள வைத்தது எனத் துணிகிறார். இதனைக் கவிச்சுவையொடு எவர் மனத்திலும் எளிதிற் பதியும்வண்ணம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநாளிரு வரும் பகைத்திருப்பார்

—பாரதியார்; பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, 4

வீட்டு நிலையே இதுவானால் நாட்டின் நிலையைச் சொல்லவும் வேண்டுமோ? அரசியல் அடிமைத்தனமே யன்றிப் பொருளாதாரச் சுதந்திரத்தினையும் இழந்து நிற்கும் மக்களை அவர் பாடுகிறார்.

கஞ்சி குடிப்பதற்கில்லார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவு மில்லார்
பஞ்சமோ பஞ்ச மென்றே-நிதம்

பரிதவித் தேஉயிர் துடிதுடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே

என்று கூறி,

அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே

—பாரதியார் ; பாரத ஜனங்களின் தற்கால நிலைமை, 6

என்று அவர்தம் அவலநிலையை எடுத்துரைக்கின்றார்.

அந்த அடிப்படை அச்சநிலையை அகற்ற எண்ணுகிறார் பாரதியார். எனவே அச்சமில்லை என்று கூறி ஒரு பண்டாரம் பாட்டொன்று அகவல் நடையில் பாடுகிறார்.

அச்ச மில்லை, அழுங்குத லில்லை
நடுங்குத லில்லை, நாணுத லில்லை
பாவமில்லை, பதுங்குத லில்லை
எதுநேரினும் இடர்ப்பட மாட்டோம்
அண்டம் சிதறினால் அஞ்ச மாட்டோம்
கடல் பொங்கி எழுந்தால் கலங்க மாட்டோம்
யார்க்கும் அஞ்சோம் எப்போதும் அஞ்சோம்

—பாரதியார் ; விநாயகர் நான்மணிமாலை அகவல்

என்று பாட வைத்ததோடு மட்டுமில்லை, உலகஉயிர்களை இழுத்துப் பறித்துச் செல்லும் காலனையே பார்த்துப் பின்வருமாறு கூறச் செய்தது.

**காலா உனை நான் சிறு புல்லென மதிக்கிறேன்; என்றன்**
**காலருகே வாடா! சற்றே உனை மிதிக்கிறேன்**

—பாரதியார் ; காலனுக்குரைத்தல், பல்லவி

**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே**
**இச்சகத்திலுளோரெல்லாம் எதிர்த்துநின்ற போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே.**

—பாரதியார் ; ஞானப்பாடல்கள்—79

அச்சமில்லை என்று வீரத்துடன் பாரதி முழங்குகின்றார்.

முதலாவதாக, மக்கள் நல்வாழ்வுபெற, அரசியல் விடுதலை பெறவேண்டும். அதனை எப்படிப் பெறுவது? அவர்கள் தம் முன்னோர் பெருமையினையும் அவர் வாழ்ந்த நாட்டின் சிறப்பினையும் அறிய வேண்டும். எனவே நாட்டுப்பற்று என்னும் விதையை மக்கள் மனத்தில் விதைக்க முற்படுகின்றார்.

**எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி**
**யிருந்தது மிந்நாடே—அதன்**
**முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து**
**முடிந்தது மிந்நாடே—அவர்**
**சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து**
**சிறந்தது மிந்நாடே—இதை**
**வந்தனை கூறி மனதி லிருத்தியென்**
**வாயுற வாழ்த்தேனோ.**

—பாரதியார்; நாட்டு வணக்கம்,

இப்பாடலில் அவர் 'சிந்தையிலாயிரமெண்ணம் வளர்ந்து சிறந்தது மிந்நாடே' என்ற தொடர் ஆழ்ந்து நோக்கத்

தக்கதாகும். வெள்ளையர்கள் நமக்குள் பிரிவினையை ஏற்படுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சியில் தலைப்பட்டு நம்மை அடிமைப்படுத்தி ஆள்கின்ற வல்லமை பெற்றவர்களாக இருந்தார்கள். எனவே 'தாய்க்கு வணக்கம்' என்னும் பொருள்படும் 'வந்தே மாதர'த்தினை நாட்டு மக்கள் நன்கு அறிந்திருந்த தாயுமானவர் ஆனந்தக் களிப்பு மெட்டில் ஒரு பாடல் பாடினார்: அந்தப் பாடலில் மக்கள் அனைவரும் தமக்குள் வேறுபாடின்றி ஒன்றுபட்டு வாழவேண்டுவதன் இன்றியமையாமையினைப் புலப்படுத்தினார்.

ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்மம் இத்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே

என்று கூறி, அன்னிய ஆட்சியாளர்களைப் பார்த்து,

ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி—ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ

என்று குறிப்பிட்டு மக்களனைவரையும் பார்த்து,

ஒன்றுபட் டாலுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்?

என்று இடித்துரைத்து இறுதியில்,

எப்பதம் வாய்த்திடுமேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்
—பாரதியார்; வந்தே மாதரம், 1,3,4,5

என்று சூளுரை கூறி மக்களை ஒன்றுபடுத்துகிறார்.

இந்த நாட்டில் மிகப் பழமையாக நிலைபெற்று நிற்கும் பொருள்கள்மேலும் பற்று தோன்றினால் மக்கட்கு நாட்டுப்பற்றுத் தானே முகிழ்க்கும் என்று கண்டார் பாரதியார். எனவே இமயமலையையும் கங்கையாற்றையும் புகழ்ந்து பாடினார்.

மன்னு மிமயமலை யெங்கள் மலையே
மாநில மீததுபோற் பிறிதிலையே!
இன்னறு நீர்க் கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?
—பாரதியார்; எங்கள் நாடு, 1

இறைவன் ஒருவன். அவனுடைய மக்கள் நாம். உலகு இன்பமயமானது என்று அறிவுறுத்துகின்றார் பாரதியார்.

ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகின்பக் கேணி
—பாரதியார்; பாரத மாதா, 3

மேலும் அவர் பாரதத்தாய் பழமையும் சிறப்பும் வாய்ந்த பெற்றவள் என்பனைக் காவடிச் சிந்திலும் 'ஆறுமுக வடிவேலனே' என்ற மெட்டிலும் அமைத்துள்ள 'எங்கள் தாய்' என்னும் பாடலிலும் விளக்குகின்றார்.

தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய்

—பாரதியார் ; எங்கள் தாய், 1

என்றும்,

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை யொன் றுடையாள்

—பாரதியார் ; எங்கள் தாய், 2

என்றும் அவர் பாடியுள்ளமை காண்க.

இவ்வாறு ஒன்றுபட்ட சிந்தையராய் விளங்குதற்கு ஆயத்தப்படுத்திய பாரதியார் அவர்களுக்குச் சுதந்திரத்தின் பெருமையினைக் கட்டுரைக்கின்றார். இப்பாட்டினை மக்கள் விரும்பிப் பாடி வீறு பெறவேண்டும் என்னும் விருப்பத்தின் காரணமாகவே ‘தில்லை வெளியிலே கலந்து விட்டாலவர் திரும்பியும் வருவாரோ!’ என்ற வர்ண மெட்டில் பாடியுள்ளார்.

வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?

—பாரதியார்; சுதந்திரப் பெருமை, 1

இவ்வாறு சுதந்திர தாகம் கொண்ட மக்கள் கிளர்ந்தெழுகிறார்கள். அதனையும் பாடுகிறார் பாரதியார்.

என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?
என்று மடியுமெங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்துபொய் யாகும்
—பாரதியார் ; சுதந்திர தாகம், 1

என்று ஆர்த்தெழுகின்றார். தம் நெஞ்சிற் பயிரிட்டு வளர்த்த சுதந்திரப் பயிர் தீய்ந்து போய்விடக் கூடாது என்று எண்ணுகின்றனர் மக்கள். எனவே இறைவனை இறைஞ்சி உளம் நெக்குருகப் பாடுகின்றார்.

தண்ணீர்விட்டோ வளர்த்தோம் சர்வேசா இப்பயிரை
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள்வளர்ந்த
வண்ண விளக்கி∴து மடியத் திருவுளமோ?
ஓராயிர வருட மோய்ந்து கிடந்தபின்னர்
வாராதுபோல வந்த மாமணியைத் தோற்போமோ?
—பாரதியார் ; சுதந்திரப் பயிர், 1—3

இவ்வாறு சுதந்திர வேட்கை கொண்ட மக்களை அன்னிய ராட்சி சிறையில் தள்ளும்; சித்ரவதை செய்யும். ஆனாலும் தேசபக்தர்களின் நெஞ்சம் நிலைகுலைந்து விடாது என்பதனையும் எக்காலத்திலும் அவர்கள் சுதந்திர தேவியைத் தொழுதிட மறக்கமாட்டார்கள் என்பதனை யும் பாரதியார் பாடுகின்றார்.

இருந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் தழிவுற் றாலும்

விதந்தரு கோடி யின்னால்
விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

—பாரதியார் ; சுதந்திர தேவியின் துதி, 1

இத்தகைய நெஞ்சுரம் பாரதியாருக்கு வாய்த்திருந்த காரணத்தினால்தான் இந்திய நாடு சுதந்திரம் அடையாத அக்காலத்திலேயே சுதந்திரம் அடைந்துவிட்டதாக உற்சாகக் குரலெழுப்பிப் பாடினார்.

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட் டோமென்று
(ஆடுவோமே)

....................

எங்கும் சுதந்திர மென்பதே பேச்சு —நம்
எல்லோருஞ் சமமென்ப துறுதியாச்சு
சங்கு கொண்டேவெற்றி யூதுவோமே — இதைத்
தரணிக்கெல் லாமெடுத் தோதுவோமே...

......................

நாமிருக்கும் நாடுநம தென்பதறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா மென்பதறிந்தோம்— இந்தப்
பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை செய்துவாழ்வோம்.

—பாரதியார் ; சுதந்திரப்பள்ளு, 2,5

அரசியல் விடுதலை மட்டும் பெற்றால் போதுமா? பொருளாதார விடுதலை பெற்றால்தான் மக்கள் மகிழ்ச்சியுடன் வாழமுடியும். எனவே பாரதியார்,

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்

—பாரதியார் ; முரசு, 1

என்று மக்கட்கு, உறுதிப் பொருட்களை உரைக்கத் தொடங்கிவிடுகின்றார். இந்த மக்கள் எப்படி வாழ்க்கை நடத்துகின்றனர்? பாரதியின் கவிதையே பழைய பாரதத் தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

வேறு வேறு பாஷைகள்—கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போபோபோ
நூறு நூல்கள் போற்றுவாய்—மெய்கூறும்
நூலிலொத்தியல் கிலாய் போபோபோ

— பாரதியார் ; போகின்ற பாரதமும்
வருகின்ற பாரதமும், 3

என்று பாடிப் புதிய பாரதத்தையும் நம்முன் கொண்டு வந்து காட்டுகின்றார்.

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா
எளிமைகண் டிரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா
..................

—பாரதியார் ; போகின்ற பாரதமும்
வருகின்ற பாரதமும், 5

இளையபாரத சமுதாயம் உலகத்துக்கே ஒரு புதிய சமுதாயமாய் மலர்ச்சியுறும் தகுதி சான்றதாகும். பாரதி

காணும் சமுதாயத்தில் அவர் ஒரு முதிர்ந்த மக்கள் கவிஞர் என்பதை நிலைநாட்டிவிட வல்லதாகும்.

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம் முழுமைக் தும்பொது
ஒப்பிலாத சமுதாயம் [உடைமை
உலகத்துக்கொரு புதுமை

—பாரதியார் ; பாரத சமுதாயம்

இந்தப் பாரத சமுதாயத்தில் மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமில்லை; இயற்கை தரும் எண்ணற்ற வளங்களை மக்கள் பொதுவுடைமைக் கொள்கையுடன் பகிர்ந்து நுகர்கிறார்கள்.

மனிதருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினியுண்டோ!
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினியுண்டோ? புலனில்
வாழ்க்கை யினியுண்டோ? நம்மிலந்த
வாழ்க்கை யினியுண்டோ!

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெரு நாடு
கனியுங் கிழங்கும் தானியங்களும்
கணக்கின் றித் தரு நாடு—இது
கணக்கின் றித் தரு நாடு—நித்தநித்தம்
கணக்கின் றித் தருநாடு - வாழ்க

—பாரதியார் ; பாரத சமுதாயம், 1

இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொரு வனுக்குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்—வாழ்க

—பாரதியார் ; பாரத சமுதாயம், 2

எல்லோரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் — நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க

—பாரதியார் ; பாரத சமுதாயம், 4

'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்ற ஒப்பற்ற தாரக மந்திரத்தை உலகிற்கு வழங்கிய உயர் பேரறிவாளராகப் பாரதியார் திகழ்கின்றனர்.

பாரதநாட்டு மக்கள் அனைவரும் ஒற்றுமையோடு வாழவேண்டும் என்ற உயர்நோக்கத்தைப் பாரதியார் ஓர் அழகிய சொற்சித்திரத்தின் வாயிலாக உணர்த்தி விடுகின்றார். சிந்துநதியில் ஒரு முழு நிலவு நாளில் சேர நன்னாட்டுப் பெண் தன் அருகில் அமர்ந்திருக்க அங்குச் சுந்தரத் தெலுங்கிற் பாட்டிசைத்துத் தமிழர் தோணிகளோட்டி வருவர் என்கிறார் பாரதியார்.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்

—பாரதியார் ; பாரததேசம், 5

கங்கை நதிப்புறத்தில் விளையும் கோதுமைப் பண்டத்திற்குக் காவிரிக் கரையில் விளையும் வெற்றிலையைப் பண்டமாற்றிக் கொள்ளலாம் என்கிறார். சிங்க மராட்டியர் கவிஞர்தம் கவிதைக்குச் சேரநாட்டு யானைத் தந்தங்களைப் பரிசளிக்கலாம் என்கிறார். காசிநகர்ப் புலவர் ஒருவர் பேசும் உரையினைக் காஞ்சிபி

லுள்ளார் கேட்பதற்கு ஒரு கருவி அமைப்போம் என்கிறார். இராசத்தானத்து வீரம் மிக்க இளைஞர்க்குக் கன்னட நாட்டிற் கிடைக்கும் தங்கத்தைப் பரிசாக அளிப்போம் என்கிறார்.

"மக்கள் ஆக்கா மனுவேந்தர்கள் கவிஞர்கள்"

என்பார் கவிஞர் ஷெல்லி. அம்முறையில் கவியரசர் பாரதியாரும் அரசியல் நடாத்தும் உயர் அலுவலர்க்கான சில எண்ணவோட்டங்களையும் அவர்கள் செயல்பட வேண்டுவதன் சிறப்பினையும் புலப்படுத்துகின்றார்.

வெள்ளிப் பனிமலையின் மீதுலாவுவோம்—அடி
மேலை கடல் முழுதும் கப்பல் விடுவோம்
பள்ளி தலமனைத்துங் கோயில் செய்குவோம் எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்
சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்,

—பாரதியார் ; பாரததேசம் 1, 2

ஓர் அடிப்படை நியதி சமுதாயத்தில் நிலவவேண்டும் என்றும், அவ்வாறு நிலவினால் நன்மைகள் பிறக்கும் என்றும் பாரதியார் நம்புகின்றார்.

சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்த மென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்.

—பாரதியார்; பாரத தேசம் 1, 3

இதனால் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரே, பிறர்க்கென வாழும் பெருமனம் படைத்தோரே சமுதாயத்திற் பெரியவராக எண்ணத்தக்கவர் என்ற பாரதியின் கோட்பாடு நன்கு புலனாகின்றது.

காலத்திற்கேற்ப மக்கள் புதிய புதிய தொழில்களை மேற்கொள்ள வேண்டும் என்ற பாரதியின் கொள்கை பாராட்டப்பட வேண்டுவதாகும்.

**ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்வோம் தலை சாயுதல் செய்வோம்**
**உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்**

—பாரதியார் ; பாரததேசம், 9

என்றும்,

**ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்.**

—பாரதியார் ; பாரததேசம், 10 : 4

என்றும்,

**உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்**

—பாரதியார் ; பாரததேசம், 12 : 4

என்றும் பாரதியார் பாடியிருப்பது மக்கள் புதிய புதிய துறைகளில் நுழைந்து முன்னேறவேண்டும் என்று அவர் கொண்ட துடிப்பை உணர்த்துகின்றது. எனவேதான்,

**சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே**
**அதைத் தொழுது படித்திடடி பாப்பா**

என்றும்,

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

—*பாரதியார் ; தமிழ், 1*

என்றும்,

தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டோர்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

—*பாரதியார் ; தமிழ், 4*

*என்றும் தமிழைச் சிறப்பித்துப் பாடும் பாரதியார் தமிழ் காலத்திற்கேற்ப வளரவேண்டும் என்றும் அவாவுகின்றார். தமிழ்த்தாயின் கூற்றாக அமைந்திருக்கும் பாடல் இதற்கோர் நல்ல எடுத்துக்காட்டாகும். தமிழ்த்தாய் தன் மக்களைப் பார்த்துப் புதிய சாத்திரம் வேண்டி நிற்கிறார்.*

இன்றொரு சொல்லினை கேட்டேன் — இனி
ஏதுசெய் வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத்தகாதவன் கூறினான் கண்டீர்!
புத்தம் புதிய கலைகள்— பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை - அவை
சொல்லுந் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?

**சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்**

—பாரதியார் ; தமிழ்த்தாய், 8, 9, 10, 11

என்று குறிப்பிட்டதோடன்றித் தமிழில் ஆக்கம் பெறுதற்குரிய புதிய வழிமுறைகளையும் புலப்படுத்தி நிற்கிறார்.

> பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும் இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் மறைவாக நமக்குள்ளே பல கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை திறமான புலமை யெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

—பாரதியார்; தமிழ், 3

பாரதியாரை முழுக்க முழுக்க ஒரு மக்கள் கவிஞராகக் காட்டுவது அவர்தம் 'விடுதலை'ப் பாடலாகும். அப் பாட்டில் அவர் பறையர் புலையர்க்கும் பறவர், குறவர், மறவர்க்கும் ஒருங்கே விடுதலை வழங்குகின்றார். ஏழை யென்றும் அடிமையென்றும் இந்தியாவில் எவருமில்லை என்கிறார். எல்லோரும் கல்வியும் செல்வமும் எய்தி வாழலாம் என்கிறார். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தி, ஆண்களும் பெண்களும் சரிசமானமாக வாழவேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

பெண் விடுதலைக்குப் பாடிய பெருங் கவிஞராகப் பாரதியார் துலங்குகின்றார். பெண்மை வாழ்கவென்றும், பெண்மை வெல்கவென்றும் கூத்தாடுகின்றார். 'காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே காற்றிலேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்' என்கிறார்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்

—பாரதியார் : பெண்கள் விடுதலைக்கும்மி, 2

என்று பாடிப் புதுமைப் பெண்ணையும் நம்முன் படைத்துக் காட்டுகின்றார். இப் புதுமைப் பெண், 'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கும்' கொண்டிருப்பதால் செம்மை நெறியினின்றும் மாறுவ தில்லையாம். இப்பெண்கள் தன் காதலொருவனைக் கைப் பிடித்து, அவன் காரியம் யாவினுங் கைகொடுத்து மாதர் அறங்களைப் பழமையைக்காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்கிறார்களாம் இவர்கள் பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் தெரிந்தவர்களாம். அறிவினில் ஆணுக்குத் தாழ்த்தியில்லாமல் தகுதி படைத்தவர்களாம்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கியிவ் வையந் தழைக்குமாம்

—பாரதியார் : புதுமைப் பெண் 3

என்று கூறும் பாரதி, பெண்ணின் பெருமை பாடிய பெருங் கவிஞராகத் திகழ்கிறார். 'முரசு' எனும் பாடலில் இவர் பெருமிதமாக முழங்கும் முழக்கத்தினைக் காண்க.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் —புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் —நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்

கண்கள் இரண்டினில் ஒன்றைக்—குத்திக்
காட்சி கெடுத்திட லாமா!
பெண்க ளறிவை வளர்த்தால்—வையம்
பேதைமை யற்றிடுங் காணீ.

—பாரதியார் : முரசு, 9

பாரதியார் 'பாப்பாப்பாட்டுப்' பாடியிருப்பது அவர் பாப்பா முதல் பெரியவர்வரை அனைவர்க்கும் கவி பாடியவர் என்பதைக் காட்டும். "ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா" என்ற எளிய பாட்டில் எத்துணை பெரிய கருத்துகளை வைத்துவிடுகின்றார்.

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

என்று கூறி,

துன்பம் நெருங்கி வந்த போதும் நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வமுண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா
உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிரமுடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா

—பாரதியார் : பாப்பாப்பாட்டு, 15, 9, 16

என்று பாப்பாவிற்கும் வாழும் முறையினை வகையுறக் கற்றுக்கொடுத்து விடுகிறார்.

காக்கை குருவி எங்கள ஜாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

—பாரதியார் : ஜெயபேரிகை 3

என்று பாரதி உலக உயிர்கள் அனைத்தையுமே ஒன்றாகக் காணும் பெருநோக்கு கொண்ட கவிஞராகத் திகழ்கிறார். எனவேதான்,

தனியொருவனுக் குணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

—பாரதியார் : பாரத சமுதாயம், 2

என்று முழங்குகின்றார்.

மன்னரேயாயினும் அவர்கள் மக்களைக் காக்கக் கடமைப்பட்டவர்களேயன்றித் துன்புறுத்தும் உரிமை படைத்தவர் இல்லை என்பதனைப் பாஞ்சாலி சபதத்தில் புலப்படுத்துகின்றார். தருமன் நாட்டை வைத்து இழந்தது, கோயிற் பூசை செய்வோன் சிலையைக் கொண்டு விற்றல் போலவும், வாசல் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போலவும் உள்ளது என்கிறார். நாட்டு மக்களை நரர்களாக வேந்தர்கள் கருதிவிடக் கூடாது என்கிறார். குடிமக்களைக் கொடுமைப்படுத்தும் கொற்றவர்கள் வாழ்வு நீண்டகாலம் நிலைப்பதில்லை என்பதனை 'இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்து விட்டான் ஜார் அரச' என்றும், 'புயற்காற்றுச் சூரதனில் திமுதிமுவென மரம் விழுந்து காடெல்லாம் விறகான செய்திபோலக்' கொடுங்கோலர்கள் தலை சாய்ந்து விட்டார்கள் என்றும் புலப்படுத்துகின்றார்.

பாஞ்சாலி சபதத்தில் "தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடியும் வெல்லும்; கட்டுண்டோம் பொறுத்திருப்போம்; காலம் மாறும்" என்று அர்ச்சுனன் கூற்றாகப் பாரதியார் கூறும் தாரக மந்திரம், அன்னிய ஆங்கில ஆட்சியினை இத் தாய்த்திருநாட்டினின்றும் அகற்றப் பொது மக்களுக்கு வழங்கிய செய்தியாகும்.

இவ்வாறாகப் பாரதியார் மக்கள் மாமன்றத்தில் மதிப்புடைய பெருங் கவிஞராகத் திகழ்கின்றார். பழைய நிகழ்ச்சியாகிய பாரதக்கதையின் ஒரு பகுதியான பாஞ்சாலி சபதத்தையே பாடினாலும், அதில் மக்கள் குரலுக்கு இடந்தந்து பாரதி பாடியுள்ள திறம் அவரை மக்கள் கவிஞர் என மணிமுடி சூட்டத் தக்கதாகும். 'மனிதனைப் பாடுவேன்' என்று இன்று எழுந்துள்ள வீரமுழக்கம் அன்றே பாரதியாரால் போற்றப்பெற்று, மானிடத்தின் மகத்துவத்தைப் பாடும் பல பாடல்களாக வெளிவந்தது. இக்காலத்தைப் 'பாரதியுகம்' என்று கூறும் அளவிற்குப் பாரதியைப் பின்பற்றிப் பல கவிஞர்கள் மனித சமுதாய மேம்பாட்டிற்கான பாடல்களைப் புனைந்துவருகின்றனர் என்பது தெளிவு.

# 9. பாரதியின் தொலைநோக்கு

முப்பத்தொன்பதே ஆண்டுகள் வாழ்ந்த பாரதியார் நாட்டிற்கும் மொழிக்கும் மக்களுக்கும் உழைத்த உழைப்பு மிகுதியாகும். பொருள் உடையவர்களைப் பார்த்துப் பாராட்டுப் பாடல்கள் பாடி அவர்களின் உள்ளத்தைக் குளிரச் செய்து அவர்கள் தரும் பொருளால் வாழ்ந்து வருவதே புலவர் தொழில் என்றிருந்த அவல நிலைமையினை மாற்றியமைத்தவர் மகாகவி பாரதியார் ஆவர். பாரதியும் எட்டையபுர அரசருக்குச் சீட்டுககவி எழுதியவர்தாம். ஆயினும் அவர் பாடலில் கவிமிடுக்கு இருந்தது. எட்டையபுர சமத்தானப் புலவர்களால் இளம் வயதிலேயே பாராட்டப்பெற்ற பாரதியார், அவர்களால் 'பாரதியார்' என்ற பட்டமும் வழங்கப் பெற்றார். சமத்தானத்துப் புலவர்கள்போல் வாழாமல் பாரதி புதுமைக் கருத்துகளுடன் வாழ்ந்தார். ஒரு முறை எட்டையபுர மன்னர் பாரதியார் சென்னை செல்லும்போது கொடுத்த பணம் முழுவதிற்கும் புத்தகங்களாக வாங்கி வந்துவிட்டார். தம் மனைவிக்கு ஒரு புடவை வாங்கி வந்து அவர்தம் மனத்தை மகிழச் செய்யவேண்டுமே என்ற எண்ணங்கூடப் பாரதிக்கு எழவில்லை. எல்லா வகைகளிலும் பாரதியார் புதுநோக்கிலும் புதுப் போக்கிலும் திகழ்ந்தார் என்பதனை அவருடைய இளமைக்கால வாழ்வு தொடக்க முதல் நன்கு காணலாம்.

பாரதியார் மறைந்து எழுபது ஆண்டுகள் கடந்து விட்டாலும் இன்னும் அவர் சிந்தனைகள் செயலுருவம் பெறவில்லை என்பதனைப் பார்க்கிறோம். எனவே

பாரதியார் இன்றைக்கும் நமக்கு வேண்டியவராகப் படுகிறார். அவருடைய பாடல்கள் இன்றும் நடப்புப் பொருத்தம் உடையதாகக் கால இயைபு உடையதாக அமைந்து துலங்குவதனைக் காணலாம். எனவே அவர் காலங்கடந்தும் வாழும் கவிஞராகவும். காலகாலத்திற்கும் அவர் தந்த கருத்துக் கருவூலங்கள் மனிதகுலத்திற்கு மனித சமுதாயத்திற்கு உரமூட்டுவனவாகவும் அமைந்திலங்கக் காணலாம்.

முதலாவதாக நாட்டு மக்கள் நலமுற்று வாழ ஒற்றுமை என்னும் உயர் பண்பினைப் பெற்றவர்களாக வேண்டும் என்பது பாரதியாருடைய திண்ணமான எண்ணமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்நத திருவள்ளுவர் பெருமான்,

> பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான் (குறள்; 972)

என்றார். பாரதியார் இந்தக் கருத்தினைப் பலகோணங்களில் நின்று வலியுறுத்தக் காணலாம். பல்வேறு வண்ணங்களையுடைய பூனைக் குடும்பம் ஒன்றனை எடுத்துக் கொண்டு பல்வேறு எண்ணங்களையுடைய மனிதர்களிடையில் ஒற்றுமை மலரவேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

> எந்த நிறமிருந்தாலும் அவை
> யாவும் ஒரே தரமன்றோ?
> இந்த நிறம் சிறிதென்றும் இஃது
> ஏற்றமென்றும் சொல்லலாமோ?

என்று வினாவிடுத்துப் பின்வருமாறு விடையையும் கூறி, ஒற்றுமையுணர்வை உறுதிப்படுத்துகிறார் பாரதியார்.

வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் — அதில்
மானுடர் வேற்றுமையில்லை
எண்ணங்கள், செய்கைகள் எல்லாம் —இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

சாதிக் கொடுமைகளால் இன்னும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கலவரங்கள் நடைபெறுவது இன்னும் நிற்க வில்லை. இந்த நிலைமையில் பாரதி அன்றே கூறிய அறிவுரைகளை நோக்குவோம் :

சாதிப்பிரிவுகள் சொல்லி —அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வர்
நீதிப் பிரிவுகள் செய்வார்—அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்
சாதிக் கொடுமைகள் வேண்டாம்—அன்பு
தனில் செழித்திடும் வையம்.

பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை, வாழும் நெறியாலேயே ஒருவர் மதிக்கப்பட வேண்டும் என்று கருதினார் பாரதியார். எனவே அவர்.

நந்தனைப் போல் ஒரு பார்ப்பான் இந்த
நாட்டினில் இல்லை: குணம்நல்லதாயின்
எந்தக் குலத்தரேனும் உணர்
வின்பம் அடைதல் எளிதெனக் கண்டோம்.

என்று பாடினார்.

பெரியவர்களுக்குச் சொல்லிச் சொல்லி அலுத்துப் போன பாரதியார் பாப்பாவுக்குப் பாட்டுச் சொல்லி அப் பாட்டில் வாழும் உயர் நெறியினை உணர்த்துகின்றார்.

சாதிகள் இல்லையடி பாப்பா — குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி, உயர்ந்த மதி, கல்வி — அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்.

இந்த நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரேயே,

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே — ஆனந்த
சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே

என்று நம்பிக்கையுடன் சுதந்திரம் அடைந்துவிட்டதாகவே பாடியவர் பாரதியார் ஆவர். அவர் கண்ட சுதந்திர நாட்டில் மக்கள் அனைவரும் பின்வருமாறு வாழ்வார்கள் என்று கனவுகண்டார் பாரதியார்.

பறையருக்கும் இங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை
பரவரோடு குறவருக்கும்
மறவருக்கும் விடுதலை

என்று விடுதலைப் பண்ணிசைத்து

ஏழையென்னும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பது
இந்தியாவில் இல்லையே

என்று சமத்துவக் குரல் கொடுத்து,

மனிதர் யாரும் ஒருநிகர்
சமானமாக வாழ்வமே

என்றும்,

ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே

என்றும் அன்பு முழக்கம் செய்கிறார் பாரதியார். இந்தக் கருத்துக் கொண்ட காரணத்தினாலேதான் பாரதியார் உயிருள்ள பொருள்களையும் உயிரல்லா பொருள்களையும் ஒன்றாகக் கண்டு உலக உயிர்கள் அனைத்தும் ஒன்றும் என்று தெளிந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டினை இசைக்கக் காணலாம்.

காக்கைக் குருவி எங்கள் சாதி நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறிலை
நோக்க நோக்கக் களியாட்டம்

என்ற பாட்டு அவருடைய பரந்துபட்ட சிந்தனையை விளக்கவில்லையா?

அடுத்தபடியாக மனித இனத்தின் சரிபாதிப் பகுதியான பெண்கள் அடிமைகளாய் நடத்தப்படுவதைக் கண்டு கொதித்தெழுந்தவர் பாரதியார். "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?", "பெண் புத்தி பின் புத்தி", 'தையல் சொல் கேளேல்'', "சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தயங்கித் தவிப்பரே" என்றெல்லாம் புன்மொழிகள் எழுந்ததனை எண்ணிப் பார்க்கிற பாரதி,

பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை

என்று வன்மையுடன் உரைக்கின்றார்.

பெண்டாட்டி தன்னை அடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்தலாமோ?

என்று கேள்வி கேட்டு,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்
புவிபேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்களிரண்டினி லொன்றைக் குத்திக்
காட்சி கொடுத்திடலாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்
பேதமை அற்றிடும் காணீர்

என்று விடையையும் விளக்கமாகத் தருகின்றார். எனவே 'புதுமைப்பெண்'ணைப் படைத்துத் தம் கவிதையில் உலவ விடுகின்றார். பாரதி படைக்கும் புதுமைப் பெண்ணைக் காண்போம்.

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவும் பழிப்பராம்
மூடக்கட்டுக்கள் யாவும் தகர்ப்பாராம்
காத்து மானிடச் செய்கை யனைத்தையும்
கடவுளர்க்கினிதாகச் சமைப்பராம்
ஏத்தியாண் மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ.

இந்தப் புதுமைப் பெண்கள் 'சாதம் படைப்பதோடு தெய்வச் சாதி படைக்கவும்' கூடியவர்கள். எனவே அவர்கள்,

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி

என்று கொம்மாளமிட்டுக் கும்மியடிக்கிறார்கள். இப் புதுமைப்பெண்கள் "கண்டதே காட்சி; கொண்டதே கோலம்" என்று வாழ்பவர்கள் அல்லர். இவர்களுக்கும் உயர்ந்த குறிக்கோள்கள் உண்டு. அக்குறிக்கோள்கள் தாம் யாவை? அவர்கள் வாயாலேயே கேட்போம் :

காதலனொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி

எனவேதான் பாரதியார் பெண்ணுரிமை பேணிய கவிஞராக, பெண் விடுதலை எனும் வைகறை வானுற்குப் பூபாளம் இசைத்த இசைவாணராகத் துலங்குகின்றார்.

மாதர் தம்மை இழிவு செய்யும்
    மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
    வகையினும் நமக் குளே
தாதர் என்ற நிலைமை மாறி
    ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மானமாக
    வாழ்வம் இந்த நாட்டிலே.

என்று பாரதி முழங்கிய முழக்கம் இன்றும் தேவைப்படுகின்றது.

மூன்றாவதாக. பாரதத் திருநாட்டில் வாழும் பலர் இன்றும் நாட்டுப்பற்று அற்றவராக விளங்குவதனைக் காண்கிறோம். அன்னியனான ஆங்கிலேயன் ஆட்சியே மேல் என்ற அளவிற்குக்கூட அன்னிய மோகம் பிடித்து, விடுதலை வேட்கையற்று வாழும் விந்தை மனிதர் பலரை

நாம் காண்கிறோம். எனவே நாட்டுப்பற்றை முதலாவ தாக நாட்டு மக்கள் நெஞ்சில் பற்றுமாறு வகை செய்கின்றார். பாரதி நாட்டுப்பற்றை நலங்கொள மக்கள் உளங்கொள ஊட்டும் முறை சாறுப் புதுமையானது என்றுகூடச் சொல்லிவிடலாம். நம் மூநதையோர்—முன்னோர் பலரும் மகிழ்ந்து வாழ்ந்து இநத நாட்டிலே என்றும், அவர்கள மாட்சியுடன் வாழ்ந்தது மீடசியடைய முடியாமல் முடிந்சுதும் இந்த நாட்டிலே என்றும், முன்னோர்கள் எண்ணிய எண்ணங்கள் அவர்கள் சிந்தனையில் முகிழ்த்ததும் இந்த நாட்டிலே என்றும் உணர்வுப் பாங்கில் உரைககின்றார் கவிஞர்.

எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே

என்னும் பாடல, புதுவது கிளந்த—தமிழிற்குப் புதுவரவாய் அமைந்த பாடலாகும்.

பாரதமணித் திருநாட்டை இவ்வாறு பாங்குறக் கண்டவர், செந்தமிழ்த் திருநாட்டையும் சிறபபுறக் காட்டுகின்றார்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்னும் அடிகள மந்திர அடிகளன்றோ?

கல்வி சிறந்த தமிழ்நாடு —புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு

என்று கூறி,

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு —நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ்நாடு

என்றும் பாடித் தமிழர்க்குத் தமிழ்நாட்டுப்பற்றை ஊட்டுகின்றார்.

அடுத்து, தமிழ்மொழிப் பற்றினைத் தமிழர்க்கு ஊட்டுகின்ற தொண்டில் திளைக்கின்றார் பாரதியார். பாப்பாவுக்கும் விளங்கும் வகையில் எளிய தமிழில் தமிழின் ஏற்றத்தினை எடுத்துரைக்கின்றார் அவர்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத்
தொழுது படித்திடடி பாப்பா

என்று தமிழ்மொழியின் அருமையை விளக்குகின்றார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்

என்று கூறி,

பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

என்று தமிழர் ஆற்ற வேண்டிய அருங்கடனையும் புலப்படுத்துகின்றார்.

பாரதி மறைந்து எழுபது ஆண்டுகளாகியும் இன்னும் தமிழில்—தமிழ் நாட்டில் அறிவியல் முன்னேற்றம் அடையவில்லை. இதனை அன்றே உணர்ந்து பின்வருமாறு பாடினார் பாரதி.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவுங் கூடுவ தில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும் அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று ஆக்க வழியில் தமிழ் வளர்வதற்குரிய அருஞ்செயல்களைப் புலப்படுத்தினார். அவர் பின்வருமாறு குறிப்பிட்டுள்ள செயல்கள் இன்றும் முற்றும் நிறைவேறாமல் நின்றுகொண்டிருப்பதனைக் காணலாம்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்

பாரதியார் உழவினையும், தொழிலினையும் போற்றியவர். சுறுசுறுப்பாக உழைக்கவேண்டும் என்று வற்புறுத்தியவர். 'சோம்பல் மிகக் கெடுதி' என்று சொன்னவர். எத்தித் திரிபவரை வெறுத்தவர். எனவே வீணுக்கு உழைக்காமல் வீணருக்கு உழைக்காமல் வாழ வேண்டும் என்று வற்புறுத்தினார் பாரதியார்.

**எல்லோரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர்**

என்ற நிலை ஏற்பட்ட பிறகு, 'மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கமும்', 'மனிதர்நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கையும்' இனி இருக்கக்கூடாது என்று பாரதியார் உறுதியாக எண்ணினார். எனவே புரட்சிச் சமுதாயத்தைப் பின்வருமாறு தம் அகக்கண்ணால் கண்டார்.

**முப்பது கோடி ஜனங்களின் சங்கம்**
**முழுமைக்கும் பொது உடைமை**
**ஒப்பில்லாத சமுதாயம்**
**உலகத் துக்கொரு புதுமை**

என்று கூறி,

**இனியொரு விதி செய்வோம்—அதை**
**எந்நாளும் காப்போம்;**
**தனியொருவனுக் குணவிலை யெனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்**

என்று ஆவேசமாக முழங்கினார்.

கல்வி வளர்ச்சியே மனவளர்ச்சிக்கு வழிவகுக்கும். எனவே,

வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்கள் எங்கும் பலப்பல பள்ளி

என்று கூறி,

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்று கூறி,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்

என்றார்.

"மக்கள் ஆக்காத மனுவேந்தர்கள் கவிஞர்கள்" என்பார் கவிஞர் ஷெல்லி. அம்முறையில் பாரதியாரும் எதிர்காலச் சிந்தனையோடு—தொலைநோக்கோடு பல அரசியல் சிந்தனைகளை நம் முன் வைத்துள்ளார்.

சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்

என்னும் கவியின் கூற்று எதிர்காலக் கனவன்றோ?

வடநாட்டில் இன்றும் அடிக்கடி நேரும் பெருவெள்ளத்தால் ஆற்றுப்பெருக்கெடுத்து ஊர்களும் நிலங்களும் அழிகின்றன. தென்னகத்தில் கடுங்கோடையில் பல ஊர்

களில் குடிக்கும் தண்ணீருக்கும் பற்றாமை ஏற்பட்டு மக்கள் சொல்லொணாத் துன்பத்திற்கு ஆட்பட்டு அல்லல் உறுவதனைக் காணலாம். பாரதி அன்றே இதை உணர்ந்தவர்போல்,

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செங்குவோம்

என்று பாடினார்.

இவ்வாறு பாரதியாரின் தீர்க்க தரிசனம் அரசியல், சமூகம், பொருளாதாரம், தமிழ்மொழி தமிழ்நாடு என்று பல துறைகளிலும் பளிச்சிடக் காணலாம். புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறுவதுபோலப் பாரதியார் 'காடு கமழவரும் கற்பூரச் சொற்கோ'வாகவும், 'நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா'வாகவும் 'புதிய அறம் பாடவந்த மறவனாகவும்' துலங்குகின்றார் எனலாம். பாரதியின் தொலைநோக்கு அவர்தம் மதிநலம் காட்டும்; அவர் பாடல்கள் இன்றும் பொருத்தமாயிருப்பது அவர்தம் தொலைநோக்குச் சிந்தனையை உணர்த்தா நிற்கும். எனவே பாரதி 'பாட்டுக்கொரு புலவனாகவும்', 'நாட்டு மக்கள் வாட்டம் நீக்க வந்த கவிக்குயிலாகவும்', புரட்சி நோக்கும் புத்துலகச் சிந்தனையும் கொண்ட அறிஞராக வும் விளங்குகிறார் என்பது வெள்ளிடைமலை. எனவே அவர் காலங்கடந்தும் வாழும் கவிஞராவார்.

பாரதிதாசன்

# 10. பாவேந்தர் பாரதிதாசனாரின் அழகின் சிரிப்பு

## நூலாசிரியர்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில் தமக்கெனத் தனித்ததோர் இடம்பெற்றுத் திகழ்பவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களாவர். புதுச்சேரியிற் கனகசபை என்பாரின் மகனாராகத் தோன்றிய இவருடைய இளமைக் காலப் பெயர் சுப்புரத்தினம் என்பதாகும். கனக சுப்புரத்தினம் என வழங்கப்பெற்ற இவர் இளமையிலேயே பிரெஞ்சுக் கல்வி பயன்றார். தக்க தமிழாசிரியர்களிடம் தமிழ்க் கல்வி பயின்ற இவர் தமிழ்ப் புலமை மிகுந்தவராய் விளங்கினார். பாரதியார் தொடர்பால் முதன்முதலாக இவர் இயற்றிய கவிதை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தப்பெற்றுப் பின், சுதேசமித்திர இதழுக்கு அனுப்பப்பெற்றது. அப் பாடலே "எங்கெங்குக் காணினும் சக்தியடா; ஏழ்கடல் அவள் நிற வண்ணமடா" என்று தொடங்கும் பாடலாகும்.

தமிழ்ப் பற்றைக் கிளறுவனவாகவும் தமிழினப்பற்றை ஊட்டுவனவாகவும் இவருடைய பாடல்கள் அமைந் துள்ளன. உணர்ச்சி வெள்ளம் என இவருடைய பாடல் களைச் சுட்டலாம். சந்த நயமும் இவர் பாடல்களில் கொப்பளித்து நிற்கக் காணலாம். காதல், இயற்கை என்னும் இரு பொருள்கள் பற்றி இவர் இயற்றியுள்ள கவிதைகள் போல இந் நூற்றாண்டில் வேறு எவரும் சிறப் பாக இயற்றவில்லை என்று கூறும் அளவிற்கு இவ்விரு

துறைகளிலும் இவரதுபாடல்கள் சிறந்து விளங்குகின்றன. சுருங்கச் சொன்னால் சங்க இலக்கியத்தின் பெற்றியினை இவருடைய கவிதைகள் பிரதிபலித்து நிற்கக் காணலாம்.

## நூல்

சங்க இலக்கியங்களில் அகப்பொருள் என நுவலப்படுவனவற்றின் பாடுபொருளாக விளங்கியது காதல் என்னும் உரிப்பொருளாகும். இக் காதல் சிறக்க விளங்கிய களம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை முதலான நிலைக்களங்களாகும். இந்நிலங்களின் பரப்பில் இயற்கையின் பின்னணியில் காதல் என்னும் வாழ்க்கையின் உரிப்பொருள் துலங்கியது எனலாம். இயற்கையின் பின்னணியில் மனித வாழ்க்கையைப் புலப்படுத்தி நின்றவை சங்க இலக்கியங்கள் எனலாம்.

அவ்வகையில் இங்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ள 'அழகின் சிரிப்பு' என்னும் நூலின் பாடுபொருள் (Subject matter) இயற்கையாக அமைந்திலங்கக் காணலாம். இதனைக் கவிஞரே தம் நூலின் முன்னுரையிற் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

> இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும், கதிரென்று சிரித்தது.
>
> இயற்கைப் பொருள் ஒவ்வொன்றும் பத்து அறுசீர் விருத்தங்களால் - எளிய நடையில் சித்திரிக்கப் படுகிறது.
>
> காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும், கண்டவாறு தாமேயாகச் சொல்லோவியம் செய்யவும் திறம் பெறுதல் வேண்டும் தமிழர்கள்,

> பிறமொழி, தமிழ்மொழி நூற்களில் பார்த்த படியே எழுதும் நிலை தீர வேண்டும். அதற்கு இச்சிறு நூல் இயற்றியதன் வாயிலாக நான் இதை அறிஞர்க்கு நினைவுறுத்துகிறேன்.

இவ்வகையில் எழுந்த நூல் 'அழகின் சிரிப்பு' எனலாம். மேலை நாட்டில் 'ஏரி வட்டக் கவிஞர்' (Lake Poet) எனப் புகழ்ப்பெறும் வோர்ட்ஸ் வொர்த் (words Worth) இயற்கை குறித்துக் கவிதைகள் புனைவதில் இணையற்றவர் என்று ஆங்கில இலக்கியம் நுவலும். அவ்வகையில் தமிழ்க் கவிஞர்களில் இயற்கையை இணையற்ற வகையில் அழகுற எழிலுற வருணித்துப் பாடியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எனலாம்.

இச் சிறுநூலின் முதல் பகுதி 'அழகு' என்பதாகும். இப்பகுதியில் தாம் அழகினைக் கண்டவிடங்களை யெல்லாம் கவிஞர் தெளிவுற விளக்குகின்றார். இதை யடுத்து, கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், ஆல், புறாக்கள், கிளி, இருள் முதலிய பன்னிரண்டு பொருட்களைப் பற்றிய கவிதைகள் மணக்கின்றன. இறுதியில் சிற்றூர், பட்டணம் தமிழ் என்னும் மூன்று பொருட்களை நம் முன் காட்டியுள்ளார் கவிஞர்; அறுபத்து நான்கு பக்கங்களே கொண்ட இந்நூலின் முழுக்க மனப்பாடம் செய்து கொள்ளும் வகையில் கவிஞர் இயற்றியுள்ளது பாராட்டத்தக்கது. பாரதிதாசனாரின் சிறந்த நூல்களில் இஃது ஒன்று என அட்டியின்றிக் கூறலாம்.

## அழகு

அழகு என்பது கவிஞர்க்கு எங்கெங்கே கவிதை வழங்கியது என்பதனை அழகுறப் புலப்படுத்தும் போக்கிலும்

நோக்கிலும் மூன்று பாடல்கள் முகவுரையாக—தோரண வாயிலாக அமைந்திருக்கக் காணலாம்.

காலையில் கீழ்த்திசையில் எழுகின்ற எழு ஞாயிற்றின் கதிரொளியில் அழகு தென்படுகின்றது; கடற் பரப்பின் வெள்ளிய மணல்மெத்தை அடுக்கில் அழகு துலங்குகின்றது. வைகறைப்போதில் ஓடை நீரில் எழும் ஒளியிலும் சலனத்திலும் அழகு மிளிர்கின்றது. சோலையில், மலர்களில், தளிர்களில்—மேலும் தொட்ட இடங்களிலெல்லாம் அழகு தட்டுப்பட்டது. மாலை நேரத்தில் மேல்வானத்தில் மறையும்போது ஒளிரும் மாணிக்கச்சுடரில் அழகு குலுங்குகின்றது. ஆலஞ்சாலையில் கிளைதோறும் அமர்ந்து ஒலியெழுப்பிக் கொண்டிருக்கும் கிளியின் கூட்டத்தில் அழகு புலப்பட்டு, அவ்வழகு கவிஞர்க்குக் கவிதை பாட உணர்வூட்டிப் பாடுபொருளாய் விளங்குகின்றது. நெஞ்சிலே என்றும் நிறுத்த வேண்டிய அப்பாடலைக் காண்போம்.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்
சோலையிலே, மலர்களிலே தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம் கண்ணில் தட்டுப்பட்டாள்!
மாலையிலே மேற்றிசையில் இலகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.

மேலும் அழகு கவிதை தரும் இடங்களாகப் பின் வரும் இடங்களைக் கவிஞர் குறிப்பிட்டுச் சொல்கிறார். சிறுகுழந்தை விழியினில் தென்படும் ஒளியில் அழகு இலங்குகின்றது. அமைதியாக எரியும் குத்துவிளக்கில்

அழகு பளிச்சிடுகின்றது. நார்கொண்டு பூக்களைத் தொடுத்து மாலையாக்கும் நங்கையின் விரல் வளைவின் நாடகத்தில் அழகு நடமிடுகிறது. வைகறை நேரத்தில் சிற்றூர்ப் பகுதியில் தோளில் கலப்பை தாங்கி உழும் வயல் நோக்கிச் செல்லும் உழவனின் புது நடையின் பூரிப்பில் அழகு தாண்டவமாடுகிறது. நன்றாக விளைந்த நன்செய் நிலத்தின் பசுமையில் அழகு கொலுவீற்றிருக்கின்றது. இவ்வழகுகள் எல்லாம் கவிஞரின் நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சியை விளைவிக்கின்றன. அடியிற்காணும் பாடலையும் அகமனத்தின் ஆழத்தில் இடம்பெறச் செய்யுங்கள்.

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்
திருவிளக்கிற் சிரிக்கின்றாள் நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள் அடடே செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்? விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தி னாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

மூன்றாவது பாடலில் அழகு துலங்கும் இடங்களைக் குறிப்பிட்டுவிட்டு, அவ்வழகு என்றென்றும் நிலைத்திருப்பது என்று கூறி, அவ்வழகின் வசப்பட்டுவிட்டால் துன்பங்கள் தொலையும்; சுகம் வரும் நெஞ்சினில் என்று புலப்படுத்துகின்றார்.

திசையும் அழகு; வானும் அழகு. வானக் கூரையின் கீழ்ப் புலப்படும் பொருட்களும் அழகு. அசையும் கொடிகள் நிற்கும் மரங்கள் அனைத்தும் அழகே.

அவ்வழகு இன்பத்தைத் தருகிறது. விருப்பந்தரும் பொருள்களில் விருப்பத்தை விளைவிக்கும் பொருள் அதுவாகும். பழமைக்குப் பழமையாயும் புதுமைக்குப் புதுமையாயும் துலங்கும் இளையவளாக 'அழகு' விளங்குகின்றாள். விருப்புடன் நோக்கினால் அவள் எங்கும் தென்படுவாள்; அந்த நல்லழகின் வசப்பட்டால் நலிவில்லை; துன்பமில்லை.

திசைகண்டேன், வான் கண்டேன் உட்புறத்துச்
செறிந்தனவாம் பலப்பலவும் கண்டேன், யாண்டும்
அசைவனவும் நிற்பனவும் கண்டேன், மற்றும்
அழகுதனைக் கண்டேன்நல் லின்பங் கண்டேன்
பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்!
பழமையினால் சாகாத இளையவள் காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்;
நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை.

ஈண்டுச் சிறப்பாக எண்ணப்பட வேண்டியன வருமாறு;

"பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள்" என்பதும், "பழமையினால் சாகாத இளையவள்" என்பதும், "நசையோடு நோக்கினால் எங்கும் உள்ளாள்" என்பதும், "நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை" என்பதும் ஆகும்.

இயற்கையழகு இணையற்று விளங்கும் பலவிடங்களைப் பத்துப் பாடல்களில் பத்து அறுசீர் விருத்தங்களில் வருணிக்கும் பாவேந்தர் பாரதிதாசன் முதலாவதாகக் "கடல்" என்ற தலைப்பில் தம் கைவண்ணத்தை—கவிதை வண்ணத்தைக் காட்டி நிற்கிறார்.

## கடல்

கடலை அறிமுகம் செய்யும் கவிஞர் புது உவமையினைக் கையாளுகிறார்; கல்வியை மறக்காத நெஞ்சங் கொண்டவராகத் துலங்குகிறார்.

கடல் ஊருக்குக் கிழக்கே இருக்கிறது; அப் பெருங் கடலின் ஓரம் கீரியின் உடல் வண்ணம்போல் மணல் மெத்தை தென்படுகின்றது. அம் மெத்தை மேல் எழுந்து விழுந்து புரளும் அலைகள் கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் இளைஞர்கள் நெஞ்சம்போல் பூரிப்பால் ஏறும்; விழும்; புரண்டிடும்

ஊருக்கு கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓர மெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல்மெத்தை: அம்மெத் தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்
புரண்டிடும்; பாராய் தம்பி.

அடுத்த பாடலில் மேலும் ஓர் உவமையைத் தருகிறார் கவிஞர். வெண்மை நிற அன்னக் கூட்டங்கள் விளையாடி வீழ்வதைப் போலத் துள்ளித் துள்ளி அலைகள் கரையின் மணல்மேல் சுழன்று வீழும் வெள்ளிய அலைகள் கரையைத் தொட்டுக் கடலுக்குள் சென்றுவிட்ட பிறகு, சிறுகால் நண்டுப் பிள்ளைகள் ஆடி ஓடி விளையாடி மகிழ்ந்து காண்போர்க்கு வியப்பைச் சேர்க்கும்.

வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வ தைப்போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று வீழும்!
வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும்.

புரட்சிக்கப்பால் அமைதி பொலிவதைப் போலக் கரையோரத்தினில் அலைகள் மோதிக் கலங்கள் விளைக்கும்; ஆனால் நடுக்கடலில் அமைதி பொலியும். வான் கடல்நீரை முகக்கும்; பெருங்கடல் நீர் வான் நிறம் பெறும்.

கடற்பரப்பைக் காண நெஞ்சம் மகிழும். கடலின் கண்கொள்ளாக் காட்சி களிப்பூட்டும், வடக்கும் தெற்கும் ஓடுநீர்ப் பரப்பும் காண இரு விழிச்சிறகால் நெஞ்சம் எழுந்திடும்; முழுதும் காண ஒரு கோடிச் சிறகுவேண்டும்.

செங்கதிர் கீழ்த்திசையில் கடல்மேல் எழுந்ததும் அதனுடைய தகத்தகாயக் கதிர்வீச்சு தங்கத் தூறல் களாய் இம்மண்மீது விழுந்தன. கடல் நீர்ப்பரப்பு முழுவதும் பொன்னொளி பெற்று. மிளிரும் பழங்கால இயற்கை செய்யும் புதுக்காட்சி இது!

அக்கரையில் சோலை ஒன்று தென்படும்; அச் சோலை கதிரவனின் கொள்ளை அழகைத் திக்கெல்லாம் தெரியக் காட்டும். கதிரவனை மறைக்க மேகங்கள் போராடும். ஆனால் போராட்டத்தில் வெற்றி வெங்கதிரோனுக்குத்தான். கருவானம் செவ்வானமாகத் துலங்கும்.

இளங்கதிர் எழுந்தது; இருட் பகைமேல் சினப்பகை கொண்டது; இதைப் பார்த்துப் பறவைகள் கைகொட்டி ஆரவாரித்து எழுந்தன. இளங்கதிருக்கு எதிர்செய்ய ஆற்றாமல் காரிருள் போய் ஒளிந்து கொண்டது. உள்ளத்தில் உவகை பொங்க இளங்கதிர் தன் பொன்னிறத்தை எங்கணும் இறைக்கத் தொடங்கிற்று, பாடல் வருமாறு :

இளங்கதிர் எழுந்தான்! ஆங்கே
இருளின்மேல் சினத்தை வைத்தான்;
களித்தன கடலின் புட்கள்;
எழுந்தன கைகள் கொட்டி!
ஒளித்தது காரி ருள்போய்!
உள்ளத்தில் உவகை பூக்க
இளங்கதிர், பொன்னி றத்தை
எங்கணும் இறைக்க லானான்.

கடல் நீரும் நீலவானமும் கை கோக்கின்றன; இரண்டிற்கும் இடையிலே கிடக்கும் வெள்ளம் அழகு வீணையாகும். அவ்வீணைமேல் காற்று அடித்து அவ் வீணையின் நரம்பினை அசைக்கின்றது. அப்போது வீணை இயக்கவல்ல தேர்ந்த புலவனாக அக்காற்று தென்படுகின்றது, கடல் பாடும் பாட்டினைக் கேட்பா யாக :

நண்பகலில் கதிரவன் வான வீட்டின் உச்சியில் ஏறி ஒளி செய்கின்றான்; செந்தணல் வீசுகின்றான். அத்தணலின் கொடுமையாற் புழுங்கிய மக்களுக்குக் குளிர் காற்று வழங்கி, வெப்பத்தைத் தணித்து உதவியது கடல். இவ்வையகம் முழுவதிற்குமே வாழ்க்கையில் செம்மை யினைக் கடல் வழங்கிற்று. நாளும் நற்செல்வம் வளர்கின்ற கடலாக அது துலங்குகின்றது.

நண்பகற் கடலைக் கண்டோம்; நிலாக்காலக் கடலை காணவேண்டாமா? இரவில் தன் பொன்னுடை களைந்து புதிதான முத்துச்சேலை அணிந்து, தடங்கடற் பெண்ணாள் எழில்நிலா ஒளி கொட்டும் வேளையில் வெள்ளிய நிறங்கொண்டு துலங்குகின்றாள். "கடலே! நீ நிலைபெற்று வாழ்வாயாக!" என்று வாழ்த்துக் கூறடா தம்பி!" என்று கூறிக் கடல் பற்றிய பகுதியை முடிக்கிறார் பாரதிதாசன்.

## தென்றல்

தமிழர் இயற்கையின் இனிய பெற்றியை நுகர்ந்தவர்கள். வடக்கேயிருந்து வரும் காற்றை 'வாடை' என்றும், தெற்கேயிருந்து வீசும் காற்றைத் 'தென்றல்' என்றும், மேற்கேயிருந்து வரும் காற்றைக் 'கோடை' என்றும் கிழக்கே இருந்து வரும் காற்றை 'கொண்டல்' என்றும் பழந்தமிழர் குறிப்பிட்டனர். இவற்றில் 'தென்றல்' என்னும் தென்திசைக் காற்றை விருப்புடன் வரவேற்றனர். வாடை என்னும் வடக்குக் காற்று உடலுக்கு ஊறு செய்யும் என வெறுத்தனர். இனித் தென்றலைப் பாரதிதாசனார் பாட்டிசைக்கும் பாங்கு தனைக் காண்போம்!

பலகோடி அண்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு பெரும்புறத்தில் காற்று கூத்திடுகின்றது. ஒரு வலிமையான குன்றத்தை வன்காற்று தூள் தூளாக்கும். அதே நேரத்தில் மெல்லிய அனிச்ச மலரினுள்ளும் நோகாது மென்காற்று நுழைந்து செல்லும். இவ்வாறு காற்று வன்மையும் மென்மையும் பெற்றுத் திகழ்வதனைக் கவிஞர் பாரதிதாசன் பின்வருமாறு அழகுறப் புலப்படுத்துகின்றார் :

அண்டங்கள் கோடி கோடி
அனைத்தையும் தன்ன கத்தே
கொண்டஓர் பெரும்பு றத்தில்
கூத்திடு கின்ற காற்றே!
திண்குன்றைத் தூள்தூளாகச்
செய்யினும் செய்வாய்; நீஓர்
நுண்துளி அனிச்சப் பூவும்
நோகாது நுழைந்தும் செல்வாய்!

காற்றின் ஆற்றலை இன்னும் மக்கள் உண்மையில் உணர்ந்தார்கள் இல்லை. ஆயினும் தென்னாடு பெற்ற தனிப்பெருஞ்செல்வம் தென்றலேயாகும். தென்றலின் இன்பம் வேறு எந்நாட்டிற்கும் தெரியவராது என்கிறார் கவிஞர்.

தென்னாடு பெற்ற செல்வத்
தென்றலே உன்இன் பத்தைத்
தென்னாட்டுக் கல்லால் வேறே
எந்நாட்டில் தெரியச் செய்தாய்!

சந்தன மரங்கள் நிறைந்த பொதிகை மலையாற் குளிர்ந்தும் அங்கு மலர்ந்துள்ள நறுமலர்களின் மணத்தினை நுகர்ந்தும், வண்டுகள் ரீங்காரம் செய்யும் பண்ணிசையில் கேள்விச் செல்வத்தை அடைந்தும், தென்றல் வளர்கின்றது தென்றலின் வரவினை வாழ்த்தாதவர்கள் உண்டா?

தென்றலின் உருவம் புலப்படவில்லையாயினும் அத் தென்றலின் ஒவ்வொரு சின்ன நல்லசைவிலும் மனித குலம் சிலிர்க்கின்றது, பெற்ற அன்னையைக் கண்டோர்,

அவ்வன்னையின் அன்பினைக் கண்ணிற் காணார்! அது போல் தென்றல் தன்னைப் புலப்படுத்திக் கொள்ளா மலேயே உயிர்க் கூட்டத்திற்கு ஊற்றின்பத்தைத் தருகின்றது.

உலைத்தீயை ஊதும் காற்றே உலைத்தீயில் உருகும் கொல்லனின் மலை நிகர்த்த தோளைத் தழுவியும் அவன் மார்பினில் தவழ்ந்தும் குளிர்ச்சியைத் தருகின்றது. "பெண்கள் விலக்காத உடையை நீபோய் விலக்கினும் விலக்கார் உன்னை" என்று தென்றலின் குறும்பினைத் தெளிவுறுத்துகிட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

குழந்தையை இழந்தால் உயிர்வாழ முடியாது. அத்தகு சிறப்பு வாய்ந்தது சின்ன குழந்தை. அக் குழந்தையின் மலர் முகத்தின் மேலிருக்கும் நெற்றிமீது துலங்கும் குழலினை அசைக்கிறது தென்றல். அன்பின் கொழுந்தென்று எண்ணி, எண்ணிற் குளிரூட்டி, அக் குழந்தையின் கையிலுள்ள கிலுகிலுப்பையினையும் தென்றல் அசைக்கின்றது.

மணமிக்க தென்றல் குளிர்ந்து கோடையின் வெப்பத் திற்கு மருந்தாகி, சோர்விற்கு மாற்றாகிப் பின் வானிற் பருந்தாகி இளங்கிளைமேற் பறந்தோடிப் பாட்டிசைக் கின்றது.

கவிஞர் தாளில் கவிதை எழுதிக் கொண்டிருந்தார். அவ்வழியே வந்தது தென்றல். வழக்கம்போல் இன்பம் தந்தது. கவிதை எழுதிய தாளைக் கிளப்பிற்று ஏன் என்று கேட்டார் கவிஞர். 'புழுதியைத் துடைத்தேன்,' எனப் புகன்றது. மீண்டும் கவிஞரைத் தழுவி இன்பம் தந்தது.

பாக்கு, தென்னை, சந்தனம் முதலிய மரங்கள் நிறைந்த பொதிகை மலைத்தென்றலே உன்னைப் பெற்றெடுத்தது; தமிழ்மொழியையும் பெற்றுத் தந்தது. அகத்தில் தமிழ் இன்பம் தரப் புறத்தில் நீ இன்பம் தருகிறாய். இவ்வாறு இருவரும் எனக்கு இன்பம் நல்குவதனை நான் கனவிலும் மறக்கமாட்டேன் என்கிறார் கவிஞர்.

கமுகொடு, நெடிய தென்னை
கமழ்கின்ற சந்த னங்கள்
சமைகின்ற பொதிகை அன்னை,
உனைத்தந்தாள்; தமிழைத் தந்தாள்;
தமிழ்எனக் ககத்தும். தக்க
தென்றல் நீ புறத்தும் இன்பம்
அமைவுறச் செய்வ தைநான்
கனவிலும் மறவேன் அன்றோ?

தும்பியின் கண்ணாடிச் சிறகில் மின்னி, மலர்களின் இதழ்களில் கூத்தாடித் துளி தேன் சிந்தி, சிறுபிள்ளைகள் விளையாடும் பந்தினைத் தள்ளிச் சென்று, கிளியின் சிறகுகளைப் பற்றித் தென்றல் விளையாடுவதாகக் கூறி முடிக்கிறார் கவிஞர்.

### காடு

நாட்டையடுத்து விளங்கியது காடு. காடு மிகுந்தால் மழைக்குப் பஞ்சமில்லை. காட்டில் இயற்கை கொலு வீற்றிருக்கிறது.

நகரத்தைத் தாண்டிச் சிற்றூரைக் கடந்து சென்ற போது தோய்ந்த பாதையும் தொலைந்து காடு வந்தது; அங்கு மாடி வீடுகள் இல்லை; மரங்கள் பேசாமல்

நின்றுகொண்டிருந்தன. மேன்மேலும் நடந்து மேற்குத் திக்கை அடைந்து காடு நோக்கிச் சென்றார் கவிஞர்.

பருக்கைக் கற்கள் நிறைந்த வழியெல்லாம் பள்ளம் மேடு. முதலைகள் படுத்துக் கிடப்பதைப்போல் சின்னதும் பெரிதுமான வெடிப்புகளைத் தாண்டிச் சென்று "கன்மாடம்" என்னும் புறாக்கள் கற்களைப் பொறுக்கக் கண்டார் கவிஞர்.

கவிஞர் கவினூறு காட்டுக் காட்சிகளைக் கண்டு சென்றபொழுது மயிலொன்று அகவித் தோகை விரித்து வரவேற்பு வழங்கியது கருப்பு எலியொன்று வாலை ஆட்டி நின்றது. நல்ல வழி காட்டிச் சென்றது. கொடுவாள்மீசை கொண்ட வேடன் கவிஞர் எதிரில் வந்தான். வேட்டையிற் சிக்கிய பறவைகளைக் காட்டினான். "அவைகளின் பெயர்களைக் கேட்டேன். பரத்துவாசன் என்னும் பறவையை நல்ல தூய தமிழில் 'வலியன்' என்று கூறினான். சகோரத்தைச் 'செம்போத்து' என்றான். தமிழா! நீ வாழ்க!" என்று வேடனைப் பாராட்டியதாகக் கவிஞர் கூறுகின்றார்.

முகத்திலே கொடுவாள் மீசை
வேடன், என் எதிரில் வந்தான்
அகப்பட்ட பறவை காட்ட
அவற்றின் பேர் கேட்டேன்! வேடன்
வகைப்பட்ட பரத்து வாசன்
என்பதை வலியன் என்றான்;
சகோரத்தைச் செம்போத் தென்றான்!
தமிழா நீ வாழ்க என்றேன்.

வேடன் புன எலுமிச்சை மரத்தைக் காட்டி அம் மரத்தைக் குருத்தென்று கூறுவர் என்றான். அந்தம்

பக்கம் சென்றால் மாமரம் ஒன்று எதிர்ப்படும். அவ்வழிச் சென்றால் காட்டை அடையலாம் என்றான்" வேடன்.

செருந்தி, ஆச்சா, இலந்தை, தேக்கீந்து, கொன்றை முதலிய மரங்கள் பெருங்காட்டின் கூரையாக வளர்ந்திருந்தன. அக்கூரை முகட்டின்மேல் நெடிதுயர்ந்து மூங்கில் தென்பட்டது. இரண்டு குரங்குகள் அங்கே பொன்னூசல் ஆடிக் கொண்டிருந்தன. குருத்து அடையாளமும், கோணல் மாமரமும் கண்டு கவிஞர் காட்டை அடைந்தார்.

அக் காட்டில் யானை ஒன்று இளமரத்தை முறித்திடும். ஆந்தைக் கூட்டைப் பூனை ஒன்றணுகும்; அங்கே புலி ஒன்று தோன்றும். பாம்பின் பானை வாய் திறக்கக் கண்டு யாவுமே பறக்கும். மான்கன்று மானைக் காணாது நிற்கும். அக்கன்றை நரிபோய் மாளச் செய்யும்.

சேவல் வாலின் கொழுந்து பட்டெழுந்த கொசுக் கூட்டங்களை முகில் என்று கருதி மயில் தோகைவிரித்தாடும். அப்போது அடைதேன் வழிந்திடும். தேன் குடித்த கரடி மயிலுக்கு வாழ்த்துக் கூறும்.

காற்றால் ஆடிய கிளைகள்தோறும் தொங்கும் கொடிகள் அசையும். பறவைகள் பாடியாடி இருக்கும். பகை விலங்குகள் ஒன்றையொன்று தேடியபடி இருக்கும். சருகில் மோதிக் காற்று ஓசை எழுப்பி நிற்கும். இவ்வாறு காடு பயன் பல நல்கி நிற்கும்.

## குன்றம்

மலைக்காட்சி என்றும் மாறா மகிழ்ச்சி நல்கும். தமிழ்க்கடவுள் முருகன் மலைநிலக் கடவுளாவர்.

'குறிஞ்சிக் கிழவ' எனக் கோலக் குமரனை நக்கீரர் பெருமான் நன்முருகாற்றுப் படையில் பாராட்டுவர். குன்றம் சார்ந்தே முகில்கள் மழைபொழிகின்றன. அழகு உறையும் இடங்களில் ஒன்று குன்றம்.

தங்கத்தை உருக்கி விட்டாலெனத் துலங்கும் ஓடையில் செங்கதிர் மூழ்கும் நேரம் மாலைக் காலமாகும். மூழ்கும் இடம் குன்றமாகும். பச்சை மலையில் பவழம் போர்த்ததுபோல மாலைக்கதிர் குன்றத்தில் மறைகிறது.

அருவிகள் வயிர மாலைகளாகவும், அடர்ந்த கொடிகள் பச்சைப் பட்டுத்துணிகளாகவும், குருவிகள் தங்கக் கட்டிகளாகவும், குளிர்ந்த மலர்கள் மாணிக்கக் கற்களின் குவியலாகவும் தோன்றுகின்றன. எருதின்மேற் பாயும் வேங்கைபோல், நிலவுமேல் எழுந்த மின்னல்போலச் சருகுகள் மேலெல்லாம் ஒளி சேர் தங்கத் தகடுகளாக விளங்குகின்றன.

கிளிக் கூட்டங்கள் தம் பசுமையான சிறகுகளை அடித்து, மலைப் புன்னை மரத்தின் பக்கம் வந்து கதிரைக் கிள்ளிப் போட்டு நிற்கின்றன. கதிரைத் தின்ற கிளிகளை கவண் கல்லெறிந்து வீழ்த்தினேன் என்றாள் மலைப் புறத்து மங்கை. அவள் தோழியோ, வீழ்த்தினேன் கிளிகள் இல்லை; கிளிகள்போல் தோற்றம் தரும் கொழும் புன்னை இலைகள் என்றாள்.

ஆதொண்டைப் பழத்தைப் பார்த்துக் கிளி என்று நினைத்தான் குறவன். மான் என்று கூறி குறுந்தாடி தூக்கிய அவனை "நான் அம்மானே!" என்று கூறி நகைத்து நின்றாள் மலைக்குற மங்கை.

குன்றத்தின் சாரல், குன்றின் அருவிகள் குதிக்கும் குளமாகும். பன்றிகள் ஆங்கே மணற்கிழங்கு பறித்திடும்.

குன்றிமணி, வெண்மைக் கோம்புகள் கொண்டு குறத்தியர்கள் அணிகள் பூண்டு நிலாமுகம் காட்டி நிற்பர்.

கதிர் முற்றி, அடித்தாள்கள் பழுத்த கொல்லைப் புலத்தில் பரண் அமைத்துக் குறமகளிர் கவண் வீசிக் கல்லெறியும்போது அவர்கள் கண்கள் நீலப்பூ நிகர்த்திருக்கும் அவர்கள் கைகள் செங்காந்தட்பூப் போன்றிருக்கும். இடுப்புகள் உடுக்கைகள் போன்ற காட்சி வழங்கும்.

மாலையில் கதிரவன் மறைகிறான் குன்றமாகிய பெண் ஒளியிழக்கிறாள். முற்றிய மூங்கிலால் இளங்கை நீட்டி வாராயோ என அழைப்பாள். சிறிய பறவைகள் அலறும். யானைகள் தம் இருப்பிடம் சேரும். குள்ள நரிகள் ஊளைச் சங்கு போன்ற குரலால் 'இருள் இருள், என்று கூவும்.

கரிய திரைக்குள் இட்ட பொற்குவியல்போல, கருந்தமிழ்ச் சொல்லுக்குள்ளே கருத்துகள் இருத்தல் போலக் குன்றத்தை இருள் மூடியது. இரண்டு நாழிகை நகர்ந்ததும் நிலவு கிளம்பிற்று. குன்றம் முத்துப்போலப் பொலிந்தது.

எழில்பெற்ற குன்றத்தை வகையுற வருணிக்கிறார் கவிஞர். நீல முக்காட்டுக்காரியாகிய நிலவாகிய பெண்ணாள், வற்றக் காய்ந்த பாலிலே உறைமோர் ஊற்றிப் பரு மத்தால் கடைந்து,' பானை மேலுற்ற வெண்ணெயை அள்ளிக் குன்றின்மேல் வீசிவிட்டாள். அவ் வெழிலை இயன்ற மட்டும் எடுத்துண்ணுவாய் என் தோழா! என்கிறார் கவிஞர்.

ஆனைகள், முதலைக் கூட்டங்கள், ஆயிரங் கருங் குரங்குகள், வானிலே காட்டிலே வந்த முகிற் கூட்டங்கள்

ஒன்றுகூடிப் பானையில் ஊற்றுகின்ற பதநீர்போல்
குன்றில் மொய்க்கப் போயின; குன்றம் அப்போது
அடிமை நெஞ்சம் புகைதல்போல் தோன்றும்.

ஆறு

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பர். ஆறு ஊருக்கு அழகூட்டுகின்றது; நீரூட்டுகின்றது; குளிர்ச்சி தருகின்றது; கண்ணுக்குக் கவினுறு காட்சி நல்குகின்றது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆற்றினை அழகுபட வருணித்திருக்கும் மாட்சியினைக் காண்போம்.

முதலாவது நீரற்ற ஆற்றுப்சாதை வருணிக்கப் படுகின்றது. இருபக்கம் மண்மேடுகள்; இடையில் ஆழமானதும் நீளமானதுமான ஒரு பாதை. அந்தப் பாதையில் நற்றாழம்பூவின் நறும்பொடி உதிர்ந்ததைப் போல் பெருமணல் நிறைந்துள்ளது. அப் பாதையின் மேலெல்லாம் கதிரொளிப் பெருக்கம்.

மணல் நண்பகற்பொழுதில் சுடும். அவ்வழிச் செல்வோர் இறங்கியும் ஏறியும்போய் அணைகரை மேட்டின் அண்டையில் நிற்கும் மரநிழலில் நின்று கொப்பளித்துப்போன தம் கால்களை ஆற்றிக் குளிர்வித்துக்கொண்டு, சாலைவழியே ஊரை அடைவர். நிலத்தின் நடுவில் ஆற்றுப்பாதை 'வானவில்'போல் தோற்றமளிக்கும்.

வெம்மையால் தீய்கின்ற வெளியெலாம் குளிர்காற்று புகுந்து குளிர்வித்தது. அதனால் துளிர்கள் சிலிர்த்தன. கூட்டங் கூட்டமாகப் பறவைகள் பறந்துவந்து குப்பத்து மரத்தில் உட்கார்ந்தன.

புதுப்புனல் வெள்ளம் சலசலவென ஒலியெழுப்பிப் பாய்ந்து வந்தது; வானத்துக் கதிர்ச்சுடரின் தங்கவொளி யினைத் தான் வாங்கி மிளிர்ந்தது. புரட்சியாகப் புதுவ தாக வந்த புதுவெள்ளம் கோடைக்காலத்தின் கொடிய ஆட்சியினை மாற்றியமைத்தது.

அப் புதுவெள்ளத்தின் வரவு பெருஞ் சிங்கத்தால் தாக்கப்பெற்ற யானையின் பிளிறல்போல் அமைந்தது. அவ்வரம்பு கடந்த வெள்ளத்தின் மீறலாலே மணற்கரை இடிந்து விழுந்தது. கரையோரத்தில் வளர்ந்திருந்த ஆலமரம் ஆற்றில் மல்லாந்து விழுந்தது. மேலே பருந்து பறந்தது. வாளை மீன்கள் நீரில் தம் பட்டாக் கத்தியனைய வாலைச் சுழற்றின.

கரையோரத்தில் கன்றுகாலிகள் மேய்ந்து கொண் டிருக்கும். சிறுவர்கள் தரையினிற் காதை ஊன்றிக் கவனித்துப் புதுவெள்ளத்தின் திரைமோதும் ஒலி கேட்ட தாகச் செங்கை காட்டிப் பெரியோரைக் கூவி அழைக் கின்றனர். அவர்கள் பேச்சொலியின் ஒலி நீளுகின்றது.

வெள்ளம் இரு கரையிலும் மோதித் ததும்புகின்றது; அக்கரைகள் தங்கச் சரிவுகளாகின்றன. துறையோ முத்துத் தடுக்குகளாகின்றது. மீன்கொத்திப் பறவைகள் சுழல்கின்றன. நீரில் மிதந்து செல்லும் மரங்களின்மேல் அமர்ந்திருக்கும் நாரை ஒன்று வெண்டாமரைப் பூப்போன்று விளங்குகின்றது. அதுபோது எழும் உவப்பினுக்கு எல்லை யில்லை. சொல்லோவியம் துலங்கும் அப்பாட்டுச் சித்திரம் வருமாறு :

இருகரை ததும்பும் வெள்ள
நெளிவினில் எறியும் தங்கச்
சரிவுகள்! துறையோ முத்துத்
தடுக்குகள்! சுழல்மீன் கொத்தி

மரகத வீச்சு! நீரில்
மிதக்கின்ற மரங்க ளின்மேல்
ஒருநாரை வெண்டா ழம்பூ
உவப்புக்கோ உவமை இல்லை

இரவு முழுவதும் வெள்ளம் ஆற்றின் இரு கரைகளையும் மோதியது. ஆற்றங்கரை மரங்கள் அசையாது நின்றன. வெள்ளம் எனும் படைக்கு மரங்களின் வாழ்த்து வந்து சேர்ந்தது.

சிற்றூர்ப் பெருமக்கள் ஆற்றுவெள்ளத்தைக் காண வந்தனர்; புதுவெள்ளத்தைப் போற்றி வாழ்த்துரைகள் புகன்றனர். காற்றெனப் பறந்து சென்று கழனிகளில் மடைதிறந்து வாய்க்கால்கள் மாற்றினர்! வடிகால்களை மறித்து நின்றனர்.

நூற்றுக்கு நூறுபேர் நோய் தீர்ந்து வறுமை தீர்ந்தனர். கலப்பை தூக்கிய உழவர் குடிப்பெருமக்கள் ஓய்வின்றி உழவுப் பண்பாடினர். தான் பெற்ற குழந்தைகளின் மகிழ்ச்சி கண்டு ஆற்றுத்தாய் சிலம்படி குலுங்க நடக்கின்றாள். இந்த வையகம் தழைக்க என வாழ்த்துகின்றாள்.

### செந்தாமரை

கண்ணுக்குக் கவினுறு காட்சி வழங்குவது செந்தாமரையாகும். “பூவெனப் படுவது பொறிவாழ் பூவே” எனத் தாமரை மலரைத் தமிழ் இலக்கியங்கள் சிறப்பிக்கும். செந்தாமரை குறித்த செய்திகளைப் பாவேந்தர் பாரதிதாசனார் இவண் தொகுத்துரைக்கின்றார்.

கண்ணாடித் தரையின்மீது காணும் பச்சைத் தட்டில் கிடத்தப்பெற்ற ஒளிமுத்துக்கள் போல, குளத்துத் தண்ணீரிற் படர்ந்த தாமரை இலைமேல் முத்துத் துளிகள் போன்ற தண்ணீர்த் திவலைகள் கண்டு உவப்புடன் வீடு சேர்ந்தார் கவிஞர்.

சில நாட்கள் சென்ற பின்னர்க் குளக்கரை சென்றார் கவிஞர். பச்சை இலைத் தட்டில் சிந்தும் பால்போல் எழில் நீரும், பசிய பாம்புகளின் தலைகள்போல் நிமிர்ந் திருந்த தாமரை மொட்டுகளும் கண்டு காட்சி இன்பம் கொண்டார் கவிஞர்.

இருள் மிகுந்த வீட்டில் எழில்மிகு நங்கையர் தம் செங்கைகளில் மணிவிளக்கேந்தி அணி செய்தல்போல, தாமரை இலைப்பரப்பில் செந்தாமரைச் செவ்வரும்புகள் முகிழ்த்துக் கவிஞரின் இரு விழிகளுக்குப் பெருவிருந்து படைத்தன.

பச்சைப் பட்டினைப் போர்த்துக்கொண்டு பெண்கள் சிரிக்கும் மாட்சி, பச்சிலைமேல் அரும்புகள் இதழ் விரிக்கும் காட்சியினைப் புலப்படுத்தும்.

விண்போன்ற வெள்ளக்காடு; வெள்ளப் பரப்பின் மேலே பச்சிலைக் காடு; அதன் மேலே செந்தாமரைக் காடு; இது நெஞ்சைக் கண்ணுக்குக் கொணர்ந்து கவிதை-யைக் காணச் சொல்லும்.

விண்போன்ற வெள்ளக் காடு,
மேலெலாம் ஒளிசெய் கின்ற
வெண்முத்தங் கள்கொ ழிக்கும்
பச்சிலைக் காடு மேலே

மண்ணுளார் மகிழும் செந்தா
மரைமலர்க் காடு நெஞ்சைக்
கண்ணுளே வைக்கச் சொல்லிக்
கவிதையைக் காணச் சொல்லும்.

செந்தாமரையின் சில பூக்கள் வாய்போல இருக்கும். 'வா' என்று அழைக்கும் கைபோலச் சில பூக்கள் இருக்கும். குளிர்பொய்கையிற் குள்ளக் குடைந்து நீராடி நீர்ப் பரப்பிற்கு மேலே தெரியும் பாவைமார் முகம் போலச் சில பூக்கள் பளிச்சென்று நெஞ்சைப் பறிக்கும். ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வதைப் போலச் செந்தாமரைப் பூக்கள் சிறந்தொளிரும்.

செந்தாமரையின் இதழ்கள் பின்வருமாறு ஒப்புக் கூறத்தக்கன. ஓரிதழ் குழந்தையின் கன்னத்திற்கு நிகர். ஓரிதழ் கண்ணை ஒத்திருக்கும். ஓரிதழ் மணவாளன் அழகினைக் கண்டு உவந்து பூரிக்கும் உதடு. மற்றுமோர் இதழ் பொல்லாதவர்களின் நெஞ்சம். கொடுத்துக் கொடுத்துச் சிவந்த உள்ளங்கை போல் ஓரிதழ் சிவந்திருக்கும்.

தாம் முயன்று பெற்ற தமிழுணர்வைத் தமிழ்த்தரணி முழுவதிற்கும் தந்த மூற்காலப் புலவர் போலச் செந்தாமரைப் பூக்கள் சிறந்த தேன் கொடுக்கும். தமிழ்த் தேனீக்கள் போன்ற வண்டுகள் ரீங்காரமிட்டு அத்தேனைக் குடிக்கும்.

தேன் உண்ண வண்டு பாடும். தேன் உண்ட வண்டு கள் வேறோர் இடம் நாடிச் செல்லும். வானிடத்திற் பறந்து சென்று களியாட்டம் நடத்தும், சில தனிக்கூட்ட வண்டுகள். "மலர் என்னும் கட்டில் உண்டு; நான் உண்டு" என்று சில வண்டுகள் உறங்கும். நறும்பொடி இறைத்துச் செல்லும் சில வண்டுகள்.

நான் என்னை இழந்தேன்; இன்ப உலகத்தில் வாழத் தொடங்கினேன். பொன் துகள், தென்றல் காற்று, புதுமணம், வண்டின் ரீங்காரம், மாணிக்கம் நிகர்த்த செந்தாமரைப் பூக்கள் இவற்றை இன்றெலாம் பார்த்திட்டாலும் தெவிட்டாது இன்பம்; இவையெல்லாம் அழகுக் கூத்துகள்; பாடல் வருமாறு :

என்னை நான் இழந்தேன்; இன்ப
உலகத்தில் வாழ லுற்றேன்;
பொன்துகள், தென்றல் காற்றுப்
புதுமணம் வண்டின் பாட்டுப்
பன்னூறு செழுமா ணிக்கப்
பறவைபோல் கூட்டப் பூக்கள்
இன்றெலாம் பார்த்திட் டாலும்
தெவிட்டாத எழிலின் கூத்தே!

## ஞாயிறு

ஞாயிறு—கதிரவனைப் போற்றாத தமிழ் நூல்கள் இல்லை. "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு பலர்புகழ் ஞாயிறு" என்பர் திருமுருகாற்றுப்படை தந்த நக்கீரர். எழுஞாயிற்றினை மக்கள் தொழு ஞாயிறாகக்கொண்டனர். "ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்றார் சிலம்பு தந்த சீர்சால் கவிஞர் இளங்கோவடிகள். ஈண்டு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் ஞாயிற்றின் சிறப்பினையெல்லாம் தெளிவுறக் காட்டுகின்றார்.

ஞாயிறு ஒளிப்பொருள்! உலகிற்கு ஒரு பொருள். நெஞ்சத்திற்களிப்பை விளைவிக்கும். கூத்தைச் சேர்க்கும் கனற்பொருள். ஆழமான நீரினின்று வெளிப்படுவது போல் எழுகின்றது வானக் கூரையிலெல்லாம் பொன்னை

அள்ளித் தெளிக்கின்றது. கடற்பரப்பில் அலைமோதும் ஒளியூட்டுகின்றது.

ஞாயிற்றின் வரவால் உலகின் உயிர்க்கூட்டங்கள் உறக்கத்தினின்றும் எழுகின்றன. இருள் விலகியது; சோர்வு அகன்றது. எங்கும் ஒளி பரந்தது. எங்கும் உணர்ச்சி வெள்ளம் அலைமோதியது. ஞாயிற்றின் கதிர்கள் வானமுகட்டில் பொலிந்தேறி, மேற்றிசையில் மறையும்பொழுது கோடி கோடி வண்ணத்தைக் காட்டிச் சுடர்விட்டன.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடரி மயிர் சிலிர்க்கும் சிங்கம் நிகர்த்த ஞாயிறே! வானவீதியில் தகதகவென எரியும் நெருப்புப் பிழம்பே! மாணிக்க மலையே! தீர்ந்த தங்கத்தின் தட்டே? வான அகலில் ஏற்றபட்ட பெருவிளக்கே!

கடல்மீது கோடி கோடிக் கதிர்க் கைகள் ஊன்றுகின்றாய்! நெடிய வானில் கோடி கோடி ஒளிக் கைகள் நீட்டி மலை, காடு, இல்லம், குளம், ஆறு இவை அனைத்திலும் ஒளியினைப் பாயிச்சி உயிரூட்டுகின்றாய். பருதியே நீ வாழ்க!

ஒரே புதுமை! தங்க .இழையுடன் நூலைச் சேர்த்துப் பின்னிய ஆடை காற்றிற் பெயர்ந்தாடி அசைவதைப் போல் நல்ல தூய நீரில் கதிர் கலந்து, குளிர் உடல் நெளிதல் காணலாம். இருளாகிய பலாப்பழத்தினை உன் கதிராகிய கத்தி உரித்து, சுளையாகிய ஒளியைக் கொணர்ந்தது.

வைகறையில் இலை, தளிர், மலர்களில் இலங்கும் பனியாகிய முத்தை உன் இளங்கதிர்க் கையால் உண்பாய்! பின் அழகினை ஒளியையெல்லாம் அலை அலையாய்

உமிழ்வாய்! இலைதோறும் ஈரம் காத்த கரைபோக்கி இயல்பு காப்பாய்! மலை, சோலைகளையெல்லாம் சுடரிப் பொன் நீரால் நனைக்கின்றாய்!

தாமரை அரும்புகளிலெல்லாம் இதழ்களைச் சிரித்தனை! மாமரத்தின் தளிர்கள் அசைவில் மணிப் பச்சை குலுங்கச் செய்தாய்! சேவற் கொண்டையிலும் உன் அழகே இலங்கிடக் காண்பேன்! நீ அரசன், ஒளியின் செல்வன்; மக்களெல்லாம் வாழ்த்தும் பகலவன்!

பறவைகளின் இறகுகளில் உயிரூட்டினாய்; பறவைகள் எழுந்து பறந்தன. பெண்கள் அறஞ் செய்வதற்குக் காலைக் கதிரே நீ வழிகாட்டிவிட்டாய்! ஆண்களின் மலை நிகர்த்த தோள்களில் நீ துலங்குகின்றாய்! கன்று காலிகள் உயிர்பெறச் செய்கின்றாய் நீ! மறத்தமிழர்கள் வாழ்வில் இன்பம் துலங்கிடுமாறு நீ வைத்தாய்!

வாழவைக்கும் உன் ஒளி இல்லாவிட்டால் வானத்திலே உள்ள நட்சத்திரங்கள் எல்லாம் தாழங்காய், கடுக்காய்கள் போல் தழைவின்றி அழகிழக்கும். பாழ் என்ற நிலையில் வாழ்வைப் பயிரிட்ட உழவன் நீ! பைங்கூழுக்கு வேரும் நீ! குளிருக்குப் போர்வையும் நீயே ஆவாய்!

கண்பார்வை என்னை நோக்க இயலாததாகிக் கீழே தாழ்கின்றது. நீ சோர்வை ஒழிக்கின்ற உணர்வாக உள்ளாய்! உலக இருளை ஓட்டி ஒளி வெள்ளத்தைச் சாய்க்கும் ஞாயிறே! நாங்கள் வெயிலில் ஆடிமகிழ்கிறோம்! புது ஞாயிற்றுத் தனிச் சொத்தே வாழி நன்றே!

### வான்

வானம் பார்க்கப் பார்க்க வண்ண வண்ண அழகைத் தருகிறது. ஒவ்வொரு நேரத்தில் வானம் ஒவ்வொரு

காட்சியை வழங்குகிறது. வைகறை வானம் வேறு; காலை வானம் வேறு; நண்பகல் வானம் வேறு! மாலை வானம் வேறு! முன்னிரவு வானம் வேறு; நள்ளிரவு வானம் வேறு. வகை வகையான காட்சி வழங்கும் வானம் என்றைக்குமே கண்கொள்ளாக் காட்சிதான். வெயில்வான் வேறு; மழை வான் வேறன்றோ!

தொடக்கத்திலேயே விண்மீன்கள் நிறைந்த வானைக் காட்டும் கவிஞர் தம் பொதுவுடைமைக் கருத்தினைப் புகுத்திப் புதுநோக்கில் பாடியுள்ள திறம் காணலாம்.

"இம்மண்மீது உழைப்பவர்கள் எல்லாம் வறுமை வாய்ப்பட்டவர்கள். செல்வர்கள், வறியர்கள் உரிமை கேட்டால் புண்மீதில் அம்பு பாய்ச்சும் புலையராகத் திகழ் கிறார்கள். பகற்பொழுது முழுவதும் கண்டு கொண் டிருக்கிற வானம் இரவுப் பொழுதில் நட்சத்திரங்களாகக் கொப்பளித்தெழுகிறதாம். கவிஞரின் கற்பனை இது:

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம், இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க்கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

பாற்புகை போன்று எழும் மேகங்களைக் கிழித்துக் கொண்டு வானின் மேலெழுகிறது நிலா; விண்மீன்கள் வானத்திற்குப் பொட்டு வைத்தாற் போன்று விளங்கும். வான் பூனை இருட்டையும் ஓட்டி நிற்கிறது.

பகல் வானில் கதிரவன் ஒளி பரவிற்று; மேகக் கூட்டங்கள் வகை வகையான ஓவியங்களை வழங்கின; யானைக் கூட்டங்கள்போல் முகிற் கூட்டங்கள் பொலிந்தன. மாணிக்க அருவிகளின் நீர் தகதகவென மின்னின. நீலமலைச்சாரல் துலங்கின; புகைக்கூட்டம் எரிமலைகள்போல் இலங்கின; பொன்போற் பூத்தது வேங்கை; பூஞ்சோலை ஒளி கூட்டிற்று.

கிழக்காகிய பெண் வானில் விட்டெறிந்த பந்தென விளங்கியது பருதி; அப் பந்து, மாலையில் மேற்றிசைப் பூங்காவில் விழுந்தது. அந்தியில் விளக்கேற்றி அழகு மங்கையர் இருள் நீக்கி ஒளி கூட்டுகின்றார்கள்.

காலையில் கோழி கூவிற்று! உலகம் கொண்டிருந்த இருளென்னும் மண்ணைக் காலை வானம் என்னும் கதிரோன் தங்க உலக்கை கொண்டு உழுதான். பின்னர் உலகின் உயிர் இயக்கம் தொடங்கியது. 'வாழிய வையம்' என்று கூறிக் காலை வானம் மலர்ந்தது.

காற்று வீசியது; நீளமான பூங்கிளை அசைந்தாடிற்று. மேகச் சேறு மூடிக்கொண்டது; அம்முகிற் சேற்றில் முகம் புதைத்துக்கொண்ட கதிரிற் பூத்த புதுப்புது வண்ண மெல்லாம் வானவில்லாய்த் தோன்றின. வானவில்லின் அழகினை வந்து பார்!

பகல் வானத்தின் மேல் கருமேகக்கூட்டங்கள் படை யெடுத்தன. வில், வேல், வாள்போல் அவை மின்னின. நல்ல கார்கால மேகம் நகையொலியெழுப்பி நகைத்தது. வெற்றி பெற்ற இயற்கைப் பெண். பூ மழையை அள்ளி இறைத்தாள்.

தேன் உற்பத்தி செய்யும் மலரும் தீய்ந்துவிடும் அளவிற்கு வானம் எரிகிறது. செந்தீயும் நீறாகப்போகிறது.

காடு, வயல், ஊர், மலை, சோலை, ஆறு, கடல் முதலியன வெல்லாம் எரிவதோடு தானே ஏற்படுத்திய நெருப்பில் அக் கதிரவனும் எரிகின்றான். பகல் வானம் செய்த வெப்பத்தால் இந்த உலகத்தின் அடியெலாம் வெப்பத் தால் வேகும்;

தேன்செய்யும் மலரும் தீயும்!
செந்தீயும் நீறாய்ப் போகும்! ,
கான், செய், ஊர், மலை, கா ஆறு
கடலெலாம் எரிவ தோடு
தான்செய்த தணலில் தானும்
எரிகின்றான் பகலோன்! அங்கு
வான்செய்த வெப்பத் தால்இவ்
வையத்தின் அடியும் வேகும்,

உச்சிக் கதிரவன் மேற்றிசை நோக்கி ஓரடி எடுத்து வைத்தான். நொச்சி மரத்தின் நிழல் கிழக்கில் சாய்ந்தது. நுரையும் நீரும் பச்சையும் பழுப்புமான பல வண்ண மேகங்கள் கூடிப் பொய்க்காட்சி போல வானைப் புகழும்; பின் மலையைக் காட்டும்.

வானம் எவ்வளவு பெரியது. அதனோடு ஒப்பிட்டு உன்னை நீ எண்ணிப்பார். இப்பூவுலகம் ஒரு கொய்யாப் பிஞ்சு என்றால் நீ அதில் சிற்றெறும்பு. மக்கள் அனைவரும் அவ்வாறே அமைந்திருக்க, நான் மேல், நீ கீழ் என்று மக்கள் பேசுவதெல்லாம் பித்தேறியவர் பேச்சேயன்றோ!

எத்தனை பெரிய வானம்!
எண்ணிப்பார் உனையும் நீயே;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு;
நீ அதில் சிற்றெ றும்பே

அத்தனை பேரும் மெய்யாய்
அப்படித் தானே மானே?
பித்தேறி மேல்கீழ் என்று
மக்கள்தாம் பேசல் என்னே!

இவ்வாறு வான் தந்த பாடமாம் சமத்துவ நோக்கினை வடித்துத் தருகிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

## ஆல்

விண்ணுறவோங்கி மண்ணில் விழுது பரப்பித் தழைத்து வளர்ந்திருக்கும் ஆலமரம் காணக் கண்கோடி வேண்டும். மன்னன் படை தங்கும் பாங்குடைய மரம்; அம் மரத்தினை வருணிக்கும் கவிஞர் கூற்றில் நகைச்சுவை கொப்பளித்து வருவதனையும் காணலாம்.

ஆயிரம் கிளைகள் கொண்ட அடிமரம் பெரிய யானைக்குச் சமம். ஆலமரத்தின் இலைகள் வானிற் பரந்து சென்று கிளை பரப்பியுள்ளன. பவளம் போன்ற காய்கள். அக் காய்களை நிழல் தந்து காக்கும் இலைகள் எல்லாம் உள்ளங்கைகள் போன்றவை. ஊரே அடங்கும் நிழலைத் தரும் ஆலமரம் ஒப்பற்றதன்றோ!

மரம்போல வளரும் கிளைகளுக்குத் தூண்களாக விழுதுகள் நிற்கும். ஆலமரத்தைச் சுற்றி நிற்கும் மறவர் கள்போல இவ்விழுதுகள் நிற்கும். வேர்களோவெனில் வாலினைத் தரையில் வீழ்த்தி மண்டிக் கிடக்கும் பாம்பின் கூட்டம் போன்றதாகும். நீலவானத்தை மறைக்கும் ஆலமரமே ஒற்றைக்கால் கொண்டு துலங்கும் நீண்ட பந்தலாகும்.

மேலே உள்ள கிளைகளிற் விழுதுகளெல்லாம் மின்னிடும் பொன்னிழைகளாகும். அருவியின்

தோற்றத்தைத் தரும் விழுதுகளும் உண்டு. வானக்கூரைக் கீழ் வேயப்பட்ட பச்சிலைப் பந்தல் ஆலமரம் என்றால், ஆலம் விழுதுகளைத் தங்கக் கதிர்கள் எனலாம்.

ஆலமரத்தின் அடிமரப் பதிவுகளிலெல்லாம் காட்டுப் பூனைகள் வாழும். இடையிடையே ஏற்பட்டுள்ள பொந்துகளில் பாம்புகளின் பெருமூச்சுகள் கேட்கும். பளிங்குக் கண் கொண்ட ஆந்தையின் சீறலும் அங்கே கேட்கும். பறவைக் கூட்டங்கள் தடதடவென ஒலியெழுப்பிப் பறக்கும். தரையெல்லாம் சருகுகள் நிறைந்திருக்கும்.

வௌவால்கள் உச்சிக் கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும், அவற்றின் வாய்க்குள் குலைப்பழத்தைக் கிளைகள் கொண்டு கொடுக்கும் கோதுகள் மழைப்போற் சிந்தும். தலைக்கொழுப்புப் பிடித்த குரங்கு சாட்டைக் கோல் ஒடிக்கும். பின்னால் இலைச்சந்தில் குரங்கின் வாலைப் பிடித்து அதனை எலியென்று கருதிப் பருந்து பற்றி இழுக்கும்.

கொத்தான பழக்குலையைக் குறுகிய கிளையிற் கண்டு அதனைப் பற்றத் தாவிய பெண் கிளி, தவறிக் கீழே விழுந்து அங்கே துடித்து நிற்கும்; தன் பெண் கிளியைக் கூடி ஆண்கிளி அன்பால் இணைந்து நிற்கும். அருகில் கிட்டும் தித்திக்கும் பழங்கள்கூட அந்நேரத்தில் ஆண் கிளிக்குக் கசப்பாகத் தோற்றம் அளிக்கும், எழிலோவியம்-காதலோவியம் படைக்கும் அக்காட்சி வருமாறு:

கொத்தான பழக்கு லைக்குக்
குறுங்கிளை தனில்ஆண் கிள்ளை
தொத்துங்கால் தவறி, அங்கே
துடிக்குந்தன் பெட்டை யண்டைப்

பொத்தென்று வீழும்; அன்பிற்
பிணைந்திடும்; அருகில் உள்ள
தித்திக்கும் பழங்கள் அக்கால்
ஆணுக்குக் கசப்பைச் செய்யும்!

வானத்துக் குமிழ் பறந்து வையத்தில் வீழ்வதைப் போல் தாளம் பாடும் சிட்டுகள் தழைகிளைகள் மீது வீழ்ந்து பூனைக்கண்போல் ஒளிக்கும் புழுக்களைத் தின்று தின்று தேன் நிறைந்த முல்லைக் காம்புகளின் சிறிய அடிகளில் தத்தித் தத்திப் பாடும்.

ஆலங்கிளையிற் பாம்பு தொங்க, அதனைவிழுதென்று எண்ணிக் குரங்கு தொட்டுவிட்டு, 'விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைதப்போல், கிளைதோறும் குதித்துத் தாவிக் கீழேயுள்ள விழுதுகளையெல்லாம் ஒளியுடைய பாம்புகளென்று கருதி, உச்சிக் கிளைக்குச் சென்று, தன்வாலையே பாம்போவென அச்சத்துடன் கண்டு மருளும். நகைச்சுவை கொப்பளிக்கும் அக்காட்சியினை வடித்து நிற்கும் பாடல் வருமாறு :

கிளையினிற் பாம்பு தொங்க,
விழுதென்று. குரங்கு தொட்டு
'விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கென குதித்த தைப்போல்'
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

அடுத்து, இயற்கையில் துலங்கும் ஒரு காட்சிவழி மாந்தர் கற்கவேண்டிய நன்றி எனும் பாடத்தினைக் கற்றுத் தருகின்றார் கவிஞர்.

ஆலமரத்தினைக் காற்று மோதும்; நான் அசைவேனோ எனச் சிரித்துத் தன் அழகுக் கிளைகள் எல்லாம் குலுங்க அடிமரக்குன்று அசையாமல் நிற்கும். இதுகாறும் தாலாட்ட ஆளின்றித் தவிப்பெய்திய கிளைப் பறவைகளெல்லாம் தாங்கள் கால்கள் வைத்திருந்த கிளைகள் ஆடக் காற்றுக்கு நன்றி கூறும்.

ஆலினைக் காற்று மோதும்;
அசைவெனோ எனச்சி ரித்துக்
கோலத்துக் கிளைகு லுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில் லாமல்
தவித்திட்ட கிளைப்புள் எல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும்!

மழை, மேகம், மின்னல் இவற்றிற்கு அஞ்சி மாங்குயில் பறந்துவந்து 'வழங்குக குடிசை' என்று வாய்விட்டு வண்ணம் பாடக் கொழுவிய கிளை தன் தோளை உயர்த்திக் குளிர்ந்த இலைகளின் கைகளால் பழந்தந்து களி தந்து பசுந்தளிர்களைக் குயிலுக்கு ஆலமரம் வழங்கி நிற்கும்.

## புறாக்கள்

பல்வேறு வண்ணப் புறாக்கள் கண்ணுக்கு விருந்து; காட்சிக்கு மாட்சி; புறாக்கள் வாழ்வுகொண்டு மாந்தரிக்கு ஒழுங்கினையும் ஒழுக்கத்தினையும் கற்பிக்கிறார் கவிஞர்.

வேலன் என்னும் சிறுவன் வீட்டுக்கு வெளிப்புறத்தே இருந்த புறாவின் கூட்டைத் திறக்குமுன் 'குடுகுடு' வெனப் புறாக்கள் குதிக்கும் ஒலி கேட்டது. கூடு திறக்கப்பட்டதும்

கீழே கொட்டிய கோட்டுப் பூக்கள்போல் புறாக்கள் குதித்துக்கொண்டு கூட்டைவிட்டு வெளியே வந்தன.

இருநிலா இணைந்துபாடி இரையுண்ணுவதுபோல் இணைப்புறாக்கள் திகழும். செவ்விதழ்கள் விரியாத தாமரைபோல் இணைப்புறாக்கள் விளங்கும். மெல்லிய பெண்கள் கருங்கொண்டை நிறத்திலும் கட்டி ஈயமாம் காயாம்பூக் கொத்தின் நிறத்திலும், வாழைப்பூ நிறத்திலும் புறாக்கள் உலவின. இவை உயிருள்ள அழகின் மேய்ச்சலாம்.

புறாக்கள் வட்டமாகக் கூடியே தமக்குக் கிடைத்த இரையினைக் கூட்டுண்ணும், அவைகளின் வாழ்வில் வெட்டுமில்லை; குத்துமில்லை; வேறு வேறாக இருந்து இரையுண்ணும் பழக்கமில்லை. கீழ்மேல் என்று தம்முள் இனம் பிரித்துக் கொண்டு பிரிந்து வாழும் பேதைமை இல்லை. இது புறாக்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமாகும்.

இட்டதோர் தாம ரைப்பூ
இதழ்விரித் திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள் கூடி
இரையுண்ணும்; அவற்றின் வாழ்வில்
வெட்டில்லை; குத்து மில்லை;
வேறுவே றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்க மில்லை.

புறாக்களின் நடையழகு காணக்காண மகிழ்ச்சிதரும். உலக மன்னர்க்கு நடை கற்பிக்கும் பாங்குடையது.

புறாவின் ஒழுக்கமும் பாராட்டற்பாலது.

ஒரு பெண் புறா தனக்குரிய ஆண் புறாவினையே அவாவி நிற்கும். ஒரு பெண்புறா மத்தாப்பின் ஒளிகாட்டி வேறோர் ஆண்புறாவை மயக்கினாலும், அவ்வாண்புறா அப்பெண்புறாவினைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. இணைப்புறாக்களில் ஒன்று இறந்து போனால் தான், இருக்கும் ஒரு புறா மற்றொரு புறாவினை நாடும்.

> **ஒருபெட்டை தன்ஆண் அன்றி**
> **வேறொன்றுக் குடன்ப டாதாம்;**
> **ஒருபெட்டை மத்தாப் பைப்போல்**
> **ஒளிபுரிந் திடநின் றாலும்**
> **திரும்பியும் பார்ப்ப தில்லை**
> **வேறொரு சேவல் தம்மில்**
> **ஒருபுறா இறந்திட் டால்தான்**
> **ஒன்றுமற் றொன்றை நாடும்!**

ஒருசில புறாக்கள் தவறுதலாகத் தவறி நடக்கும் சில மனிதர்களிடமிருந்து தகாத பாடத்தைக் கற்றுக்கொண்டு விட்டனவாம். பெண்புறா வருந்தும் வண்ணம் தவறிழைக்கும் ஆண்புறா அப் பழக்கத்தைக் கவலை மிக்க மக்களிடமிருந்தேதான் கற்றுக் கொண்டிருக்கவேண்டும்.

தலை தாழ்த்திக் குடுகுடென்று ஓடி வந்து தன்னைச் சுற்றும் ஆண்புறாவைக் கொலை பாய்ச்சும் கண்ணால் பெண்புறா திரும்பிப் பார்த்து 'இங்கு வா' என்றழைக்கும். மலைகாட்டி அழைத்தாலுந்தான் மையல் உற்றார் மறுப்பாரோ?

தாய் இரையுண்டு கூட்டிற்குச் சென்று அங்கு வதியும் தன் குஞ்சுகளின் வாயில் அவ்விரையைச் செலுத்தும். குஞ்சு தாயின் வாய்க்குள் தன் மூக்கை வைக்கும். தாய் தான் சாப்பிட்டதைக் கக்கித் தன் குஞ்சின் குடல்

நிரப்பும். தாய் ஊட்டி, ஒய்ந்ததும் தந்தை ஊட்டும். இவ்வாழ்க்கை அன்பிற்கோர் அடையாளமான வாழ்க்கை யாகும்.

தாய்இரை தின்ற பின்பு
தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
தாய்வாய்க்குள் வைக்கும் மூக்கைத்
தாய்அருந் தியதைக் கக்கித்
தன்குஞ்சின் குடல்நி ரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்!

மயற்புறா படம் விரித்து மார்பினை முன்னே உயர்த்தும். கூத்து நூல் சொல்லியவண்ணம் கால்களைத் தூக்கி அடைவு போடும். மயில்புறா வெண்சங்கு நிறமுடையதாகும். அதன் தோகை, தந்த விசிறி போன்றதாகும்.

வானத்திற் சுழற்றிய கூரீவாள் போலப் புறாக்கள் கூட்டமாய்ப் பறந்துபோகும். இவ்வாறு உரிமையுடன் வானிற் பறந்து திரிபவை மாலை நேரத்திற் கொத்தடிமைகள் போலக் கூட்டை வந்தடையும். வேலன் கூட்டினை வந்து சாத்தினான். வண்ணங் குழைத்துத் தீட்டப்பட்ட ஓவியம் திரையிட்டு மறைக்கப்பட்டுவிட்டது.

## கிளி

காண்பவர் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்வது கிளி. அக் கிளியைக் கவிஞர் காணும் திறனை இங்கு காணலாம்.

இலவங்காய் போன்று செக்கச் செவேலெனச் சிவந்திருக்கும் மூக்கு? மணல்தக்காளி போன்ற எழில் ஒளி சிந்தும் கண்; மாந்தளிர் போலும் வால், பச்சை வண்ணம் இவை கொண்டது பசுங்கிளி.

வானவில்லைப் போன்ற பொன்வரிகள் கிளியின் கழுத்தைச் சுற்றி இருக்கும். ஆலமரப்பச்சை, அலரிக் கொழுந்து, அல்லி இலை இவற்றில் உள்ள பசுமைகூடக் கிளியின் உடல் மீதுள்ள சொக்குப் பச்சை வண்ணத்திற்கு ஈடாகாது.

இயற்கை எந்தப் பொருளிலும் ஓரளவு அழகைச் சேர்த்து இவ்வுலகில் அதனைக் கொள்ளும் பொருளாக்கும் ஆனால் தன்னரிய கையிருப்பாம் அழகெனும் தலைச் சரக்கைக் கூட்டிச் சமைத்திட்ட பொருளே கிளியாகும்.

மக்கள் உரைத்ததை உரைத்தவண்ணம் உரைத்திடுவது கிளியாகும்.

கிளி, பச்சிலை மேல் தோன்றும் கோவைப்பழத்தில் மூக்கை ஊன்றி நிற்பது, விளக்கினில் விளக்கை ஏற்றுவது போல் உள்ளது. ஆலமரத்தின் கிளைகளுக்கிடையில் கிடக்கும் இலையும் காயும் போல நீ கிடக்கின்றாய்.

உனக்குத் தென்னை மரம்தான் ஊஞ்சல், வான வெளிதான் திருவலாக் கொள்ளும் வீதி. நீ வாரித் தின்பதற்குப் பழங்கொட்டைகள் போதும். இந்நாடே உனக்கு வையகம். புன்னைக்காய்போலத் தலையில் புதுமுடி புனைந்திருப்பாய். நீ எங்கும் அழகு ஆட்சி செய்கின்றாய்.

காட்டில் நீ திரியும்பொழுது கிரீச்சென்று கூவுகின்றாய், கூட்டில் இருக்கும்பொழுது நாங்கள் பெற்ற

குழந்தைகள் போல் எங்களிடம் கொஞ்சிக் குலாவு கின்றாய். வீட்டிலே 'தூத்தம்' என்றும் வெளியிலே பிழைப்புக்காக ஏட்டிலே 'தண்ணீர்' என்றும். சிலர் கூறுவர். அவர்களும் உன்போல்தான் ஈரிடத்தில் இரு பேச்சுப் பேசுகின்றனர்.

காட்டினில் திரியும்போது
கிரீச்சென்று கழறு கின்றாய்;
கூட்டினில் நாங்கள் பெற்ற
குழந்தைபோல் கொஞ்சு கின்றாய்!
வீட்டிலே தூத்தம் என்பார்
வெளியிலே பிழைப்புக் காக
ஏட்டிலே தண்ணீர் என்பார்
உன்போல்தான் அவரும் கிள்ளாய்!

குழந்தைகளிடம் கொஞ்சுவாய்; அழகு கொழிப்ப ஒளிர்வாய் நீ. நீ மன்னர்குடிப் பிறந்த மங்கையரையும், வறியவர் குடிப் பிறந்தோரையும் ஒரு நிகராகவே கண்டு அவர்கள் மனத்தில் மகிழ்ச்சி ஊட்டுவாய். அவர்கள் அளிக்கும் அளித்த பழத்தையும் உண்பாய்; கூழாயினும் நன்று என்று மகிழ்வாய்.

குறவன் காட்டில் உன்னைப் பிடித்து நாட்டிற் கொண்டு சென்று வீடுதோறும் விற்பான். செல்வர் தமிழுக்கு வாரி வழங்குதல்போல உனக்கும் அதிக விலை தந்து உன்னைப் பெறுவர்.

கவிஞர்கள் நாளும் கண்ணும் கையும் சோர உழைத்துப் பொருளும் பெருமையும் சேர்க்கக் காவியம் இயற்றுவர்; ஆனால் ஓவியப் புலவனோவெனில் உன் எழிலை ஓவியத்தில் எழுதிவிட்டால் அவன் தேவைக்குப் பணமும், வேண்டும் புகழும் கிடைக்கும்.

## இருள்

இறைவன் படைப்பில் எதுவுமே வீணாகப் படைக்கப் பட்டதில்லை. வெயிலின்றேல் நிழல் அருமையைத் துய்க்க முடியாது. அதுபோல் ஒளியின் பெருமையினை அறிய இருள் துணை செய்கிறது.

ஆடி ஓடி வாடி அலுத்துப் போய் இருக்கும் வைய மக்களை ஓடி அணைக்கிறது இருள்.

விண் முதல் மண் வரை இருள் தன் ஆட்சியினைப் புரிகிறது. இருள் அடிக்கடி உடை மாற்றம் செய்கிறது. பகலில் தங்கச் சேலையும், இரவில் வெண்பட்டுச் சேலையும் உடுத்தி நிற்கிறது.

கதிரவன் இருட்டை ஒழிக்க வைகறையில் எழுந்து புறப்பட்டான். ஆயினும் நீர் நிலைகளில் இருள் என்றும் செறிந்து கிடக்கின்றது. அதில் கதிரவன் சுழலும் வண்டாகத் துலங்குகின்றான்.

திருடரை வெளிப்படுத்துவது இருட்டு, பிள்ளைகள் தூங்கினார்கள். பெண்டாட்டி அருகில் நின்றாள். கணவன் உள்ளம் எதிலும் ஒட்டாமலிருந்தது. இருள் தன் கொண்டையில் நிலவாகிய பூவைச் சூடி நின்றது. அதனைக் கண்டு உள்ளம் நெகிழ்ந்தேன்.

நீ வானோடு பிறந்தாய். கடலில் தோன்றும் மீன் போல் உயிர்க்குலங்கள் முகிழ்த்தன. எவ்விடத்தும் இருளே நீ நிறைந்தாய், ஒருபொருள் உண்டெனில் நிழலிருப்பதும் நிச்சயம் போல் நீ துலங்குகின்றாய். நீ பானையின் உள் இருப்பாய்; பாலின் அணுக்கள்தோறும் பரந்திருப்பாய்.

உயர்ந்துள்ள அழகான மூக்கின் இருபுறச் சரிவில் இலங்குவாய், அழகு நங்கையின் விழிக்கடையில் விளங்குவாய். காதின் நடுப்புறத்திலும் பக்கத்திலும் சூழ்ந்திருப்பாய் பெண்களின் முகத்திலும் அடையாளம் பொறிக்கும் இருளே, உன் பெருமையினை ஓவியரே அறிந்திருப்பர்.

தாமரைப் பூவின் அடிப்புறத்தில் இருள் படர்ந் திருக்கும் பூவின் பசையான இதழ்களில் நீ துலங்கு கின்றாய். நீ இல்லையெனில் தாமரைக்கு அழகு ஏது? எல்லாப் பொருள்களையும் அடுத்திருக்கும் இருளே! அனைத்துப் பொருளினுள்ளும் அழகாக நீ துலங்கு கின்றாய்.

அறிவெனப்படுவது ஒளியாகும். அறியாமை இருளாகும். அறியாமை அறிவுதேட வற்புறுத்தும். தேள் இரவில் சிறுவனைத் தீண்டியது. விளக்கு வேண்டும். விளக்கேற்ற நெருப்புக் குச்சியைத் தேடினார்கள் சிலர்; கிடைக்கவில்லை. பெட்டியில் நெருப்புப் பெட்டியிருப்ப தாகப் பேசினர்; பெட்டிச் சாவி இல்லை. இதற்குள் சிறுவனைக் கொட்டிய தேள் மேலும் எட்டுப் பேரைக் கொட்டிவிட்டது. 'கட்டாயம் தூய்மை வேண்டும்' என்னும் உண்மையினைக் கற்றுத்தந்த இருளே உன் பெருமைதான் என்னே! என்கிறார் கவிஞர். இவ்வாறு இருளையும் வருணிக்கும் திறம் பெற்ற இணையிலாப் புலவராகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் துலங்கு கின்றார்.

## சிற்றூர்

சிற்றூர் நாட்டின் செல்வம்; உயிர்நாடி; அதனை வருணிக்கிறார் கவிஞர்.

நெடுஞ்சாலை வழிச்சென்று பின்னர் ஒரு முடுக்கை அடைந்து, ஓர் ஒற்றையடிப்பாதை கண்டு, அங்கு ஆலமரத்தின் கீழ்க் கன்றுகாலிகளை மேய்க்கும் இடைச் சிறுவனைக் கண்டேன். அவன் என்னை 'எந்த ஊர்?' என்று கேட்டான்.

புதுச்சேரி என்று, போகும் வழியினைக் கேட்டேன். இதைத் தாண்டிப் பழஞ்சேரி சென்று, ஒதியஞ் சாலை யோடு போனால் ஓணான் பச்சேரி வாய்க்கால் கடந்து புதுச்சேரியினை அடையலாம் என்றான்.

ஆங்குப் பசுக்கள் புல் மேய்ந்து கொண்டிருக்கும். ஆயன் பண்ணிசைத்துக் கொண்டிருப்பான்.

மந்தையை அடுத்து இரு பக்கத்திலும் வரிசையாய் அணிலின் வால்போல் சோளக்கொல்லை அமைந்திருந்தது. வேலிக்குள் கள்ளிமரம் தழைத்து இருந்தது. வெந்தயச் செடிகளின்மேல் தங்கப் பூக்கள் மின்னின.

முற்றிய கனிந்த குலை வாழைப் பழத்தைச் சுமந்து கொண்டு 'வறிய மக்களே வாரும்' என்று வருந்தி அழைத்தது வாழைத்தோட்டம். ஒரு காணிப் பருத்திக் கொல்லையில் நீர் பாய்ச்ச ஓர் ஆள் சிற்றோடு கையில் ஏந்தி நீர் இறைத்தான். அவன் செயல் உழைப்பொன்றே செல்வம் என்று தெரிவித்தது.

குட்டையிலிருந்து தவளை ஒன்று வெளியே குதித்தது. அதனைப் பாம்பொன்று வாயிற் கவ்வி விழுங் கியது. அப் பாம்பைப் பெட்டைப் பருந்தொன்று மாய்த்துப் பெருங்கிளை கொண்டு சேர்த்துத் திண்ணத் தலைப்பட்டது. அதனைக் கண்டு திடுக்கிட்ட சிட்டுகள் ஆலமரத்தினின்று மேலெழும்பிப் பறக்கும்.

முட்டை விற்பவள் ஒருத்தி ஒருநாளும் முட்டை தின்னும் வாய்ப்புப் பெறவில்லை. உப்பு மிளகாய்ச் செலவிற்கே முட்டை விற்றாள்.

சேரியை அடுத்துப் பெரிதான சிற்றூர்; அங்குத் தென்னை மரங்களும், மாமரங்களும் சூழ்ந்திருக்கும். தேரொன்றும் கோயிலொன்றும் சேர்ந்ததோர் வீதியுண்டு. ஓட்டுக்கூரைகள், கூண்டுவண்டி, கொட்டில் சேர்ந்த வீதிகள் ஐந்து உண்டு. ஊர் இதுவென்றாலும் நாட்டிலுள்ளோர்க்கெல்லாம் உயிர்தரும் உணவின் ஊற்றும் இது தான்.

நன்செயைச் சுற்றி வாய்க்காலும், ஆற்றுநீரைப் பாய்ச்சி விளைவு விளைவிக்கும் உழவனும், அவனுக்குக் கூழும் அக் கூழுக்கு முடக்கத்தான் துவையலும் கொணர்ந்த அவன் ஆசை மனைவியும் சிற்றூரிற் பொலி கின்றனர்.

பட்டணம்

சிற்றூர்க்கு மறுதலையான காட்சி வழங்குவது பட்டணம்.

தெருக்கள் பல; வீடுகள் பல; சுண்ண வேலை, மர வேலையால் உயர்ந்த மாளிகைகள் பல பட்டணத்தில் பாங்குற நிமிர்ந்து நின்றன.

மனிதன் எவ்வுயிர்க் குலத்திற்கும் உயர்வு சான்றவன்; தான் அறிந்த உண்மையை உலகுக்குப் பொதுவாக்கும் முயற்சியும், இடைவிடாமல் முன்னேறச் செயலைச் செய்யும் பயிற்சியும் உடையவன் என்பதனைப் பட்டணம் எடுத்துக்காட்டும்.

புகைவண்டி ஊர் நடுவில் ஓடும். பாதையில் பல வகை ஊர்திகள் ஓடும். கடலோரத்தில் கப்பல் வந்து நின்று கணக்கற்ற பொருள்களைக் குவிக்கும். மக்கள் சிட்டுப்போல் பறந்து பணியாற்றுவர்.

வாணிகப் பண்டசாலைகள், அங்காடிகள், காட்சிச் சாலைகள் மனிதர் தம் கலைத்திறனைக் காட்டும்.

உள்ளத்தில் உள்ளதை ஏட்டில் வடிக்கும் அறிஞர்கள் கூட்டமும் கொள்கை ஒன்றிருக்க வேறு கொள்கைக்கே அடிமையாகும் வெள்ளுடை தரித்த எழுத்தாளர்கள் கூட்டமும் பட்டணத்தில் காணலாம்.

உண்மை, பொய் என்ற இரண்டிற்கும் வழக்காடும் வழக்கறிஞர்கள், தம் கட்சியினை எடுத்துரைக்கும் உயர்நீதி மன்றம், பொதுநலஞ் சேர்க்கும் மன்றம் ஆகியனவும் அங்கே காணலாம்.

நாளெல்லாம் உழைத்துச் சோர்ந்த மக்கள் மாலையில் சாராயக் கடைக்குள் நுழைவதனையும் அங்கே காணலாம். மாலை நேரத்தில் கோழி முட்டை மரக்கறி என நுவலப்படுவதனையும் காணலாம்.

இயற்கையின் எழிலையெல்லாம் சிற்றூரிற் காணலாம். செயற்கையின் அழகையெல்லாம் பட்டணம் தெரியக் காட்டும். முயற்சியையும் முழுதுழைப்பையும் சிற்றூரிற் காணலாம். பயிற்சியையும் கலையுணர்வையும் பட்டணத்திற் பார்க்கலாம்.

எதிர்காலத்தில் நாடு காக்கும் நல்லோராய் விளங்க இருக்கும் இளைஞர்கள் கூட்டங்கூட்டமாகச் சுவடி தூக்கிக் கல்விக் கூடங்களுக்கு ஒருநாளும் தவறிடாமல் செல்வது உவப்பைத் தருவதாகும்.

நிலவிடும் நிலாமுகத்து நீலப்பூவிழி மங்கையர் கலையினில் வளர்ந்து நாட்டுக் கவிதையில் ஒளிமிகுந்து தலையாய கலைகள் ஆய்ந்து மாலையில் வீடு திரும்பினர் அதனால் அறியாமைப் பேயின் தோல் உரிந்தது.'

தமிழ்

தமிழ் பற்றிப் பாடும்போதெல்லாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் உணர்வின் மையமாய்த் துலங்கக் காணலாம்.

மனிதத் தோற்றத்தோடேயே முகிழ்த்தது தமிழ்.

பறவை, விலங்கு, வண்டு, தழை, மூங்கில் இவை பாட்டிசைக்கக் கண்டு, அவற்றையொட்டி அமைக்கப் பெற்றது தமிழிசை. இன்ப எக்களிப்பில் தோன்றியது கூத்து.

இயற்றமிழ் இயல்பாய்ப் பிறந்ததாகும். ஒருவர் தந்தது என்று ஒப்புதல் பெரும் பிழை.

எழுத்து, சொல் கொண்டு பொருளாகி, இயல் இசை கூத்தாகித் தமிழருக்கு உயிர் தமிழாகத் துலங்குகின்றது.

எவராலும் ஒழிக்கவொண்ணாமல் தலைமுறை தலைமுறையாகக் கிளைத்து வளர்ந்தது தமிழாகும்.

இசையினில் எண் நுட்பம் தெரிகின்றது. கல்வில் சிற்ப நுட்பம் தெளிவாகின்றது. ஓவியங்கள் முதலான கலைகளைத் தந்தது தமிழ்.

பன்னூறு ஆண்டுகளாகப் பழந்தமிழ் மலையின் ஊற்றாய் விளங்கியது மன்னர்தம் காப்பிலே வளர்ந்தது. அயலார் இட்ட நஞ்சாலும் அழியாமல் உயிர்க்கின்றது.

பகைக்கஞ்சாதது தமிழ் வடக்கிலிருந்து வந்த பகையை வீழ்த்தியது தமிழ்.

வடக்கினில் தமிழர் வாழ்வை
வதக்கிப், பின்தெற்கில் வந்தே
இடக்கினைச் செயநி னைத்த
எதிரியை, அந்நாள், தொட்டே
'அடக்கடா' என்று ரைத்த
அறங்காக்கும் தமிழே! இங்குத்
தடைக்கற்கள் உண்டென் றாலும்
தடந்தோளுண் டெனச் சிரித்தாய்.

தீயோர் பலர் ஆளுவோர்க்காட்பட்டு அரசியல் தலைமை கொள்ள நாளும் முயன்றாலும் தமிழ் நடுங்க வில்லை. தமிழர்க்குச் சாதி மத வேறுபாடில்லை என்று முழங்கியது தமிழ்.

இருளினை, வறுமை நோயைத் தகர்ப்பேன். என் மீது மோதுகின்ற பகையினை யான் ஒருவனாகவே அழிப்பேன். தமிழே! நீயோ கருமான் செய்படையின் வீடு! நான் அங்கோர் ஆற்றல் சான்ற மறவன்! கரும்புச் சுவை நிகர்த்த தமிழே நீ ஓர் பூக்காடு! நான் ஓர் தும்பி!

இவ்வாறாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் தமிழினைப் பலவாறாகப் புனைந்துள்ளார்.

# 11. பாவேந்தர் பாரதிதாசனின் குடும்ப விளக்கு

புதுவைக்குயில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் அரிய உயரிய படைப்பு 'குடும்ப விளக்கு' எனலாம். 'கல்வே' கல்லூரியில் தமிழாசிரியாராகப் பணியாற்றிய பாரதிதாசனுக்குப் பாரதியாரின் தொடர்பு பாண்டிச்சேரியிலே ஏற்பட்டது. ஒரு திருமணத்தில் பாரதியும் பாரதிதாசனும்—அப்போது பெயர் கனக சுப்புரத்தனம்—சந்தித்தனர். பாரதியார் கனக சுப்பு ரத்தனத்தைப் பார்த்து ஒரு பாடல் எழுதச் சொன்னார். 'எங்கெங்குக் காணினும் சக்தியடா!' என்ற பாடல் பிறந்தது. அப்பாடலைப் பாரதியார், "பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்னம் இயற்றியது" என்று சொல்லிச் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். அப்பாட்டும் பிரசுரம் ஆனது. பாரதியாரிடம் தாம் கொண்டிருந்த நட்புறவு, நேயம், பெருமதிப்பு. —இவற்றின் காரணமாகக் கனககசுப்புரத்தனம் பாரதிதாசன் எனப் பெயர் மாற்றம் செய்துகொண்டார். மளிகைக்கடை கனகசபை முதலியாரின் மைந்தர் சுப்புரத்தனம் புரட்சிக் கவிஞராய், பாவேந்தராய்த் துலங்கினார். திராவிட இயக்கத்தின் தனிப்பெருங் கவிஞராகப் பின்னாளில் திகழ்ந்தார். இவர் கவிதை, உரைநடை, நாடகம், திரைப்படங்களுக்கு உரையாடல்கள் என்று பல துறைகளில் தம் திறமையைக் காட்டினார். இவர் இயற்றிய கவிதை நூற்களில் சிறப்பிடம் பெற்றுத் துலக்குவன பாரதிதாசன் கவிதைகள் I, II, III தொகுதிகள், அழகின் சிரிப்பு, தமிழியக்கம்,

எதிர்பாராத முத்தம், பாண்டியன் பரிசு, தமிழச்சி யின் கத்தி முதலியனவாகும். 'படித்த பெண்கள்' என்பது இவர் எழுதிய சிறந்த நாடக நூலாகும். 'பிசிராந்தையார்' எனும் நூல் இவர் இறப்பிற்குப் பின்னும் இவருக்குப் 'சாகித்திய அகாடெமி' பரிசு வாங்கித்தந்த நூலாகும்.

கவிஞர் இயற்றிய கவிதை நூற்களில், காலம் கடந் தாலும் தமிழ்ச் சமுதாயத்தில் நின்று நிலவி என்றும் வாழத்தக்கதொரு வகையான நூல் 'குடும்ப விளக்கு' என்பது. ஏனெனில் புரட்சிக் கவிஞர் அவர்கள் இந் நூலின் முன்னுரையில்.

''குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்.

முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்கும் என்பது பற்றிய என் எண்ணந்தான் இந்தச் சிறிய நூல்!

நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்.

இந்நாளில் சிறிது கூடுதலான வருவாய் ஏற்பட்ட வுடன் துணைவியரி உடல் நலங்காமல், உடை நலங்காமல், வேளைக்குச் சாப்பிடுவதுதான் குடும்ப ஒழுக்கம் என்று நினைத்துவிடுகிறார்கள். பெண் களிடமிது பெரு வழக்க மாகி வருகிறது. கணவன் மாரும் இந்நிலை முழுத்தன்மைவாய்ந்தது என்று முடிவு கட்டுகிறார்கள்.

கற்றலும் அதற்குத் தக நிற்றலும் நிறைய அமைந்திருக்க வேண்டும், துணைவியிடத்தும் கணவனிடத்தும்.

இந்த நிலையில் அங்குத் தோன்றும் பிள்ளைகள் எப்படி இருப்பார்கள் என்பதைச் சொல்ல வேண்டி யதில்லை.

இத்தகைய குடும்பத்தில் எடுத்ததற்கெல்லாம் வேலைக்காரன், வேலைக்காரி வேண்டாம். அனைத்துக்கும் பிறர் கையை எதிர்பார்ப்பது நிலையற்ற செய்கை; எப்போதும் எதிர்பார்க்கக் கூடியதன்று; ஏனென்றால் எல்லாரும் வேலைக்காரர் அல்லது எல்லாரும் உடையவர் என்ற நிலையை உண்டாக்கத்தான் அறிவுலகம் விரைந்து வேலை செய்கிறது. இவ் வையகத்தின் நோக்கமும் அதுதான்!

குடும்ப விளக்கில் வேலையாட்களுக்கு இடம் ஏற்படுவதில்லை.

தமிழ்நாட்டின் பண்டைய அறிஞர்கள் கண்ட குடும்பங்கள் நமக்குச் சீவகன் முதலிய பெருநூற்களிற் காட்சியளிக்கின்றன. இன்றைய நிலையில், எளிய நடையில் அமைந்த "குடும்ப விளக்கு" ஒரு நடுத்தரக் குடும்பம் இது என்று திட்டமாகச் சொல்லா விட்டாலும் கோடு காட்டியதாகவாவது இருக்கும்.''

'கவிஞர் கருத்து' என்ற தலைப்பிற் காணப்படும் மேற்காணும் கருத்துகள் சிந்தனைக்கு விருந்து நல்குவன வாகும்.

'குடும்ப விளக்கு' ஐந்து பகுதிகள் கொண்டது. முதற்பகுதிக்குத் தலைப்பு இல்லை. ஆயினும் கவிஞர் இரண்டாம் பகுதியின் தொடக்கத்தில், "குடும்ப விளக்கு முதல் பகுதியின்கண் நல்லதோர் குடும்பத்தின் ஒரு நாள் நிகழ்ச்சி குறிக்கப் பெற்றிருந்தது" என்று குறிப்பிடுகின் றார். எனவே முதற்பகுதியினைக் "குடும்பத்தின் ஒரு நாள் நிகழ்ச்சி'' எனலாம். இரண்டாம் பகுதி 'விருந்தோம்பல்" என்பதாகும். மூன்றாம் பகுதி 'திருமணம்' எனப் பெயரிடப்

'பட்டுள்ளது. 'மக்கட்பேறு' நான்காம் பகுதியின் தலைப் பாகவும், 'முதியோர் காதல்' ஐந்தாம் பகுதியின் தலைப் பாகவும் அமைந்திருக்கக் காணலாம்.

குடும்ப விளக்கின் உயிர்நிலைப் பாத்திரம் 'தங்கம்' எனலாம். வைகறையில் கண்விழித்துக் காலைக் கடமை களைக் கருத்தாய் முடித்துக் குடும்பப் பாங்கில் துலங்கும் தங்கம் என்றென்றும் நம் நெஞ்சை விட்டு அகலாத பாத்திரப் படைப்பு எனலாம்.

காலையில் கண்மலரும் மங்கை தங்கம், சிறியதாக எரிந்து கொண்டிருக்கும் விளக்கின் திரியைத் தூண்டி விட்டுக் கொல்லைப்பக்கம் சென்று, கிணற்றிலிருந்து குளிர் புதுப்புனலைக் கொண்டு முகத்தைத் துலக்கி, வாய் கொப் பளித்து, பின்னும் நீரைச் சேந்தி எடுத்துக் கொண்டு முன் வாயிற்புறம் சென்று வாசல் கூட்டி, மெழுகி, அரிசிமாக் கோலம் தீட்டி நின்றாள். அடுத்து, இல்லத்தினுள் சென்று உறைக்குள் உறங்கும் யாழினை எடுத்து 'வாழிய, வையம் வாழிய' என்று பாவலர் தமிழிற் பழச்சுவை சேர்த்தாள். பிள்ளைகளும் கணவன் மணவழகனும் எழுந்துவந்து மங்கையின் எதிரில் அமர்ந்து தமிழிசை பருகினர். அதன் பின்னர்த் தங்கம் பசும்பால் கறந்தனள்; வீட்டை ஒளி பெறச் செய்தனள்; செம்பு தவலை விளக்கிச் செழும் பொன்னாகத் துலங்கும்படிச் செய்தாள்; தண்ணீர் இறைத்துவைத்துத் தொட்டியை நிறைத்தாள்; அடுப்பை மூட்டி அப்பம் சுட்டு அடுக்கி வைத்தாள்; குடிக்க இனிய கொத்துமல்லி நீர் இறக்கி, அதிற் பாலும் சருக்கரையும் அளவொடு கலந்து, முத்தான வாயால், முழுநிலா முகத் தாள் 'அத்தான்' என்றழைக்க, அழகியோன் வந்தான்.

...த. கணவன் மகிழும்வண்ணம் குளிர்புனல் காட்டிக் ...க்கச் சொன்னாள். வெள்ளுடை தந்துமேனி துடைத் ...ள். பின் "பிள்ளைகாள்" என்றனள்; கிள்ளைகள் ...னரி அவர்களின் பொன்னுடலுக்குச் சீயக்காய் ...து நீராட்டினாள்; இட்டுக்காட்டியும் சிறு கதை ...ல்லியும் அவர்களைத் தன்வயப்படுத்தினாள். தன் ...சில் சுரக்கும் ஈரத்தால் அவர்தம் ஈரவுடம்பைத் ...டால் துடைத்து அழகு முத்தத்தினை அவர்கள் ...மலருக்களித்தாள். பிள்ளைகள் அறைக்குச் சென்று ...யுடுத்து வெளியே வந்தனர்.

அடுக்களைத் தந்தியினை மங்கை அனுப்ப மணாள ...ம் மணவழகனும் 'வந்தேன்' என்று குரல்கொடுத்து ...தான். 'வந்தோம்' எனப் பிள்ளைகளும் வந்தனர். ... அப்பமும், காய்ச்சிய கொத்துமல்லி நீரும் ...டனர். இவ்வளவில் 'ஆறுமணி' ஆயிற்று. பிள்ளை ...க்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்க, அவர்களும் சங்கத் ...ிழ்ச் சுவையை அள்ளி விழுங்கினர். பின்னர்ப் பிள்ளை ...ின் சுவடிகளை ஒழுங்குற அடுக்கி, புன்னை இலை ...ால் புதையடிச் செருப்புகளைச் சின்னவர் காலிற்செருகி ...குடை கையில் தந்து, கையைப் பிடித்துத் தெருவரை ...ும் நடந்து, பள்ளி நோக்கித் தள்ளாடி நடக்கும் ...ளைகள் பின்னழகு வெள்ளம் பருகி நின்றாள். பின் ...வளாவினாள். கிழிந்த உடையைத் தைத்து, அவனுக்கு ...டை அணிவித்துக் கடைக்கு அனுப்பி வைத்தாள்.

பிள்ளைகள் பள்ளிக்கும், கணவன் கடைக்கும் சென்ற பின்னரும் அவர்களைப் பற்றிய சிந்தனை தீர ...ில்லை. கணவன் காட்டும் அன்புக்கு நிகரில்லை என்று ...டாள். 'பசங்களில் சிறிய பையன்' துள்ளிக் குதித்

துக் கீழே விழுந்து விட்டானோ, என எண்ணுவாள். அடுத்த கணம், சின்னவனைக் காப்பாற்ற மூத்தவன் உண்டு என அச்சத்தை அகலத் தள்ளினாள்.

ஒட்டடைக் கோல் கையிற் கொண்டு வீட்டின் ஒட்டடையை மாற்றி ஒழுங்குபடுத்தினாள். தையற் பொறியில் குழந்தைகளுக்கான சட்டைகள் தைத்தாள். மரச் சாமான்களில் ஒடிந்தவைகளைப் பழுது பார்த்தாள். இடிந்துள்ள சுவருக்குச்சுண்ணாம்பு வைத்து அடைத்தாள்.

நாத்தியார் வீடு சென்றிருந்த தங்கத்தின் மாமனும் மாமியும் வீடு திரும்பி வந்தனர். அவர்களை முக மலர்ச்சி யுடன் முகமன் கூறி வரவேற்றாள். நாத்தியார், கூறும் நலங்களை உசாவினாள். அவர்கள் கொண்டுவந்திருந்த பண்டங்களைப் பக்குவமாக இறக்கி வைத்தாள். அவர்களை வெந்நீரில் குளிக்க வைத்து, நல்ல உணவு நல்கி, துப்பட்டி விரித்த மெத்தையில் துயிலவைத்துப் பின் காய்கறிகள் வாங்கி வருவதற்காகச் சென்றாள். 'கடையிலே செலவு செய்த கணக்கினை எழுதி வைத்தாள்.' இடையில் 'விக்குள்' வந்த மாமனுக்குத் தண்ணீர் தந்து அவ்விக்குகளை மாற்றினாள். பிள்ளைகள் கணவன், மாமன், மாமியர் என்று அவரவர்க்குப் பிடித்தமான உணவைப் பக்குவமாகச் சமைத்தாள். 'கறிகள் தோறும் உண்பவர் தம்மைக் கண்டாள்'. சமையல் முடித்துத் தூங்கிய மாமனின் வீங்கிய காலைப் பார்த்து ஏங்கிய தங்கம், மருந்து பூசிச் சரி செய்து படுக்க வைத்தாள். அவர் உடம்பு காய்ச்சல் அடிப்பதைக் கண்டு நன்மருந்து உள்ளுக்குச் சாப்பிடத் தந்தாள். அவருக்கு உணவாகக் கஞ்சி காய்ச்சித் தந்தாள். மாமியின் தலைநோக்காட்டிற்குப் பற்றுப் போட்டு

ஒரு நொடி நேரத்தில் அந்தத் தலைவலியை ஓடச் செய்தாள்.

பள்ளி விட்டு வந்த தன் சின்னஞ் சிறாரைத் துள்ளிய மகிழ்ச்சியுடன் வரவேற்றாள். பள்ளியில் நடந்த பாடத்தைக் கேட்டு, அவர்தம் உடுப்பை மாற்றி, அவர்தம் தாத்தா பாட்டி வந்து உள் வீட்டில் படுத்திருப்பதை உணர்த்தினாள். இந்நேரத்தில் கடையிலிருந்து கணவன் மணவழகன் வீடு வந்தான். அவனிடம் 'ஒன்றுண்டு சேதி' என்றாள். அவனோ 'உரை' என்றான். தாய் தந்தையர் வந்தனர் என்றாள். பின் அவர் நொந்துள்ள நோக்காட்டு நிலைமை சொன்னாள். பெற்றோரிடம் 'உங்கள் தள்ளாத பருவந்தன்னில் நைந்திடும்வண்ணம் நீங்கள் நடந்திடலாமா?" என்று கேட்டு, நின்றான். தந்தையோ "உன்னைப் பெற்றதால் ஒரு கவலையும் இல்லை; உன் மனைவியோ அறிவுக்கோர் திருவிளக்கு" எனக் கூறி, உணவுண்ண அனுப்பி வைத்தார். எல்லோரும் மகிழ்ச்சியுடன் உணவுண்டனர். தமிழிசை பாடிப் பின் தையல் அனைவரையும் மகிழ்வித்தாள். கணவன் சோம்பல் காரணமாகப் பிற்பகல் கடைக்குச் சென்று கணக்கரைச் சாப்பாட்டிற்கு அனுப்பி வைக்கத் தயக்கங் காட்ட, தங்கமே கடைக்குச் சென்று வியாபாரத்தைக் கவனித்தாள். சற்று ஓய்வு பெற்றுக் கணவன் கடைக்கு வர அவனிடம் ஒப்படைத்து விட்டு வீடு வந்தாள். மாமனார் மாமியார்க்கு வேண்டிய குறைந்த உணவு தந்து, அவரைத் தடுக்கினிலிருந்த சாய்வு நாற்காலியிற் சேர்த்தாள். வெய்யிலில் காய வைத்த வடகம், வற்றலைப் பெரிய சாலில் இட்டாள். தோட்டத்தில் கட்டியுள்ள மாடு, கன்றுகளுக்குத் தீனி போட்டாள். விளக்குகள் துடைத்து வைத்தாள். மாலையில் மக்கள் பள்ளியினின்றும் வந்தனர். மகிழ்ச்சியடைந்தாள்.

சிற்றுண்டி அளித்தாள்; கடற்கரைக்கு அவர்களை அழைத்துச் சென்றாள். குளிர்ந்த காற்றை வாங்கச் செய்து, இயற்கை இன்பத்தில் திளைக்கச் செய்து வீடு திரும்பினாள். வீட்டின் விளக்கனைத்தும் ஏற்றினாள். உயர் நறும் புகையெழுப்பி வீட்டினுள் நன்மணம் கமழச் செய்தாள். பிள்ளைகளைச் செந்தமிழ்ச் சுவடிகள் படிக்கச் செய்து, அடுக்களையில் அமுதத்தை விளைவு செய்து எட்டு மணியளவில் தன் காதற் கணவனை எதிர்நோக்கி நின்றாள். கணவனோ நல்ல பிள்ளைகளைப் பெற்றதாற் பெற்ற பரிசுடன் வீடு வந்தான். அனைவரும் மகிழ உண்டனர்; அல்லிப்பூ விழிகள் மூடக் குழந்தைகள் உறங்கினர். தங்கம் தன் கணவனுடன், 'இன்று முழுவதும் நமக்காக வாழ்ந்தோமேயல்லாமல் தமிழிற்காகத் தினையளவேனும் வாழ்ந்தோமோ' என்று கேட்டாள், உடனே கணவனும், "எப்படிக்கும் முதற்படியாய்த் தமிழ் படிக்கவேண்டும்; இழந்த பழம் புகழ் மீளவேண்டும்; நாட்டில் எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்... விழுந்த தமிழ்நாடு தலைதூக்க என்றன் உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்" என்று கூறினான். தங்கமோ இச்சொற்களைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்து, "பழம் இடுவேன், சர்க்கரைப்பால் வார்ப்பேன் உங்கள் பண்பாடும் வாய் திறப்பீர் அத்தான்" என்றாள். கணவன் "மண்ணில் குவிந்திருக்கும் சுவையுள்ள பொருள்கள் எல்லாம் ஒவ்வொன்றும் மறுநாளே பழமை கொள்ளும்; ஒவ்வொன்றும் சில நாளில் தெவிட்டிப் போகும்; அன்றன்று புதுமையடி, தெவிட்டலுண்டோ? ஆருயிரே நீ கொடுக்கும் இன்பம்" என்று காதற்பெற்றியுரைத்தான்.

இவ்வாறு ஒருநாள் நிகழ்ச்சி முடிகின்றது.

இரண்டாம் பகுதி "விருந்தோம்பல்' ஆகும். தமிழ்ப் பண்பாட்டில் தலையாய இடம்பெறுவது விருந்தோம்பல் ஆகும். திருவள்ளுவரின் 'விருந்து' அதிகாரம் இதனை யுணர்த்தும். சங்க நூலாம் நற்றிணையும்,

அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்

என்று நட்டநடு இரவிலும் விருந்து நோக்கி நிற்கும் தலைவியைப் புலப்படுத்தி நிற்கும். 'விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே' என்ற குறுந்தொகைத் தொடரும் விருந்தின் மேன்மை விளக்கும். தொல்காப்பியனார் கிழவோள் மாண்புகள் என்று குறிப்பிட்டிருப்பதில் 'விருந்து போற்றுதல்' என்ற ஒன்றும் அடங்கும்.

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
—தொல்; பொருளதிகாரம்; கற்பியல் : 11

இத்தகு சிறப்பு வாய்ந்த விருந்தோம்பலினை இரண்டாம் பகுதியாக வைத்துள்ளார் புரட்சுக் கவிஞர் பாரதி தாசன்.

"முதற் பகுதியின் நிகழ்ச்சிக்கும், இந்நிகழ்ச்சிக்கும், இடையில் எவ்வளவு நாள் சென்றிருக்குமோ எனில் ஏறக்குறைய இரண்டாண்டுகள் என்க. இப்பகுதியில் வீட்டில் முதியோர் தள்ளாமை அடைந்துள்ளனர். குடும்பத் தலைவர்களுக்குத் தம் பிள்ளையின் காதல் உள்ளம் புலனாகிறது" என்று கவிஞர் கருத்துரைக்கின்றார்.

புதுவையையடுத்த வில்லியனூரிலிருந்து செல்வர் திரு மாவரசனாரும், அவர்தம் துணைவியார் மலர்க்குழலி அம்மையாரும் அவர்தம் மகன் நாவரசும், மகள் நகை முத்துவும் தங்கம் வீட்டிற்கு விருந்தினராக வருகின்றனர். அவர்களை அகமும் முகமும் மலர வரவேற்கின்றனர் தங்கத்தின் வீட்டார்.

இப்பகுதியில் எவ்வாறு விருந்தோம்ப வேண்டும் என்பது மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. மாணவர் இப்பகுதியினைக் கருத்தூன்றிப் படிக்கவேண்டும்.

ஆணும் பெண்ணும் எவ்வாறு கருத்தொருமித்து காதலில் திளைத்துக் கடிமணங் கொள்ளவேண்டும் என் பதனையும் மனம் மாறுபட்டால் மணமுறிவு வேண்டும் என்றும், பிள்ளை மிகுந்தால் கருத்தடை வேண்டும் என்றும் புரட்சிக்கவிஞர் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார்.

உள்ளம் கவர்ந்தாளின் உள்ளத்தைத் தான் கவர்ந்து
வெள்ளத்தில் வெள்ளம் கலந்ததென—விள்ளும் நிலை
கண்டு மணம்புரிதல் வேண்டும். கடிமணமும்
பண்டை மணமென்றும் பார்ப்பானைக்—கொண்ட
அடிமை மணமென்றும் சொல்லும் அனைத்தும்
கடிந்து பதிவுமணம் காணல்—கடனாகும்
அன்பால் அவளும் அவனும் ஒருமித்தால்
துன்பமவளுக்கென்னில் துன்புறுவான்—துன்பம்
அவனுக்கெனில் அவளும் அவ்வாறே இந்தச்
சுவைமிக்க வாழ்வைத்தான் தூயோர்—நவையற்ற
காதல் வாழ்வென்று கழறினார் அக்காதல்
சாதல் வரைக்கும் தழைத்தோங்கும்—காதல்
உடையார்தம் வாழ்வில் உளம் வேறுபட்டால்
மடவார் பிறனை மணக்க—விடவேண்டும்
ஆடவனும் வேறோர் அணங்கை மணக்கலாம்

கூடும்மண மக்கள் கொளத்தக்க—நீடுநலம்
என்னவெனில் இல்லறத்தைச் செய்தின்பம் எய்துவதாம்?
நன்மக்கட் பேறுபற்றி நானுரைப்ப —தொன்றுண்டாம்
ஈண்டு குழந்தைகள் தாம் எண்மிகுத்துப் போகாமல்
வேண்டும் அளவே விளைத்து, மேல்—வேண்டக்கால்
சேர்கை ஒழித்திடுக கருத்தடையேனும் செய்க.

பெண் கல்வி பற்றிப் பாரதிதாசன் முழங்கும் முழக்கம் உளங்கொளத் தக்கது. இப் பாடல்கள் மனப்பாடம் செய்தற்குரியனவாகும்.

பெண்கட்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுதற்கே!
பெண்கட்குக் கல்வி வேண்டும
கல்வியைப் பேணுதற்கே'

கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம்! அந் நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவில வோநான்.

பாரதிதாசனாரின் புரட்சி இப்பகுதியில் மேலும் ஒரு படி உயர்கிறது. சமையல் செய்வது பெண்ணுக்கே உரிய வேலை என்று இதுகாறும் இருந்து வருவதனையே மாற்றுவோம் என்கிறார்.

சமைப்பதும் வீட்டு வேலை
சலிப்பின்றிச் செயலும்; பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல்
சரியில்லை! ஆடவர்கள்
நமக்கும்அப் பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம்
சமைப்பது தாழ்வா? இன்பம்
சமைக்கின்றார் சமையல் செய்வார்.

தங்கத்தின் தலைமகன் வேடப்பன் மாவரசர் மகள் நகைமுத்துவின் மேல் காதல் கொள்கின்றான். ''இது வரைக்கும் இறந்திருக்கும் மங்கையரிலேனும் மற்றும் இனிப் பிறக்கும் மங்கையிரிலேனும் அந்த நிறைந்திருக்கும் அழகு நகைமுத்தாள் போன்றாள் இல்லையென" நினைக்கின்றான்.

தொகை முத்துக் குவித்தாலும் ஒன்றில் நெஞ்சைத்
தோய்த்தாரை மாற்றுவதோ அருமை

என்றபடி வேடப்பன் நகைமுத்து காதல், ஒரு நாளிலேயே நூறுமுறை ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு வளர்ந்து நிற்கிறது.

மூன்றாம் பகுதி 'திருமணம்' என்பதாகும். இப் பகுதியில் வில்லியனூர் மாவரசு—மலர்க்குழல் மகள் நகைமுத்துவிற்கும் புதுவை மணவழகன்—தங்கம் மகன் வேடப்பனுக்கும் திருமணம் நடைபெறுகின்றது.

மணவழகன் வேடப்பனை வில்லியனூருக்குத் தன் கடை பாக்கி வசூல் தொடர்பாக அனுப்பி வைக்கிறான். நகைமுத்து மேல் காதல் வேகங்கொண்ட வேடப்பன் அந்தச் சாக்கில் நகைமுத்துவைப் பார்க்கச் செல்கிறான். இவர்கள் காதல் இருதரப்புப் பெற்றோர்களுக்கும் தெரிய வருகிறது. இருவரும் இணைய ஒப்புதல் தெரிவிக்

கின்றனர். இரு வீட்டாரும். திருமண நாள் குறிப்பிடப், பெறுகிறது. மணமகன் வீட்டில் திருமணம் நடை பெறுகிறது.

...நீவீர் நீடு வாழிய
இற்றை நாள்போல எற்றைக்கும் மகிழ்க!
மேலும் உம்வாழ்வே ஆலெனச் செழித்தே
அறுகுபோல் வேர்பெற குறைவில்லாத
மக்கட்பேறு நல்குக என்று
மிக்குயர்ந் தார்மேலும் வாழ்த்தினரே!

என்றபடி மணமக்களைச் சான்றோர்கள் வாழ்த்துகிறார்கள்.

நான்காம் பகுதி 'மக்கட்பேறு' என்பதாகும். இப் பகுதியில் புது மணங்கொண்ட வேடப்பனும் நகைமுத்துவும் 'வள்ளுவன் அருளிச் செய்த தொகுகீர்த்தி அறநூலின் கண்சொல்லிய தலைவி மற்றும் வகுகீர்த்தித் தலைவன் போலே, மணம் பெற்று இன்புற்றிருந்தார். பெற்றவர் தேடிவைத்த பெருஞ்செல்வம் உண்டென்றாலும் மக்களும் தம் உழைப்பால் உயிர்செல்வம் தேடவேண்டும் என்னும் தமிழர் பண்பாட்டிற்கிணையவே வேடப்பனும் நகை முத்துவும் வாழ்நாளை வீணாள் ஆக்காமல் பணியாற்றினர். இந் நிலையில் நகைமுத்து கருவுற்றாள். மாமியார் தங்கம் அருகிலிருந்து கண்ணை இமை காப்பது போல் கவனித்துவரத் தொடங்கினாள். ஐயிரண்டு திங்களில் அழகிய பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தை பின்வருமாறு துலங்கியதாம்;

எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கும்
வள்ளச் செந் தாமரைப்பூ
இதழ் கவிழ்ந்திருந்த வாய்ப்பின்

ஆள் இரண்டும்; சிவப்பு
மாதுளை சிதறச் சிந்தும்
ஒள்ளிய மணிச் சிரிப்பும்
உவப்பூட்டும் பெண் குழந்தை

'தமிழரின் தமிழ்க் குழந்தை தமிழ்ப் பெயர் பெறுதல் வேண்டும்' என்று அக்குழந்தைக்கு 'அமிழ்தம்மை' எனப் பெயரிட்டனர். குழந்தையைப் பார்க்க வந்தவர்களுக்கு வெற்றிலைப் பாக்குத் தந்து, தமிழ் பாட இசை நடத்தி வழியனுப்பி வைக்கிறார்கள்.

குழந்தை தாய்ப்பால் உண்டு வளர்கிறது. தங்கத்துப் பாட்டியும், மலர்க்குழலிப் பாட்டியும் தாலாட்டுப் பாடிக் குழந்தையை உறங்க வைக்கின்றனர். 'உருகிய நெய்யும் பருப்பும் இட்ட சோற்றுடன் மிளகுநீர் துளியளவு ஊற்றிச் சிறியவள்ளத்தில் சேர்த்தெடுத்துக் குழந்தைக்குக் காக்கை காட்டிச்' சோறூட்டுகிறாள் நகைமுத்து; ஓடுவது தெரியாது ஓடுகின்ற நாள்போல் வளர்வது தெரியாமல் அமிழ்தம்மை வளர்ந்துவந்தாள்.

குடும்ப விளக்கின் ஐந்தாவதான இறுதிப்பகுதி 'முதியோர் காதல்' என்பதாகும். புரட்சிக் கவிஞர் என்னும் முத்திரைக்கு அச்சாரம் காட்டி நிற்பதுபோல இப்பகுதி அமைந்துள்ளது.

அண்ணாந்து ஏந்திய இளமுலை தளரினும்
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர

என்ற நற்றிணைப் பாடல் நவில்வது, தலைமகளுக்குத் தலையணி யோம்புக என்னும் தோழியின் கூற்றாக— இரக்கற் குறிப்புடன் வேண்டும் கூற்றாக அமைவதாகும்.

ஆனால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஓர் அரிய மனநிலை—காதல் என்பது உடற்கலப்பில் இல்லை, உளக் கலப்பில் உயிர்க் கலப்பில் உளது என எண்ணும் தலைவன் கூற்றில் அமைந்திருக்கக் காணலாம். தங்கம் முதுமை யுற்றாள். ஆயினும் தங்கம் மணவாளனாம் மணவழகன் உள்ளத்தில் தங்கத்தின் மேற்கொண்ட காதல் கடுகளவும் குறையவில்லை. 'முதியோளே வாழுகின்றாள் என் நெஞ் சில் மூன்று போதும்' என்று மணவழகன் எண்ணுகின்றான். "தங்கத்தின் உடம்பு புதுமலர் அல்லவாம்; காய்ந்த புற்கட்டு போலும் உடம்பாம். சதிராடும் நடை போய் தள்ளாடும் நடை வந்துவிட்டதாம். முகம் சந்திரனாக இல்லையாம்; வறண்டு போன நிலம்போல வாட்ட முற்றிருக்கிறதாம்; கண்கள் குழி விழுந்துள்ளனவாம். ஆயினும் அவள் உயிரோடு இன்றும் உயிர்த்து வாழ் கின்றாள் என்கின்ற ஒன்றே மணவழகனுக்கு மட்டில்லா இன்பம் வழங்குகின்றதாம்." எவரும் நினைவிலே இருத்திக்கொள்ள வேண்டிய எளிய ஆனால் உயரிய கருத்தமைந்த பாடலைக் காணுங்கள்;

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள்உ டம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்;
தள்ளாடி விழும்மூ தாட்டி!
மதியல்ல முகம்அ வட்கு
வறள் நிலம்! குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
"இருக்கின்றாள்" என்ப தொன்றே.

மணவழகனார் மனம் போன்றே தங்கத் தலைவி தங்கத்தின் உள்ளமும் அமைந்துள்ளது.

அறம் செய்த கையும் ஓயும்!
மக்களை அன்பால் தூக்கிப்
புறம்போன காலும் ஓயும்!
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறம்கேட்ட காதும் ஓயும்!
செயல்கண்ட கண்ணும் ஓயும்!
மறவனைச் சுமக்கும் என்றன்
மனமட்டும் ஓய்தலில்லை!

என்று தங்கம் நினைக்கிறாள்.

மணிமொழியார் என்னும் சான்றோர் ஒரு நாள் மணவழகர் வீடு வந்து, அவர் நூற்று ஐந்து ஆண்டுவரை வாழக் காரணம் என்ன என்று கேட்டார். "தம் தந்தை தாய் நல்லொழுக்கமுடையவர்கள்; என்னைக் கற்றறி வாளனாக ஆக்கி வைத்தனர். நானும் நல்லொழுக்கத் தைத் தீண்டியதில்லை. என் மனைவி எனக்கினியவள்; என் கண் போன்றவள்; குற்றமில்லாதவள்; நான் வாழத் தன்னுயிரையும் நல்கும் நாட்டமுடையவள்; அவளால் என் ஒழுக்கத்தைக் காத்தேன்; குடும்பம் குற்றமற்றதாய்ச் சென்றது; சற்றும் கவலை கொள்ளாமல் நான் வாழ்ந்தேன். நல்ல மனைவியை உடையவர்கள் கடலுலகப் பெரும் புகழும் வாழ்நாளும் உடையவராவார்" என்று மணவழகர் மறுமொழி பகன்றார்.

மணவழகர் வாக்காலே உலக அமைதிக்கு; ஓர் எளிதான வழியினைப் பின்வருமாறு உரைக்கின்றார்;

இவ்வுலகில் அமைதியினை நிலைநாட்ட வேண்டின்
இயேசுவழி ஒன்றுண்டு; பெண்களை ஆடவர்கள்
எவ்வகையும் தாழ்த்துவதை விட்டொழிக்க வேண்டும்
தாய்மையினை இழித்துரைக்கும் நூலும் ஒரு நூலா?
செவ்வையுற மகளிர்க்குக் கல்விநலம் தேடல்

செயற்பால யாவினுமே முதன்மை எனக்கொண்டே
அவ்வகையே செயல்வேண்டும்! அறிவுமனையாளால்
அமைதியுல குண்டாகும் என்ன இதில் ஐயம்?
மகளிரெலாம் கல்வியறி வொழுக்கமுள ராயின்
மருத்துவமே வேண்டாவாம்; பிணிமூப்பு வாரா
மகளிரெலாம் அரசியலைக் கைப்பற்றி ஆண்டால்
மாநிலத்தில் போரில்லை; சாக்காடும் இல்லை
துகளில்லா ஒருசிறிய உலகுண்டு கேட்பீர்
தொல்லையில்லா அவ்வுலகம் யான்வாழும் இல்லம்
பகையில்லை; அங்கின்மை இல்லை பிணி இல்லை
பழி இல்லை, என்துணைவி அரசாண்ட தாலே!

இன்புறும் இரண்டு மனப்பறவைகளாக அவர்கள் இல்லறம் நிகழ்த்துகின்றனர். 'தெவிட்டாது காதல் நுகர் தேன்சிட்டுகளாக, பெருந்தென்னங்கீற்றினிலே இருந்தாடும் கிளிகளாக, வையத்துள் வாழ்வாங்கு வாழுகிறார்கள்.

இவ்வாறு மனம் ஒன்றுபட்டு வாழும் அன்பு நெஞ்சங்களான தங்கம் மணவழகன் வற்றாத வளமான காதல் வாழ்வின் பெற்றியினைக் குடும்ப விளக்கு இனிதுறக் கிளத்தி நிற்கிறது.

இனிப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனாரின் உவமை நலச் சிறப்பினையும், கவிதையழகினையும், கருத்துச் செறிவினையும் ஓரளவு காண்போம்.

## உவமை நலம்

1. கேள்வியால் அகலும் மடமைபோல்
   நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டிருந்தது
2. தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
   கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது

3. தூய பசும்பொன் துகளினைப் போன்ற
சீயக் காய்த்துகள்

4. இழந்தநல் லுரிமை தன்மை
எய்தியே மகிழ்வதைப்போல்!
வழிந்தோடும் புதுவெள் ளத்தை
வரவேற்கும் உழவ ரைப்போல்

5. பழந்தமிழ்ப் பொருளை அள்ளிப்
படித்தவர் விழுங்குதல் போல்

6. நற்பழங்கள்,
ஊட்டி வளர்த்தாலும் உரிமையெண்ணிக் கூட்டில்
இருக்கப் பிடிக்காத கிள்ளைபோல்

7. வீட்டில்,
நான்பட்ட தாலையிலே நற்பஞ்சு தான்படுமா?

8. வெள்ளத்தில் வெள்ளம் கலந்ததென

9. ஒரு நிலவு
வானின் உடுக்களிடை வாழ்தல்போல்

10. வல்லார் இலக்கியத்தை வாரி வருந்துதல்போல்

11. மடுப்புனலைப் புன்செய் உழ வன்பார்த்தல்போல்

12. தண்டமிழ்தேன் உண்டவர்கள் பொருளை எண்ணித்
தனிப்பார் போல் தனித்திருந்தான்

13. வாட்டிய பசிநோயாளி
வட்டித்த சோற்றிலே கண்
நாட்டுதல் போல்

14. கருமணற் கடலோ ரத்தில்
பிறர்வரக் கண்ட நண்டு
விரைந்தோடு வதுபோல்

15. பூவிலிலிருந்து பெடையன்னம் ஒன்று
புறப்படல்போல்

16. விரைகின்ற காவிரியின்
வெள்ளம் போல

17. வெற்பினில் வெயில் சேர்ந்தாற்போல்
மேனியில் ஒளியும் பெற்றாள்

18. தனிவுறும் தமிழர் யாழ்போல்
தன்மடிமேல் அமைந்த
அணியுடல் குழந்தை

19. கன்னிலாக் கதிர்போல் கூந்தல்
நரைத்தது; கொண்டை யிட்டு
முன்னிலா முகில்உண் டாற்போல்
முகத்தொளி குறைய லானார்.

## கவிதையழகு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கவிதைச் சுரங்கம்; அள்ள அள்ளக் குறையா நவநிதியம்; கொள்ளக் கொள்ளக் குறையாக் காவிரிப் புதுப்புனல்.

ஆடிக்கொண் டிருந்த தையற்
பொறியினை அசைக்கும் ஓர்கை
ஓடிக்கொண் டிருக்கும் தைத்த
உடையினை வாங்கும் ஓர்கை:
பாடிக்கொண் டேயிருக்கும்
பாவையின் தாமரை வாய்;
நாடிக் கொண் டேயிருக்கும்
குடித்தன நலத்தை நெஞ்சம்!

பாட்டோட்டமும் பாடல் நயமும் மிகுந்த பாடல் இதுவாகும், ஒரு சொல்லினையே மீண்டும் மீண்டும் வரச்

செய்து ஒரு நயம் ஏற்படுத்துவதிலே பாரதிதாசன் வல்லவர் என்பதனைக் கீழ்க்காணும் பாடல் புலப்படுத்தும்.

செல்லப்பா உணவு கொள்ளச்
சிறுவர்கள் தமையும் உண்ணச்
சொல்லப்பா எனவே; அன்பு
சொல்லிவிடச் சொல்லி டுந்தன்
நல்லப்பா மகிழும் வண்ணம்
நல்லதப் பாளன் றோதி.
மெல்லப்பா வைபு ரிந்த
விருந்தினை அருந்த லுற்றான்.

இயற்கை வருணனைத் திறத்திலும் பாரதிதாசனும் சிறந்து மிளிர்கின்றார் என்பதனைப் பின்வரும் பகுதி வாங்காய் உணர்த்தும்.

மேற்றிசைக் கதிர்ப் பழத்தை
விருந்துண்டு, நீல ஆடை
மாற்றுடை யாய்உ டுத்து
மரகத அணிகள் பூண்டு
கோற்கிளை ஒடுங்கும் புட்கள்
கோட்டிடும் இறகின் சந்தக்
காற்சிலம் பசையக் காதற்
கரும்பான இரவு தன்னை
திருவிளக் கேந்தி வந்து
தெருவினில் வரவேற் கின்றாள்.

அடுத்து, பாரதிதாசன் கவிதைகள் கருத்துச் செறிவு கொண்டனவாகும். தங்கம் தன் கணவன் மணவழகனைப் பின்வருமாறு குறிப்பிடும் கூற்றில் கருத்துச் செறிவு நிறைந்திலங்கக் காணலாம்.

தொப்பென்ற ஓசை கேட்டால்
துயருறும் என்றும், சாற்றிற
உப்பொன்று குறைந்தால் உண்ணல்
ஒழியுமே என்றும் ஒன்லை
ஒப்பெனில் ஒப்பா விட்டால்
உடைபடும் உள்ளம் என்றும்
தப்பொன்றும் இன்றி என்றன்
தமிழனை அன்பாற் காத்தேன்.

மேலும் பாரதிதாசனார் குடும்பவிளக்கின் பலவிடங்களில் நகைச்சுவை கொப்பளிக்கும்வண்ணம் நயம்படக் கவிதை கிளத்தியுள்ள பாங்கும் ஊன்றி உளங்கொளத் தக்கதாகும். எடுத்துக்காட்டாகக் கீழ்க்காணும் அடிகளைக் குறிப்பிடலாம்.

இவையெலாம் வண்டிக் குள்ளே
இருந்தன என்றால் அந்த
அவைக்களம் தனிலே நீவிர்
எங்குத்தான் அமர்ந்திருந்தீர்?
சுவைப்புளி அடைத்து வைத்த
தோண்டியின் உட்பு றத்தில்
கவர்ந்துண்ணும் பூச்சி கட்கும்
கால்வைக்க இடமி ராதே!
என்றனள் மாமி சொல்வாள்;
இவைகளின் உச்சி மீதில்
குன்றுமேல் குரங்கு போல
என்தனைக் குந்த வைத்தார்
என்தலை நிமிர வேண்டி
மூடிமேல் பொத்த லிட்டார்!
உன்மாமன் நடந்துவந்தார்
ஊரெல்லாம் சிரித்த தென்றார்.

மேலும் பலவிடங்களில் புரட்சிக்கவிஞர் திருக்குறளின் கருத்துகளைக் கையாண்டுள்ளார். அப்பகுதிகளைச் சற்று ஊன்றிப் பயிலுதல் வேண்டும். அடுத்து, ஔவையார், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் முதலான சான்றோர் பெருமக்களின் மணிமொழிகளையும் பொன்னே போற் போற்றித் தம் குடும்ப விளக்கில் ஒளி பெறச் செய்துள்ளார்.

சுருங்கச் சொன்னால் 'குடும்ப விளக்கு' தமிழர் சமுதாய இருள் போக்கவந்த ஒளிவிளக்கு எனலாம். எனவேதான் பாரதிதாசனார், "குடும்ப விளக்கைப் பெறும் தோழர்கள் தாமேயன்றி மறந்து போகாமல் தம் துணைவியார்க்கும் படிக்கக் கொடுக்க, துணைவியார் எழுத்தறிவில்லாராயின் படித்துக் காட்டுக, துணைவர்க்கு எழுத்தறிவு இழுப்பாய் இருந்தால் துணைவியார் சொல்லிக் காட்ட மறவாதிருக்க வேண்டுகிறேன்.

ஏனெனில்.

"தலைவனிடம் தலைவி நடந்துகொள்ள வேண்டிய சிலவற்றைத் தலைவன் அன்பு காரணமாகச் சொல்லப் பின்வாங்குவது உண்டு. அவ்வாறே தலைவியும் பின்வாங்குவதுண்டு. அப்படிச் சொல்ல வேண்டிய சிற்சில வற்றைக் குடும்ப விளக்குச் சொல்லும்.

"மிகச் சிறியது. குறள் ஓவியம் குடும்ப விளக்கு" என்று குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாகக் குடும்ப விளக்காம் தங்கத்தின் பாத்திரப் படைப்பினைத் தவறாது உணர்ந்து கொள்வார்களாக.

# 12. குடும்ப விளக்கு தரும் ஒளி-'தங்கம்'

பாவேந்தர் என்றும், புரட்சிக்கவிஞர் என்றும் நற்றமிழ்நாட்டு மக்களால் நலமுறைப் பாராட்டப்படும் கவிஞர் கனகசுப்புரத்தினம், பாரதியாருடன் தாம் கொண்ட தொடர்பும் ஈடுபாடுங் காரணமாகப் 'பாரதி தாசன்' என்று தம் பெயரை மாற்றிக்கொண்டார். தமிழ் நாட்டின்மீதும், தமிழினத்தின்மீதும். தமிழ்மொழியின் மீதும் தண்டாத பற்று நிரம்பியவர்; பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் முறையில் எழுதியும் பேசியும் வந்தவர்; பகுத்தறிவு வேட்கையும் சீர்திருத்தப் போக்குங் கொண்டவர்; புலமைச் சிறப்பும் கொள்கைக்குப் போராடும் திறனும் சான்றவர்; இயற்கையை இனிதுறக் கிளத்திக் காட்டும் இனிய பெற்றி நிறைந்தவர். தமிழே தம் மூச்சாய்ப் பேச்சாய், தமிழர் நலமே தம் கண்ணாய்க் கருத்தாய், தமிழ்நாட்டு முன்னேற்றமே தம் வாழ்வாய் வளமாய் வாழ்ந்த பெருங்கவிஞர் பாரதிதாசன் அவாகள் வண்டமிழ் மொழியில் நந்தமிழ்நாட்டுக்கு வழங்கிய கவிதை நூல்கள் பல; அவற்றுள் ஒன்றான குடும்ப விளக்கு'ப் பற்றிக் கருதுவதே இச் சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

''குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்" என்றும் "முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்கும் என்பது பற்றிய என் எண்ணந்தான் இந்தச் சிறிய நூல்" என்றும், "நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்" என்றும் கவிஞர் தம் நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

பாவேந்தர் இயற்றியுள்ள நூல்களில் 'குடும்ப விளக்கு' தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். ஒரு குடும்பம் மகிழ்ச்சியும் அமைதியும் பொலிந்து தோன்றும் திருவிடமாக விளங்கு தற்கு இந்நூல் உறுதுணை செய்யும் என்பதில் ஐயமில்லை. காரணம் இந்நூலில் கூறப்பட்டிருக்கும், விளக்கப் பட்டிருக்கும் கருத்துகள் அனைத்தும் நல்லதொரு குடும்பம் அமையத் துணை நிற்கின்றன எனலாம். "உள்ளதை உள்ளவாறு கூறுவதோடு, கவிஞன் உள்ளதை உணர்ந்தவாறும் கூறவேண்டும்" என்று இலக்கியத் திறனாய்வாளர் செப்புவர். இம்முறையிற் பார்ப்பின், பாவேந்தர் பாரதிதாசனார் அவர்களின் குறிக்கோட் குடும்பத்தினை இந்நூல் அணியும் ஒளியும் பெறக் காட்டி நிற்கிறது எனக் கூறலாம்.

'குடும்ப விளக்கு' எனும் நூலினைப் படிக்குங்காலை யில் நம் நெஞ்சைவிட்டு நீங்காத பாத்திரமாய் நின்றொளிர்வது 'தங்கம்' எனும் பாத்திரமேயாகும். நூலின் தொடக்கமே, தங்கம் என்னும் மங்கை நல்லாள் தன் குடும்பத்தின் காலைக் கடமைகளில் கருத்தொடு கலந்து நிற்றலைக் காட்டுவதாய் அமைந்துள்ளது. இக் காலைக் கடமைகளைக் கவினுறக் காட்டும் ஆசிரியர் திறம் வருமாறு :

"சேந்துநீர் செங்கை ஏந்தித் தெருக்கதவு
சார்ந்ததாழ் திறந்து தகடுபோற் குறடு
கூட்டி, மெருகு தீட்டிக் கழுவி
அரிசிமாக் கோலம் அமைத்தனள் அவளுக்குப்
பரிசில் நீட்டினான் பகலவன் பொன்னொளி"

— ஒரு நாள் நிகழ்ச்சி—கோலமிட்டாள் 11-15

"..................................மாடு
கறந்தனள்; வீட்டை நிறம் புரிந்தனள்;
செம்பு தவலை செழும்பொன் ஆக்கினாள்;
பைம்புனல் தேக்கினாள்; பற்ற வைத்த
அடுப்பினில் விளைந்த அப்பம் அடுக்கிக்
குடிக்க இனிய கொத்துமல்லி நீர்
இறக்கிப் பாலொடு சருக்கரை இட்டு
நிறக்க அன்பு நிறையப் பிசைந்த
முத்தான வாயால் முழுநில முகத்தாள்
"அத்தான்" என்றனள்."

— ஒரு நாள் நிகழ்ச்சி—வீட்டு வேலைகள் 1-10

*பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லித் தருதலின் பாங்கு பின்வரும் அடிகளாற் புலப்படக் காணலாம்:*

"பாடம் சொல்லப் பாவை தொடங்கினாள்.
அவள்வாத் திச்சி; அறைவீடு கழகம்;
தவழ்ந்தது சங்கத் தமிழ்ச்சுவை; அள்ளி
விழுங்கினர் பிள்ளைகள்"

—ஒரு நாள் நிகழ்ச்சி—தாய்தான் வாத்திச்சி 7-10

*கொண்ட கொழுநன் நலம்நோக்கி எண்ணும் காதல் உள்ளம் தங்கத்தின் உள்ளம் என்பது,*

"பொருளையும் பெரிதென் றெண்ணாள்
பூண்வேண்டாள்; தனைம ணந்தோன்
அருளையே உயிரென் றெண்ணும்
அன்பினால். வருத்தி றக்கும்
உருளைநற் கிழங்கில், தன்னை
உடையானுக் கிருக்கும் ஆசைத்

திருவுளம் எண்ணி எண்ணிச்
செவ்விள நகைசெய் கின்றாள்"

—ஒரு நாள் நிகழ்ச்சி—அத்தானுக்கு எது பிடிக்கும்? 1-8

என்னும் பகுதியால் விளக்கமுறும்.

மாமன் மாமியிடத்தில் மருமகள் எவ்வாறு அன்பும் ஆதரவும் காட்டுதல் வேண்டும் என்பதனை,

இனிவாழும் நாள்நி னைத்தாள்
இளையவர் மாமன் மாமி;
கனிஇரங் கிடுதல் வேண்டும்;
நானவர்க் கன்னை போல்வேன்
எனத்தான் தனையும் பெற்று
வாழ்ந்தநாள் எண்ணும் போதில்
தனிக்கடன் உடையேன்; நானோர்
தவழ்பிள்ளை அவர்கட் கென்றாள்

—ஒரு நாள் நிகழ்ச்சி—எதிர்கால நினைவுகள்—1-8

என்ற பகுதியிற் காணலாம்.

தமிழ் முன்னேற்றமும் தமிழர் முன்னேற்றமும் காணத் துடிக்கிறாள் தங்கம்.

எப்போதும் தமிழனுக்குக் கையா லான
நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?

—ஒரு நாள் நிகழ்ச்சி—தன்னலத்தால் என் நடக்கும்? 4-5

என்று கேட்ட ஏந்திழைக்கு மறுமொழியாக,

வரும்படி வீதப்படி நான்தரும் படிக்கு
வாக்களித்த படிகணக்கர் திங்கள்தோறும்

கரம்படி வீதித்தமிழர் கழகத்தார்கள்
கடைப்பிடியை மிதித்தவுடன் எண்ணி வைப்பார்
பெரும்படியாய்ச் செய்ததுண்டு

—ஒரு நாள் நிகழ்ச்சி—பெரும்படியான தொண்டு செய்வோம் 3-7

என்று மணவழகன் கூறும் கூற்றில் கவிஞரின் தமிழளாவிய பொது நலம் புலப்படுகின்றது.

இவ்விருவரின் அன்பான காதல் வாழ்வினைப் பின்வரும் பகுதி சுட்டிக்காட்டும்.

அன்றிலடி நாமிருவர் பழமும் பாலும்
ஆருக்கு வேண்டுமடி! என்றன் ஆசைக்
குன்றத்திற் படர்ந்தமலர்க் கொடியே மண்ணில்
குவிந்திருக்கும் சுவையுள்ள பொருள்கள் எல்லாம்
ஒன்றொன்றும் மறுநாளே பழமை கொள்ளும்;
ஒன்றொன்றும் சிலநாளில் தெவிட்டுப்போகும்
அன்றன்று புதுமையடி, தெவிட்ட லுண்டோ?
ஆருயிரே நீகொடுக்கும் இன்பம் என்றான்!

—ஒரு நாள் நிகழ்ச்சி—அன்றன்று புதுமை 1-8

இரண்டாம் பகுதி 'விருந்தோம்பல்' ஆகும். "வந்தாரின் தேவை வழக்கம் இவை அறிய நந்தா விளக்குன்றன் நல்லறிவே" (விருந்தோம்பல்-மாமன் மாமி மகிழ்ச்சி; (16—17) என்று தங்கம் மணவழகனால் மனங் குளிரப் பாராட்டப்படுகின்றாள்.

மூன்றாம் பகுதி 'திருமணம்' ஆகும்.

காலிற் செருப்பணிந்து
கைக்குடையை மேல்விரித்து
மேலும் ஒருதடவை

மெல்லிமுகம் தான் நோக்கிச்
சென்றான் மணவழகன்
செல்லும் அழகருந்தி
நின்றாள்; திரும்பினாள்
நெஞ்சம் உருகித் தங்கம்!

—திருமணம் - 1, வேடப்பனுக்கு மீண்டும் வாய்ப்பு 15-16

இப்பகுதியால் கணவன் துன்பத்திற்காகக் கழிவிரக்கங் கொள்ளும் தங்கத்தின் காதல் நெஞ்சம் புலனாகக் காணலாம்.

தன் அருமை மகன் வேடப்பன், மாவரசு மகள் நகைமுகத்தினை நச்சியதை யுணர்ந்த நங்கை நல்லாள் தங்கம், பெருமாள் எனும் வில்லியனூர்ப் பெரியவரிடம்,

இன்றேநீர் வில்லியனூர்
ஏகுகதாத் தாதாத்தா
எங்கள் மகன் கருத்தை
எம்மிடம் சொன்னீர் அதுபோல்
திங்கள்முகத் தாள் கருத்தை
அன்னவர்பால் செப்பி
மணத்தை விரைவில்
மணமகன் வீட்டில்
பணச்செலவு நேர்ந்தாலும்
பாங்காய் நடத்த
உறுதிபெற்று வந்தால்எம்
உள்ளம் அமையும்
அறிவுடையீர் உம்மால்தான்
ஆகும்இது' என்றாள்

—திருமணம்—5, பகை நண்பாயிற்று 60-66

மணமகன் வீட்டில் திருமணம் நடைபெறுகிறது.

தன் மருமகள் பெற்ற அமிழ்துக்கு மகிழ்ச்சியூட்டி நிற்கும் தங்கத்தை நான்காம் பகுதியிற் கண்டு. இறுதிப் பகுதியான ஐந்தாம் பகுதியில் 'முதியோர் காதல்' என்ற தலைப்பில் 'மணவழகன்—தங்கம்' முதுமை வாழ்வினைக் காண்கின்றோம்.

மணவழகன் முதுமையின் தலைவாயிலை மிதித்து நின்று வாழுங்காலையில் 'தங்கத்'தைப் பற்றி எண்ணும் எண்ணம் வருமாறு :

புதுமலர் அல்ல; காய்ந்த
புறகட்டே அவள்உ டம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும்மூ தாட்டி!
மதியல்ல முகம்அ வட்கு
வறல்நிலம்! குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
"இருக்கின்றாள்" என்ப தொன்றே

—முதியோர் காதல்—இருக்கின்றாள் அது
எனக்கின்பம். 1-4

இதுபோன்றே 'தங்கம்' மணவழகன் மாட்டுக் கொண்ட காதலைப் பாரதிதாசன் பின்வருமாறு புலப் படுத்துவர் :

தொப்பென்ற ஓசை கேட்டால்
துயருறும் என்றும்; சாற்றில்
உப்பொன்று குறைந்தால் உண்ணல்
ஒழியுமே என்றும், ஒன்றை
ஒப்பெனில் ஒப்பாவிட்டால்
உடைபடும் உள்ளம் என்றும்

தப்பொன்றும் இன்றி என்றன்
தமிழனை அன்பாற் காத்தேன்

—முதியோர் காதல்—தப்பொன்றும் இன்றி என்
தமிழனைக் காத்தேன் : 1-4

இவ்வாறு குடும்ப விளக்காம் 'தங்கம்' மங்காத மனைவிளக்காக, மலைவிளக்காக நின்று சுடர்விட்டு ஒளிர்கின்றாள் என்பதனை பாவேந்தரின் பயனுறு படைப்பாம் 'குடும்பவிளக்கு' எனும் நூலில் இனிதே கண்டு மகிழலாம்.

# 13. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கண்ட இயற்கை

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூற்றாண்டு விழா ஏப்ரல் திங்கள் தொடங்கி 1991 ஏப்ரல் திங்கள் வரையில் கொண்டாடப்படவிருக்கின்றது. முப்பது நூற்றாண்டுகளாக முறையாக வளர்ந்துவரும் தமிழ் இலக்கியம் மூன்று சிறப்புக் கூறுகளைச் சிறப்பாகப் புலப்படுத்துகின்றது.

1) இறைவன், 2) இயற்கை, 3) பெண்மை.

என்று அம்முக்கூறுகளை நாம் சொல்லலாம். இறைவன், இயற்கை, பெண்மை என்ற அம் முக்கூறுகள் இறைவனுடைய படைப்பாக இலங்குகின்றது. A thing of beauty is a joy for ever என்று ஆங்கிலக் கவிஞர் கீட்ஸ் குறிப்பிட்டது போல நம்முடைய கவிஞர் ஒருவரும் அவர்களும் தோய்ந்து நிற்கின்றார். அவருடைய நூல் அதற்குச் சான்று பகர்கின்றன.

> **எனக்குக் குயிலின் பாடலும் மயிலின் ஆடலும் வண்டின் யாழும்**
> **அருவியின் முழவும் இன்னும் பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்''**

என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல 'அழகின் சிரிப்பு' எனும் அவருடைய கவிதை நூலில் பாரதிதாசன்,

"இயற்கை அனைத்தும் அழகே.அந்த அழகுக்குச் செந்தாமரை என்றும், நிலவென்றும்; கதிரென்றும் சிரித்தது. காணும் பொருள் எல்லாம் அழகைக் காணவும் கண்டவாறு தாமே சொல்லோவியம் தீட்டவும் திறம்பெறுதல் வேண்டும். தமிழர்கள் பிற மொழி, தமிழ்மொழி நூல்களில் பார்த்தபடியே எழுதும் நிலை தீரவேண்டும். அதற்கு இச்சிறுநூல் இயற்றியதன் வாயிலாக நான் இதை அறிஞர்க்கு நினைவுறுத்துகின்றேன்."

என்று குறிப்பிட்டுள்ளார்.

'Wordsworth—என்கிற ஆங்கிலக் கவிஞனுக்கு இயற்கையே எழுதுகோலாக இருந்து அவன் பாராட்டி எழுதியதாகக் (Nature Itself wrote for him)—குறிப்பிடுவர் அவ்வகையில் புரட்சிக் கவிஞர் பாவேந்தருக்கு,

**காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்**
**கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்; அந்தச்**
**சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்**
**தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்!**
**மலையிலே மேற்றிசையில் இலகு கின்ற**
**மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்**
**சாலையிலே கிளைதொறும் கிளியின் கூட்டந்**
**தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்**

என்று அழகின் சிரிப்பு எனும் நூலில் அழகே கவிதை பிறக்கக் காரணமாக அமைவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும், சிறு குழந்தை விழியினிலும் விளக்கின் சுடரினிலும் பூக்கட்டும் மங்கையின் விரல் வளைவிலும், உழவின் களிப்பைச் செல்லும் நடையிலும், பச்சைப் பசும் பட்டுடை உடுத்துதல் போன்று காட்சி தரும் நஞ்சை

லத்தினிலும் அழகுக்கு கூத்தாடுவதாகக் கவிஞர் குறிப்பிடுவர்.

அழகுப் பொருள்கள் எப்பொழுதும் அழகிய இன்பம் தரும் என்று குறிப்பதற்கு ஏற்பப் பாரதிதாசன்,

**பசையுள்ள பொருளிலெலாம் பசைய வள்காண்!**
**பழமையினாற் சாகாத இளைய வள்காண்!**
**நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!**
**நல்லழகு வசப்பட்டால் துன்ப மில்லை**

என்று இயற்கையின் இனிய பேற்றினை எடுத்து இயம்புகின்றார்.

தமிழில் வடக்கே இருந்துவரும் காற்றை 'வாடை' என்றும், தெற்கே இருந்துவரும் காற்றைத் 'தென்றல்' என்றும், மேற்கே இருந்துவரும் காற்றைக் 'கோடை' என்றும், கிழக்கே இருந்து வீசும் காற்றைக் 'கொண்டல்' என்றும் குறிப்பிடுவர். தென்றலைக் கவிஞர் வருணிக்கும் பொழுது,

**தென்னாடு பெற்ற செல்வத்**
**தென்றலே உன்இன் பத்தைத்**
**தென்னாட்டுக் கல்லால் வேறே**
**எந்நாட்டில் தெரியச் செய்தாய்?**

கடல்நீரும் நீல வானமும் கை கோக்கின்றன. இரண்டிற்குமிடையே கிடக்கும் வெள்ளம் அழகு வீணையாகும். அவ்வீணைமேல் காற்று அடித்து அவ்வீணையின் நரம்பினை அசைக்கின்றது. அப்போது வீணையை இயக்கவல்ல தேர்ந்த புலவனாக அக்காற்று தென்படுகிறது.

**கடல்நீரும் நீலவானும்**
**கைகோக்கும்! அதற்கிதற்கும்**

இடையிலே கிடக்கும் வெள்ளம்
எழில்வீண; அவ்வீணைமேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத்தின்பத்தை
வடிக்கின்ற புலவன்.

நிலவைப் பார்க்கும் கவிஞருக்குப் புதுமை ஒன்றும் தோன்றுகிறது.

முழுமைநிலா! அழகுநிலா!
முளைத்தது விண்மேலே—அது
பழமையிலே புது நினைவு
பாய்ந்தெழுந்தாற்போலே!
அழுதமுகம் சிரித்தது போல்
அல்லி விரிந்தாற்போல்—மேல்
சுழற்றி எறிந்த வெள்ளித்தட்டுத்
தொத்திக் கிடந்தாற்போல்

என்றும் வருணிக்கின்றார்.

விடியல் காட்சியைப் பாரதிதாசன் அவர்கள் ஒரு புதுமையான முறையில் வருணித்துள்ளார்.

இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை
இரவுபோர்த்த இருள் நீங்கவில்லை
ஆயினும் கேள்வியால் அகலும் மடமைபோல்
நள்ளிரவு மெதுவாய் நடந்து கொண்டி ருந்தது!
தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த
கலப்பென இருள் தன் கட்டுக் குலைந்தது

என்று காலைக் காட்சியை வருணித்து இருப்பதும், இதைப் போன்ற சஞ்சீவி பருவதத்தின் சாரலைக் குறிப்பிடுகின்ற பொழுது,

குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுக்கள் உண்டு; கனி மரங்கள் மிக்க உண்டு;
பூக்கள் மணங்கமழும்; பூக்கள்தோறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்;
வேட்டுவப் பெண்கள் விளையாடப் போவதுண்டு
காட்டு மறவர்களும் காதல்மணம் செய்வதுண்டு
நெஞ்சில் நிறுத்துங்கள்; இந்த இடத்தைத்தான்
சஞ்சீவி பர்வதத்தின் சாரல்என்று சொல்லிடுவார்

என்று அழகுற வருணித்துள்ளார்.

இயற்கை வருணனையிலும் சமுதாயச் சழக்குகளைச் சாடிவிடுவதில் புரட்சிக் கவிஞர் முன்னணியில் இருக்கிறார்.

வானத்தை வருணிக்கும்பொழுது சமுதாயத்தில் காணப்பெறுவதை எடுத்தியம்பும் புகழ் பாவேந்தர் பாடல்களில் ஒரு புதுமை நோக்கு, புதுமை நோக்கு மட்டும் புரட்சி நோக்காக அமைந்து இருப்பதை உணர்த்தும்.

"இம்மண்மீது உழைப்பவர்கள் வறியராகவும், உரிமை கேட்டால் உழைப்பவர்களை அடக்கும் ஆற்றல் பெற்ற செல்வர்களைக் கண்டு பகற் பொழுதில் கண்டுகொண்டு இருக்கும் வானம் இராப் பொழுதில் விண்மீன்களாய்க் கொப்பளித்தெழுகிறது எனும் கருத்தில்"

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம், இதைத்தன்

கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி!

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆலமரத்தை வருணிக்கும் இந்தக் கவிஞர் ஒரு நகைச் சுவைக் காட்சியை நம் கண்முன் கொண்டு வருகின்றார். ஆலமரத்தின் கிளையில் பாம்பு தொங்க அதனை விழுது என்று எண்ணிக் குரங்கு தொட்டுவிட்டுத் தவறுதலாக விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கென்று குதித்த தைப்போல் அக் குரங்கு கிளைதொறும் தாவித்தாவிக் குதித்தது. மரத்தின் மேலே சென்று கீழே உள்ள விழுதினை எல்லாம் ஒளியுடைய பாம்புகளென்று கருதி, உச்சிக்கிளைக்குச் சென்று தன் வாலையே பாம்பு என இலக்குகின்ற காட்சியைக் கவிஞர்.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று, குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதொறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப் பாம்பாய் எண்ணிஎண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.

அந்த காட்சியோடு கவிஞர் நின்றுவிடாமல் தமிழினத்தின் தலைமைப் பண்புகளில் ஒன்றாகக் கருதப்படும் 'நன்றி'— என்ற நல்ல உணர்வினை

ஆலினைக் காற்று மோதும்
அசைவேனா எனச் சிரித்துக்

கோலத்துக் கிளை குலுங்க
அடிமரக் குன்று நிற்கும்!
தாலாட்ட ஆளில்லாமல்
தவித்திட்ட கிளைப்புள் ளெல்லாம்
கால்வைத்த கிளைகள் ஆடக்
காற்றுக்கு நன்றி கூறும்

என்று சமுதாயப் பாடத்தினையும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் இயற்கையை இனிய வெற்றியுடன் வருணித்து இருப்பது எண்ணி எண்ணி மகிழத்தக்கதாகும்.

# 14. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கண்ட பெண்மை

புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பாரதியாரை அடுத்துப் பெண்மையைப் பற்றிப் புகழ்கின்றார். முதலாவதாகப் பெண்களுக்குக் கல்வி தேவை என்று குறிப்பிடுகின்றார்.

கல்வி இல்லாத பெண்கள் உள்ளங்களைக் களர் நிலம் என்றும், கல்வி உடைய பெண்களை நஞ்செய் நிலம் என்றும் கருதுவர் பாரதிதாசன்.

கல்வியில் லாத பெண்கள்
　　களர்நிலம்! அந்நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
　　புதல்வர்கள் விளைவதில்லை!

பெண்கள் தாயாக, பொறுமை நிறைந்தவளாக, நல்ல மனைவியாக, தேர்ந்த அமைச்சராக விளங்குதலை,

பெண்கள் இட்ட பிச்சைதான் ஆண்கள்
பெற்றஇன்பம் அனைத்தும்—அழகிய பெண்கள் இட்ட பிச்சைதான்

கண்ணைக் கவர்வார் எண்ணம் கவர்வார்
காதலால் இன்ப வாழ்வளித்திடும்—பெண்கள் இட்ட பிச்சைதான்

அன்னை தயை உடையார்—பணிவினில்
அடியவர் போன்றார்—மலர்ப்
பொன்னின் அழகுடையார் பொறுமையில்
பூமிக்கிணை ஆவார்

இன்பம் அளிப்பதில் தாசிகள்—அவர்
எண்ணம் அளிப்பதில் அமைச்சர்கள்—அழகிய
பெண்கள் இட்ட பிச்சைதான்

என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். பெண்ணின் அழகினைப் பாரதிதாசனார் போன்று ஒரே அடியில் வருணித்து இருப்பதை எக் கவிதையிலும் பார்க்க முடியாது.

மின்னலிடை கன்னல்மொழி இன்னும் சொன்னால்
விரியுலகில் ஒருத்தி நீ அழகின் உச்சி

என்று கூறியிருப்பதனைக் குறிப்பிடலாம். இதையே சற்று விரிவாக,

தேனைப்போல் மொழியுடையாள்; அன்றலர்ந்த
செந்தாமரை போல் முகத்தாள் கெண்டை
மீனைப்போல் விழியுடையாள் விட்டதிர்ந்த
மின்னைப்போல் நுண்ணிடையாள்! கொண்ட
வானைப்போல் உயர்வாழ்வு வாய்ந்தாள்

என்று குறிப்பிட்டுள்ளார். பெண்ணைக் கவிதையாகக் கொண்டு போற்றிவரும் பாவேந்தர் என்று குறிப்பிடலாம், குப்பன் என்னும் இளைஞன் பெண்பால் உள்ளத்தைப் பறிகொடுத்துக் காதல் வயப்பட்ட நிலையினை,

தாமரை பூத்த குளத்தினிலே முகத்
தாமரை தோன்ற முழுகிடுவாள்—அந்தக்
கோமளவல்லியைக் கண்டுவிட்டான்—குப்பன்
கொள்ளை கொடுத்தனன் உள்ளத்தினை—அவள்
தூய்மை படைத்த உடம்பினையும்—பசுந்
தோகை நிகர்த்த நடையினையும்—கண்டு

காமனைக் கொல்லும் நினைப்புடனே—குப்பன்
காத்திருந்தான் அந்தத் தோப்பினிலே

என்று வருணித்துள்ளார். ஆணும் பெண்ணும் காதலின் தலைவாசலை மிதித்து நிற்கும் காட்சியினை உளவியல் நுட்பத்தோடு பாரதிதாசனார் புலப்படுத்தும் பாங்கு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

கூடத்திலே மனப்பாடத்திலே—விழி
கூடிக்கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால்—அவள்
உண்ணத் தலைப்படு நேரத்திலே
பாடம் பிடித்து நிமிர்ந்த விழி
தன்னில் பட்டுத் தெறித்ததுமானின் விழி
ஆடை திருத்தி நின்றாள் அவள்தான்—இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்.

பெண். சமுதாயத்தில் பெறும் அழகினை

என்ன வியப்பிது? வானிலே—இருந்
திட்டதோர் மாமதி மங்கையாய்
என்னெதிரே வந்து வாய்த்ததோ?—புவிக்
கேதிது போலொரு தண்ஒளி
மின்னற்குலத்தில் விளைந்ததோ?—வான
வில்லின் குலத்திற் பிறந்ததோ?
கன்னல் தமிழ்க்கவி வாணரின்—உளக்
கற்பனையே உருப்பெற்றதோ? ஒரு
பொன்னின் உருக்கிற் பொலிந்ததோ? ஒரு
பூங்கொடியோ? மலர்க் கூட்டமோ?

என்று வருணித்துள்ளது வியப்பினை விரித்துக் காட்டுவனவாகும். காணுகின்ற பொருள் எல்லாம் பெண்ணைக் காண்பது என்ற 'நோக்கு எல்லாம் அவையே போல்' எனும் இலக்கண மரபைப் பின்பற்றியுள்ள பாவேந்தர்,

ஏட்டினில் கவிதை தன்னில்
இவளைத்தான் காணுகின்றேன்
கூட்டினிற் கிளியும் வானில்
குளிரிளம் பிறையும் என்றன்
வீட்டினில் திருவிளக்கும்
அவள்எழில் விளக்கல் அன்றிக்
காட்டவே இல்லை ஒன்றன்
கவலைக்கு மருந்து நெஞ்சே

என்று குறிப்பிட்டு இருப்பது சங்கத் தமிழ்ச் சாயலின் சார்புடைத்ததாகும். பெண்கள் உள இயலின் நுட்பத்தினை,

போகுமட்டும் பூரிப்பாள் போகவிடை பெற்றுப்பின்
ஏகுமட்டும் பின்னழகு பார்த்திருப்பாள் யான் திரும்பித்
தோகையினை மட்டாக நோக்கினால் தான் குனிந்து
சாகுமட்டும் நாமறவாப் புன்னகையைச் சாய்த்திடுவாள்

என்ற பாட்டின் அடிகளில் நயமுறக் குறிப்பிட்டுள்ளார். மேலும் கவிஞர் அவர்கள்

......நிமிர்ந்தே அன்னோன்
ஒளிமுகத்தைப் பார்த்திடுவாள்; குனிந்து கொள்வாள்
சின்னவிழி ஒளிபெருகும்! இதழ் சிரிக்கும்
திருத்தமுள்ள ஆடைதனைத் திருத்திக் கொள்வாள்

என்ற பாடல் அடியில் பெண்களின் மன நுட்பத்தினை வடித்துக் காட்டுகின்றார். குழந்தை மணத்தின் கொடுமையினை,

கூவத் தெரியாக் குயிலின் குஞ்சு
தாவாச் சிறுமான் மோவா அரும்பு

என்று குறிப்பிட்டு இரக்க உணர்வினைப் புரிகின்றாற்போல் பாடுகின்றார்.

இது போன்றே விதவையின் நிலையினை.

**கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே—இங்கு**
**வேரிற் பழுத்த பலா**

என்று குறிப்பிட்டுள்ளார்.

'நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்' என்பது கவிஞர் வாக்கு. அதற்கு ஏற்பப் பெண்கள் செயற்பாடுகளை,

**கண்ணவள் மாமியார்க்கே காப்பவள் மாமனார்க்கே**
**உண்மையில் வாழ்க்கையில் உயிராவள் கணவனுக்கே**

என்றும்,

**பொருளையும் பெரிதென் றெண்ணாள்**
**பூண் வேண்டாள் தனை மணந்தோன்**
**அருளையே உயிரென் றெண்ணும்**
**அன்பினாள்**

என்றும் குறிப்பிட்டிருப்பது நினைந்து பார்க்கத்தக்க தாகும்

பாரதிதாசனுடைய ஒரு தனிச்சிறப்பு என்று நாம் கொள்ளத்தக்கது முதியோர் காதல். மனைவியின் நினைவாகவே வாழும் கணவனை,

**கதையாகிக் கனவாய்ப்போகும்**
**நிகழ்ந்தவை; எனினும் அந்த**
**முதியோளே வாழுகின்றாள்**
**என்நெஞ்சில் மூன்று போதும்**

என்றும், கணவனை ஓயாது நினைத்துக்கொண்டிருக்கும் மனைவியின் நிலையினை.

**அறம்செய்த கையும் ஓயும்**
**மக்களை அன்பால் தூக்கிப்**

புறம்போன காலும் ஓயும்
செந்தமிழ்ப் புலவர் சொல்லின்
திறம் கேட்ட காதும் ஓயும்
செயல்கண்ட கண்ணும் ஓயும்
மறவனைச் சுமக்கும் என்றன்
மனம்மட்டும் ஓய்த லில்லை

என்று குறிப்பிடுவது பண்புடன் புலப்பாட்டு நிலைகள் என்று நாம் போற்றலாம்.

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவளுடம்பு
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்
ஏது எனக்கு இன்பம் நல்கும்
இருக்கின்றாள் என்பதொன்றே

என்ற பாட்டின் அடிகள்.

அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ழுர!

என்ற நற்றிணைப் பாடல் அடிகளை நினைவுறுத்தும்.

குடும்பப் பாங்கோடு வாழும் ஒரு குறிக்கோள் உடைய பெண்ணை அவர் படைத்த நூல்களில் சிறந்த நூலாகக் கருதப்பெறும் "குடும்ப விளக்கு" எனும் நூலில் தங்கம் என்ற பாத்திரத்தின் வழிப் புலப்படுத்தியுள்ளார்,

**கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்**
**மண்ணில் குமரர்க்கு மாமலையும் ஓர்கடுகாம்**

என்று காதலின் பேற்றினைக் கிளத்துகின்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பாவேந்தர் பாரதிதாசன் படைத்துள்ள தலைமைகள், சங்க இலக்கியத்தின் சாயலாகத் திகழ்வதனை அவருடைய இலக்கிய படைப்புகளில் விரவி நிற்கக் காணலாம். பெண்மையை ஏற்றிப் போற்றிப் பெண்மை நலத்தினைப் பாடுவதில் தனி இடம் பெற்றவராகப் பாரதிதாசன் விளங்குகின்றார். என்பது குன்றில் இட்ட விளக்காகும்.

# 15. கவிஞர் மன்னர் மன்னனின் 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்'— நூல் அறிமுகம்

தமிழிலக்கிய வரலாற்றில் சிறப்பான, நிலையான இடம் பெற்றவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். புதுச்சேரியில் பிறந்து வாழ்ந்த பாவேந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவரது மகன் மன்னர் மன்னன் பல ஆதாரங்களைக் கொண்டு 'கறுப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்ற நூலாக எழுதியுள்ளார். அவர் தாம் திரட்டிய கருத்துகளை 1. பழமைச் சோலையில் மழலைக்குயில், 2. சிறைக்குள் சென்றது செவ்வாய்க்குயில், 3. அடிமை நிலை நீக்கிய ஆசிரியக்குயில், 4. சுப்பிரமணியக் குயில் வியந்த சுப்புரத்தினக் குயில், 5. சிந்தையில் புதுமை கொண்ட செந்தமிழ்க் குயில், 6. கூடு கட்டத் தெரியாத கொள்கைக்குயில், 7. புல்லுருவிகளை விரட்டிய புதுவைக் குயில், 8. சொற்கிழி பெற்றுப் புகழ் ஈட்டிய புரட்சிக் குயில், 9 நெருப்புக் குரல் கொடுத்த கறுப்புக்குயில் என்ற ஒன்பது தலைப்புகளில் செவ்வனே நிறைவுபடத் தந்துள்ளார்.

பாவேந்தரின் வாழ்க்கையில், 54 ஆண்டுக்கால வரலாற்றைச் சொல்வதாக இந்நூல் அமைந்துள்ளது. இதுவரையில் வெளிவராத பாவேந்தரின் அரிய நல்ல கவிதைகள் பல, இந்நூலில் வெளிக்கொணரப்பட்டுள்ளன. மன்னர் மன்னன் அவர்கள் தமிழ்ப் புலமையோடும், எழுத்தாற்றல் வன்மையோடும் இந்நூலை இயற்றி

யுள்ளார். இருபது ஆண்டுகள் திரட்டிய செய்திகளையும், குறிப்புகளையும் நிழற்படங்களையும் நிரல்படத் தந்துள்ளார். இந்நூல்வழித் தெரியலாகும் பாவேந்தரின் பண்புநலன்களை இவண் காணலாம்.

## 1. இளமை வாழ்க்கை

1891ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 29ஆம் நாள் புதுவையில் கனகசபை, இலக்குமி அம்மாள் ஆகியோரின் திருமகனாகச் சுப்புரத்தினம் பிறந்தார். கனகசபை அவர்கள் செல்வ வாணிகர்; சோதிட நூலறிவு உடையவர். கனகசபையார், ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்திலும் இறங்கி அயல்நாடுகட்கு வெங்காயம், மணிலா போன்ற சரக்குகளை ஏற்றுமதி செய்து, பெரும் பொருள் திரட்டினார். ஆயின் வாணிபத்தில் பெருந் தொகை இழப்பானதால் வறுமை நிலையயடைந்தார்.

சின்னஞ்சிறிய பருவத்திலே சுப்புரத்தினம் கல்வியில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். கூரிய அறிவு படைத்த வராகவும் காணப்பட்டார். தம்மின் மூத்தவரான சுப்பராயனைவிட மிகச் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டார். அக்காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடங்களே மிகுதி. அவை அனைத்தும் தனியார் பள்ளிகள். அந்த வட்டாரத் தில் புகழ்பெற்று விளங்கிய திருப்புலிச்சாமி அய்யா என்பார் நடத்திய திண்ணைப் பள்ளிக்கூட மாணவரா னார். அய்யா அவர்கள் வைணவச் செம்மல்; தம் பள்ளி மாணவர்கட்குத் திருப்பாவை கற்பித்து மார்கழித் திங்களில் விடியலில் பஜனை நடத்தும் வழக்கம் உடையவர். புதுவையில் சிறப்பு மிகுந்த 'மாசி மகம்' திருவிழாவில் இப்பாடற்குழு ஊரெங்கும் பாடி வரும்.

திருப்புலிசாமி அய்யாவின் குழுவிற்கு மக்களின் பாராட்டுக் கிடைக்கத் தொடங்கியது. இதற்குக் காரணம் குழுவின் சட்டாம்பிள்ளை சுப்புரத்தினத்தின் கலை ஆர்வம்தான் என்பதை 'அய்யா' குறுகிய காலத்தில் கண்டுகொண்டார். கலையார்வம் மிக்க சுப்புரத்தினத்திற்கு இலக்கிய இலக்கண அறிவைப் புகட்டுவதில் தனிக்கவனமும் செலுத்தினார் அய்யா. இதற்கேற்ப, சுப்புரத்தினமும் தலைமாணாக்கராக விளங்கினார். 'ஆயுத பூசை' 'சரஸ்வதி பூசை' முதலிய விழாக் காலங்களில் நாடகங் களை நடத்திப் புகழ்பெற்றது திருப்புலிசாமி அய்யா திண்ணைப்பள்ளி. இதிற் பெரும்பங்கு சுப்புரத்தினத்திற்கு உண்டு. திண்ணைப் பள்ளியில் தமிழில்தான் பாடங்கள் நடைபெறும். ஆட்சிமொழியான பிரெஞ்சு, உயர்நிலை வகுப்பில்தான் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தத் திண்ணைப் பள்ளிகூடப் பயிற்சி சுப்புரத்தினம் என்னும் இலக்கிய மாளிகைக்கு அசைக்கமுடியாத அடிப்படைக் கல்லாக அமைந்தது. இந்த மாளிகை எழிலோடும் இணையற்ற வலிவோடும் எழும்பிவிட, உயர்நிலைப் பள்ளியில் புலவர் சி. பங்காரு பத்தர் தகுந்த வகையில் துணைபுரிந்தார்.

கல்வே கல்லூரியில் ஆசிரிய அலுவலுக்குரிய Brevet de Langue rdigene என்ற படிப்புக்கான கல்வியை தொடங் கினார். தமது பதினேழாவது வயது நிறையுமுன்பே சுப்புரத்தினம் தேர்வு எழுத நேர்ந்தது. உயர்நிலைப்பள்ளி பயிலப் புதுவை அரசின் நிதிஉதவிபெறும் தகுதி மிக்க மாணவர் சுப்புரத்தினம், தேர்வு எழுதிய நாற்பது மாணவரின் முதல்வராக மதிப்பெண் பெற்றுத் தேர்ந்தார்.

சாரம் மகாவித்துவான் பு. அ. பெரியசாமிப் பிள்ளை என்பார் வீட்டுக்குச் சென்று இலக்கியம் பயின்றார்.

பெரியசாமி அவர்கள் சுப்புரத்தினத்தின் இலக்கியப் பயிருக்கு வான்மழையாக வாய்த்தார். அவருக்குத் தம் வீட்டிலிருந்து தலைமுழுக எண்ணெய் எடுத்துக் கொண்டுபோய்க் கொடுப்பதுவழக்கம். இவ்வாறாகக் கல்வி கற்று, ஆசிரியப் பணிக்குத் தகுதி பெற்றார் கனகசுப்புரத்தினம்.

## 2. பணி

பதினெட்டு வயது நிறைவு பெறாதவர்களுக்கு அலுவல் அளிக்க அரசின் விதிமுறை இடம்தரவில்லை. இதனால் இவருக்கு அலுவல் வழங்க அரசு மறுத்தது. இதையறிந்த புள்ளப்பாவு என்பார் கல்வியதிகாரி கய்யார் என்பவரிடம் எடுத்துரைத்ததன் மூலம் 20-7-1909இல் நிரவி என்னும் சிற்றூர்ப் பள்ளியில் தமிழாசிரியப் பணி சுப்புரத்தினத்திற்கு அளிக்கப் பெற்றது.

விசுவலிங்கம் பிள்ளை என்ற முதியவர் நிகழ்த்திய திருவிளையாடற் புராண விரிவுரையில் ஏற்பட்ட தவற்றை உள்ள உறுதியுடன் சுட்டிக்காட்டினார் சுப்புரத்தினம். அரசியல் துறையினர். அலுவல் துறையினரால் அவருக்கு அடிக்கடி இடமாற்றம் தரப்படுவதுண்டு.

ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் மாணவர்களிடம் அன்புடனும் கண்டிப்பாகவும் நடந்துகொள்வார் சுப்புரத்தினம். முரட்டுத்தனமுள்ள மாணவர்களும் கவிஞரிடத்தில் அடங்கி நிற்பார்கள். மாணவர்களை முறைப்படுத்தி நடத்தும் கவிஞர் மாணவர்களின் குறைகளைக் களையவும் பள்ளி நிர்வாகத்துடன் போராடுவார்.

ஒருநாள் பகல்வேளை உணவிற்குச் சுரைக்காய் சாம்பார் பரிமாறப்பட்டது. அது கசப்பாக இருப்பதை அறிந்த கவிஞர் உடனே மாணவர்களைக் கல்வி அதிகாரி யிடம் அழைத்துச் சென்று, அவரிடம் முறையிட்டார். நிகழ்ச்சியை விவரமாகக் கேட்ட கல்வியதிகாரி, வேண்டுவன செய்யத் தம் உதவியாளருக்குக் கட்டளை பிறப்பித்துவிட்டுத் தலைவர் மிகப் பரிவோடு "சப்புரத்தினம், உங்களின் கடமை உணர்வை நான் பாராட்டுகின்றேன். வகுப்பறைக்கு வந்துவிட்டுப் போவதும் சம்பளப் பட்டியலில் கையெழுத்துப் போடுவதும் தாம் ஆசிரியர் தொழில் என்றில்லாமல் அடிப்படைத் தத்துவத்தை மறந்துவிடாமல் அதனை நன்றாகப் புரிந்துகொண்டு பொது நோக்குடன் நீங்கள் பணிபுரிவதை நான் போற்றுகிறேன். மாணவர்களின் நன்மை பேணும் நேர்மை உங்கட்குப் புகழைத் தரும்" என்று கூறிப் பாராட்டினார். இந்நிகழ்ச்சி அவரின் பணிநேர்மையையும், அஞ்சாமையையும் எடுத்துக்காட்டி அவரைச் சிறப்புமிக்க ஒரு நல்லாசிரியராகக் காட்டுகிறது.

கரும்பலகையில் மிக அழகாக எழுதுவார். நாள் தோறும் நன்மொழி எழுதுவதிலும் புதுமை இருக்கும். ஒப்புக்கு எதையாவது எழுதிவிடுவது இவருக்குப் பிடிக்காது. சொந்தமாக நல்ல கருத்தை எழுதுவார். கரும் பலகையில் பாடத்துக்கு ஏற்றபடி அழகிய ஓவியம் எழுதி மாணவர் களை ஈர்ப்பதில் இவர் வல்லவராக விளங்கினார்.

'எல்லோருக்கும் கல்வி' என்ற கொள்கைக்கிடையே பொருளாதாரமோ, மதமோ, சாதியோ குறுக்கிடலாகாது. இதனைத் தம் இலட்சியமாகக் கொண்டார். இவரது பணி விவரம் வருமாறு:

16.7.1909 திரவி அரசினர் பள்ளி; 12.1.1912 புதுவை சார்ந்த முத்திரைப்பாளையம் பள்ளி; 29.6.1914 கூனிச்சம்பட்டு; 29.3.1916 வில்லியனூர்; 7.7.1916 ஆலங்குப்பம்; 11.4.1917 திருநள்ளாறு; 27.9 1918 திருபுவனை; 11.11.1921 திருமலைராயன்பட்டினம்; 13.8.1924 புதுவை முத்தியால்பேட்டை; 17.8.1926 புதுவை மாதாகோயில் தெருப் பள்ளி; 26.11 1931 புதுவை சுயர்கூப் வீதி பள்ளி; 10.8.1934 கூனிச்சம்பட்டு; 19.9.1935 நெட்டப்பாக்கம்; 5.1.1939 புதுவை சுயர்கூப் வீதி பள்ளி; 26.7.1944 புதுவை மாதாகோவில் தெரு உயர்நிலைப் பள்ளி; 7.11.1946 பணியிலிருந்து ஓய்வு பெறுதல்.

மொத்தம் அலுவல் பார்த்த ஆண்டுகள்: 37-திங்கள் 3-நாட்கள் 20. இவ்வாறு அஞ்சாநெஞ்சம் கொண்ட தமிழாசிரியராகவும், சிறந்த நல்லாசிரியராகவும் திகழ்ந்தார் கவிஞர்.

## 3. அஞ்சாநெஞ்சம்

அச்சமில்லை அச்சமில்லை என்று அஞ்சாக்குரல் எழுப்பியவர் பாரதியார். அவர் வழிநடக்கும் பாரதிதாசன் அஞ்சாநெஞ்சம் படைத்தவராகவும், உள்ள உறுதி கொண்டவராகவும் விளங்கினார். சிறுவயதில் குறும்பு காரணமாக அவரை யாருக்கும் பிடிக்காது. அவருக்கு ஆதரவாக இருந்தது தந்தையின் நடுநிலைமைக்குக் குணம் ஒன்றுதான். குடும்பத்தில் தனக்கெதிராகச் செய்யப்படும் செயல்களைத் தந்தையிடம் கூறிவிடுவார் பாவேந்தர். சிறுவயது முதல் அஞ்சாநெஞ்சத்துடன் விளங்கினார் கவிஞர்.

முன்னர்க் குறிப்பிட்டவாறு மதிய உணவு சரியில்லாமையைக் கல்வியதிகாரியிடம் முறையிட்டு ஆவன செய்தார். அதுபோன்றே ஒருமுறை, பள்ளித் தலைமையாசிரியர் கல்வியதிகாரிக்கு அன்பளிப்புச் செய்ததாகக் கூறி, இவரது ஊதியத்தில் சிறுதொகையைப் பிடித்திருந்தார். அதைக் கல்வித்துறைத் தலைவரிடம் முறையிடுவதாகக் கூறிக் கூச்சலிட்டார் கவிஞர். உடனே முழு ஊதியமும் அளிக்கப்பட்டது.

இங்கிலாந்தின் சக்கரவர்த்தி பற்றிய பாடத்தை வகுப்பில் நடத்த மறுத்து, நீதி பெற்ற அஞ்சா நெஞ்சினர் பாரதியார். வெள்ளை அரசினரை எதிர்த்துப் பாப் புனைந்தார். வெள்ளையர் ஆட்சியை நோயாகக் கருதி அதனை ஒழித்திடப் போர்ச்சசங்கு ஊதுகின்றார் கவிஞர்.

## 4. தமிழ்ப்பற்றும் நாட்டுப்பற்றும்

சிறந்த நாட்டுப் பற்றாளராகவும், தமிழ்ப் பற்று மிக்கவராகவும் விளங்கினார் பாரதிதாசன்.

இங்கிலாந்து நாட்டின் சக்கரவர்த்தி பற்றிய பாடத்தைக் கற்பிக்க மறுத்து நாய்ப்படத்தை வரைந்து விளக்கினார் கவிஞர். அதைக்கண்ட தலைமையாசிரியர், ஏன் நாய்ப்படத்தை வரைந்தீர்கள் எனக் கேட்டதற்கு, பிறந்த நாட்டுக்கு ஒவ்வாத கருத்துகளைக் கூறுபவர்களை விட, நாயின் படத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவனே சிறந்தவன் என்று கூறினார் கவிஞர்.

இழிவைத் துடைப்பது அறிவை வளர்ப்பது-தாயகப் பற்றை-தாய்மொழிப் பற்றை ஊட்டுவது இவை யாரோ சிலரின் வேலையன்று. அது ஆசிரியரின் தலையாய கடன்; அரசின் நீங்காத பொறுப்பு; கவிஞரின் முதல் வேலை.

இந்தப் பொறுப்புணர்ச்சிகளைச் சரிவர நிறைவேற்றச் செய்வதில் புரட்சிக் கவிஞர் ஈடுபட்டார். வெற்றி பெற்றார்.

தமிழாசிரியராக வேலைபார்த்த கவிஞர் காந்தியடிகளைப் புகழ்ந்தும் கதர்த் திட்டத்தைப் போற்றியும் பாடினார்.

**தாய்நிலம் போய் மற்றவரைத்**
**தலை வணங்கலாமே? தன்**
**தலை வணங்கலாமோ......**

என்ற வீரச்சுவை பொதித்த பாடலைப் பாடினார் கவிஞர்.

தமிழ்மொழி வளர்ச்சி குறித்து என்ன செய்ய வேண்டும் என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில் அவரது ஆழ்ந்த தமிழ்ப்பற்றை விளக்குவதாக அமைந்திருக்கின்றது. பள்ளிக்கூடத்திலே எல்லாப் பாடங்களையும் தமிழிலே படிப்படியாகச் சொல்லித்தர ஏற்பாடு செய்ய வேண்டும், தமிழுக்கு ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்பது அப்பதிலாகும்.

பாரதிதாசனுக்குத் தமிழன்பு மிக அதிகம். உலகத்துக்குப் பொதுமொழி தேவை என கருதும் பாரதிதாசன், இந்தியாவிற்குப் பொதுமொழி கூடாதென்கிறார். தமிழ்நாடு மிகத் தாழ்வான நிலைமையிலிருக்கின்றதென்றும், பிறமொழிகள் இங்கு ஆதிக்கம் பெற்றால், தமிழ்நாட்டின் முன்னேற்றம் தடைப்படும் என்றும் அவர் அஞ்சுகின்றார். இதனால் மொழி வாழ்வில் இன்றியமையாப் பங்கு கொண்டுள்ளது என்ற கருத்துவெளிப்படக் காணலாம்.

தமிழிசை பரப்புத் தொண்டில் அவரது பணி குறிப்பிடத்தக்க இடம் பெறுவதாகும். பாடல்களைப் பிழையில்லாமல் அச்சிடவேண்டும் என்ற உறுதியான எண்ணம் கொண்டவர் பாரதியார். மதுரையில் வடமொழிப் பெயர்களையும் பெயர்ப்பலகைகளில் இலக்கணப் பிழையுள்ள சொற்றொடர்களையும் கண்டு கவிஞர் மனம் வெதும்பி ஒரே இரவில் 'தமிழியக்கம்' எழுதி முடித்தார். இந்த எழுச்சி மிக்க நூல் தமிழ்நாட்டில் மொழியுணர்வைத் தீயாக்கி விட்டிருந்தது.

## 5. பாரதி பற்று

பார்ப்பனரல்லாதார் பிரச்சனையில் பாரதிதாசன் கருத்துக்குப் பாரதியார் ஆதரவு அளித்ததே, பாரதியிடம் அவருக்கு மதிப்பு ஏற்பட்டதற்கு மூக்கிய காரணமெனக் கவிஞர் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

அம்மாக்கண்ணு மகனான வேணுநாயகர் திருமணப் பகல் விருந்து முடிந்து நண்பர்கள் உரையாடிக் கொண்டிருந்த போது, பொழுது போக்காகப் பாடல் ஒன்றைப் பாடினார் சுப்புரத்தினம். பாரதியாரின் 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார்' என்ற பாடலைச் சுப்புரத்தினம் பாடியது எல்லோருக்கும் இனித்தது. தமது பாடலை மிக இனிமையாகவும் சொற் பிழையின்றியும் உணர்வு குன்றாமலும் பாடிய இளைஞரைப் பற்றி விவரம் அறிந்த பாரதி, சுப்புரத்தினத்தைத் தம் வீட்டிற்கு வந்துபோகும் படி அழைத்தார். பாரதியாரின் வீட்டுக்குச் சுப்புரத்தினம் செல்லும்போது, தாம் எழுதிய பாடல்களைப் பெயர்த்து எழுதச் சொல்லுவார் பாரதியார். பாரதியார் இருக்குமிடம் சங்கப் பலகையாகவே மாறிவிடும். உரையாடலில் நேரடியாகத் தலையிடாமல் உற்றுநோக்கியிருப்பார்

சுப்புரத்தினம். பாரதி எழுதும் சிறிய கணக்குப்பிள்ளை மேசை எதிரில் எதனையோ எழுதிக்கொண்டிருந்த சுப்புரத்தினத்தின் போக்கைக் கவனித்த குயில் சிவா கிண்டலாக ஏதோ கூறினார். இதனைக் கேட்டபாரதியார், "சுப்புரத்தினம் கவி எழுதக்கூடியவன்" என்று கூற, பாவேந்தர் 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற பதினாறு அடிப்பாடலை எழுதி முடித்துப் பாடிக் காட்டினார். 18 வயதுடைய தமிழாசிரியர் சுப்புரத்தினம் பாட்டின் பொருளும், பாடிய குரலும், பண்ணும், பாரதி யாரை மகிழ்ச்சிக் கடலில் தள்ளின, நண்பர்கள் வியப்பில் துள்ளினர்.

இந்தப் பாடலைப் பாரதியார் தம் கையாலே பெயர்த்தெழுதி "ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது" என்று குறிப்பெழுதிச் 'சுதேசமித்திரன்' நாளிதழுக்கு அனுப்பிவைத்தார். வேறு எவருக்கும் பாரதியார் இப் படிப்பட்டதோர் அறிமுகத்தைச் செய்து வைக்கவில்லை என்பதோடு 1918ஆம் ஆண்டில் புதுவையை விட்டு புறப்பட்டுச் சென்றது வரையிலான பத்தாண்டுக் காலத் தில் பாரதியாரின் புது நடையைத் தமது நடையாக ஏற்றுக் கொண்டதேயன்றி, பாரதியின் நண்பனாக, அமைச்சனாக, மெய்க்காப்பாளனாகச் சுப்புரத்திதனம் மிளிர்ந்தார். இவ்வாறு பாரதியாரால் மதிக்கப்பட்டுப் பாராட்டப்பெற்ற பாவேந்தர் 1935இல் தான் வெளியிட்ட கவிதை ஏட்டிக்கு "ஸ்ரீ சுப்ரமண்ய பாரதி கவிதா மண்டலம்" என்ற பெயரையே இட்டார் என்பதால் பாரதியார்பால் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பு—பக்தி புலனாகும்.

பாரதிதாசன் எனப் புனைபெயர் சூட்டிக் கொண்டதைப் பற்றியும், பாரதியிடம் தமக்கேற்பட்ட ஈடுபாட்டிற்குரிய காரணம் குறித்தும் "குயில்" இதழுச் காக இப்படி எழுதினார் பாவேந்தர்.

"நான் பாரதிதாசன் என்று ஒரு புனைபெயரை வைத்துக் கொண்டுள்ளேன். அதற்குக் காரணம். அப்போது அவர் என்னுள்ளத்தில் முதலிடம் பெற்றிருந்ததுதான். சாதிக் கொள்கையை நன்றாக—உண்மையாக எதிர்த்தவர் பாரதியார்தாம். அவருக்கு முன் பன்னூற்றாண்டுகளுக்கு முன் அவ்வாறு சாதிக் கொள்கையை எதிர்த்தவரை நான் கண்டதில்லை. பாரதி எதிர்த்துப் பணிபுரியத் தொடங்கிய பன்னாட்களுக்குப் பின்னரே பெரியார் இயக்கம் தோன்றியது. பாரதியாரை நான் ஆதரித்ததும், பாரதிதாசன் என்று நான் புனைபெயர் வைத்துக்கொண்டதும், ஏதாவதொரு கூட்டாத்தாரிடம் நன்மையை எண்ணியன்று. சாதி ஒழிப்பு விளம்பரம் ஆதல் வேண்டும் என்பதற்காகவும், பாரதியாரைப்போல எளிய நடையில் மக்களுக்கு இன்றைக்கு வேண்டிய கருத்தை வைத்துப் பாடல் இயற்றவேண்டும் என்பதைப் புலவர்க்கு" நினைவூட்ட வேண்டும் என்பதற்காகவுமே!

என 1961 இல் பாரதிதாசன் தம் உள்ளத்தை வெளியிட்டிருக்கின்றார். மேலும் பாரதியைப் பாரதிதாசன் சிறப்புறுத்திக் காட்டியிருப்பதுபோல் எவரும் காட்டியதில்லை

இவ்வாறான உறவு பாரதியாருக்கும், பாரதிதாசனுக்கும் பல்லாண்டு காலம் நீடித்து உரம் பெற்றது.

## 6. திராவிட இயக்கப் பங்கு

இளமையில் ஆழ்ந்த கடவுள் பக்தராக விளங்கியவர் பாவேந்தர். முன்னர்க் குறிப்பிட்டபடி மாசிமகத்தன்று ஊரெங்கும் பாடற்குழுவோடு பாடிப் பெயர் பெற்றவர். மைலம் சுப்பிரமணியர்மீது பக்திப் பெருக்கால் பாமாலை புனைந்து சூடுவார். அவர் முதன்முதல் பாடிய பாட்டு சுப்பிரமணியர் துதியமுது. 1926 இல் புத்தகமாக வெளி வந்தது. பாரதியார் பாப்புனையச் சொன்னபோதும் கூட 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற இறைப் பாடலையே பாடினார்.

பல்லாண்டுகளாக மக்களின் இரத்தத்தோடு கலந்து போயுள்ள அறியாமை, அடிமைத்தனம், சாதிமதம், கடவுள் பெயரால் விளைந்துள்ள சமூகக் கேடுகள் ஆகியவற்றைக் களைந்தெறிந்து, மக்கள் வாழ்வுக்குப் புத்துலகம் சமைக்க வழிகோலின சுயமரியாதைக் கொள்கைகள். இதனால் திராவிட இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டு பாடல்கள் எழுதினார்.

இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகத்தை எழுதினார். அதைப் பாராட்டி அவருக்குப் பச்சை சால்வை அளித்தனர். பாரதிதாசனின் சீர்த் திருத்தக் கவிதைகள் உருவாகுவதற்குச் சாதிமத எதிர்ப்பும், சுயமரியாதை இயக்கமும், சூழ்நிலையும், பின்னணிகளாக அமைந்தன.

மூடத் தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடுமணக்க வரும் கற்பூரப் பெட்டகமே

என்று தாலாட்டுப் பாடலில் பாடினார் பாவேந்தர்.

புதுவைக்கு வந்த பெரும் தேசியத் தலைவர்களான கோகலே, திலகர், தாஸ், காந்தி, நேரு ஆகியவர்களை நேரில் பார்க்கும் வாய்ப்பு பாரதிதாசனுக்குக் கிடைத்தது. அரவிந்தர், வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய பாரதியார், வ.உ. சிதம்பரம்பிள்ளை முதலியவர்களிடம் பாரதிதாசன் பல ஆண்டுகள் நெருங்கிப் பழகினார். சுயமரியாதை வீரராக விளங்கும் பாரதிதாசன், 1920ஆம் ஆண்டில் சத்தியாக்கிரக இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டார்.

## 7. சமுதாய சேவை

சிறந்த ஆசிரியராகவும், நாட்டுப் பற்றாளராகவும் பகுத்தறிவுவாதியாகவும் விளங்கிய பாவேந்தர் சிறந்த தன்னலங் கருதாச் சமூகத் தொண்டராகவும் விளங்கி வந்துள்ளார்.

கல்வியென்பது அனைவருக்கும் பொதுவானது என்ற கருத்தை வலியுறுத்தி, அதைப் புதுச்சேரி அரசை ஏற்கச் செய்தார்.

மூட நம்பிக்கையில் மூழ்கி உழன்று திரிந்த மக்களுக்கு அறிவுரைகள் வழங்கி அவர்களை நல்வழிப்படுத்த முயன்றார்.

பொதுச் சொத்துகளைப் பாதுகாத்துப் பேண வேண்டும் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

புயலில் சிக்கித் தவித்த ஏழை மக்களுக்கு ஊராட்சி சார்பில் துயர் துடைப்புப் பணி உடனே நடைபெறச் செய்ய, அதன் தலைவரிடம் வற்புறுத்தி வெற்றியும் பெற்றார். மண் அடித்துவிட்ட நன்செய் நிலங்களுக்கு வரித் தள்ளுபடியும் அளிக்கப்பட வேண்டும் எனப் புதுவை

அரசியல் கட்சித் தலைவரிடம் வலியுறுத்தினார் பாவேந்தர்.

'இசையமுது' முதற்பகுதியில் வருகின்ற வண்டிக் காரனும், ஆலைத் தொழிலாளியும், குறவனும் பல்வேறு உடல் உழைப்பாளர்களும் பாவேந்தரின் உள்ளத்து ஒலிகள்! சமுதாயம் இவர்களை ஏறெடுத்தும் பார்க்காத போது இவர்கட்கும் மாந்தர் உணர்வுகள், பண்புகள் உண்டு என்று நிலைநாட்டத் துடித்த உள்ளம் பாவேந்தரு டையது. அந்தத் தூங்காத உள்ளம் செயலாற்றியதன் விளைவுதான் இன்றைய சமுதாயத்தின் வெற்றிகள்.

பிற

'இகின்பாதம்ஸ்' போன்ற புத்தகம் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு முதன்முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தமிழ்ப் புத்தகங்கள் கவிஞருடையவை தான்.

இழிவு ஒன்று காணின் அதன் சல்லிவேரையும் கிள்ளி எறிவதில் ஏற்படும் இன்னல் எதுவாயினும், கொண்ட கொள்கையில் இம்மி பிறழாமல் வாழ்வதும் அவருள் ஊறிப்போன வழக்கம்.


'பாரதிதாசன்' என்ற பெயர் இவருக்குப் பல வகை களில் நன்றாய்ப் பொருந்தும். இவர் கவிதையின் குணம் ஒரு வேகம். இவர் இலக்கணக் கவியல்ல, ஆவேசக் கவி.

கவிந்திருக்கும் ஒரு குடைகீழ் உள்ளவரில், சிலர்க்கு நிழல், சிலர்க்கு வெயிலோ?

இந்தக் கேள்விதான் 'கறுப்புக் குயிலின் நெருப்புக் கவிதை'. இனிய குரலில் தானே பாடும் குயில்?

இந்தக் குயில், [1]தமிழ்ச் சங்கத்தில்-தமிழ் இனமான உணர்களைத்தான் எழுப்பும்.

நூற்றாண்டு விழாக் காணவிருக்கும் பாவேந்தரின் 54 ஆண்டுக்கால வரலாற்று நிகழ்ச்சிகளை மன்னர் மன்னன் அவர்கள் இனிதே விளக்கியுள்ளவாறு இதுவரை கண்டோம். இந்நூல் ஆசிரியர் பாவேந்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை, படிப்போர் உள்ளம் மகிழுமாறு உருகுமாறு செம்மையாக, நாவல் நடையில் எழுதியுள்ளார். இந்நூல் பாவேந்தர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றைக் கொணர்ந்துள்ளது. இது பாவேந்தர் பற்றிய ஆய்வுக்கு உறுதுணையாக அமையும்.



## சி. பா.

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3 - 5 - 1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர் கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்ஸ். அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963ல் எம் லிட்., பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும சென்னைப் பல்கலைக்கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடைகொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர். பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார் முன்னால் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள் : புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்க நூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு.

—மா. செ,